உமா பாலகுமாரின்

# என்னை விரும்பும் ஓருயிரே!



# என்னை விரும்பும் ஓருயிரே!

## 1



கீழ்வானம் குங்குமக் கன்னமாய் சிவந்திருக்க, மலர்களை மொட்டு விரியச் செய்தபடி, மேகங்களுக்கு நடுவே உதிக்க ஆரம்பித்திருந்தான் ஆதவன்!

இரவு பெய்த மழையில் நனைந்திருந்த பூமித் தாயின் மடியில், மகிழ்வுடன் சொரிந்திருந்தன மகிழம் பூக்கள்!

மெதுவாக இமை பிரித்து, தூக்கம் கலைந்து விழிக்க ஆரம்பித்த விசாகனின் நாசியில் அந்த நறுமணம் இனிதாய் நிறைய, செவிகள் சட்டென்று கூர்மையாகின.

அடுத்த அறையிலிருந்து வந்த இரைச்சலான மேற்கத்திய சங்கீதம், அவனுடைய தங்கை சாதனா எழுந்து விட்டதை உணர்த்தியது.

இடையே மெலிதாய்... தீனமாய்... ஒலித்த சுப்ரபாதம் அவனுடைய உதடுகளில் சிறு முறுவலைப் படர விட்டது.

காலையில் பூஜை செய்வது, அவனுடைய தாய் புவனாவின் பழக்கம்!

நேர் எதிர் துருவமான இரண்டு வித சப்தஸ்வரங்களால், முழுவதுமாகத் தூக்கம் கலைந்து எழுந்தவனுக்கு, இன்று ஒன்பது மணிக்கு நேர்முகத் தேர்வு இருப்பது அப்போது தான் நினைவுக்கு வந்தது.

அவன் சீக்கிரமே கிளம்ப வேண்டும்.

'மெகானிகல் என்ஜினீயரிங்' படித்து விட்டு 'எம்.டெக்' முடித்திருந்த அவன், தொழிலில் பொறுப்பேற்று இரண்டு ஆண்டுகளாகின்றன.

தந்தை இறந்து விட்டதால், இப்போது அம்பத்தூரில் இருக்கும் காருக்கான உதிரி பாகங்களைத் தயாரிக்கிற தங்கள் தொழிற்சாலையை அவன்தான் நடத்தி வருகிறான்.

அவன் வீடு இருக்கும் முகப்பேரிலிருந்து காரில் கிளம்பிச் சென்றால், எப்படியும் அரை மணி நேரமாவது ஆகிவிடும்!

இப்போதே மணி ஏழரை என்று கடிகாரம் கூற, அவசரமாக எழுந்து குளிக்கச் சென்றான்.

பிறகு தயாராகிக் கீழே வந்தபோது சாதனாவும், தம்பி சுதாகரும் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர்.



''வாப்பா! இன்னிக்கு சீக்கிரமே கிளம்பணும்னு சொல்லி இருந்தியே... எழுப்பலாமான்னு நினைச்சேன்! அதுக்குள்ளே இவ வேற காலையிலேயே பாட்டை அலற விட்டாளா... எழுந்திரிச்சிருப்பேன்னு தான் விட்டுட்டேன்.''

இட்லி, பொங்கலைப் பரிமாறியபடி புன்னகையுடன் கூறினார் புவனா.

''ஏய்! என்ன உடை இது? ஜீன்சும், டைட்டா ஒரு டாப்சும்... நீ காலேஜுக்கு தான் போறியா? இல்லை 'மாடலிங்' போறியா?''

சாதனாவின் உடையைப் பார்த்தபடி எரிச்சலுடன் கேட்டான் விசாகன்.

'விஷுண்ணா! உங்களாட்டம் சாமியார் மாதிரி எல்லாம் என்னால 'டிரெஸ்' பண்ண முடியாது... 'பேஷன் டிசைனிங்' படிக்கிறேன்... இது கூட இல்லைன்னா எப்படி? அம்மா மாதிரி தழையத் தழைய சேலையைக் கட்டிக்கிட்டு காலேஜுக்குப் போகச் சொல்றீங்களா?'

மனதிற்குள் கேள்வி கேட்டபடி, அவனிடம் எதிர்த்துப் பேச முடியாமல், சிறு எரிச்சலுடன் விழித்த தங்கையை, வெறுப்புடன் கூர்ந்தான் அவன்.

''என்ன... ஒண்ணும் பேசாம முறைக்கிறே? மனதுக்குள் பேசிட்டிருக்கியா...! இப்போ உன்கிட்டே விவாதம் பண்ண எனக்கு நேரமில்லை! அம்மா... நீங்களாவது இவளைக் கண்டிக்கக் கூடாதா?''

சலிப்புடன் மொழிந்தபடி, அவசரமாக சாப்பிட்டு விட்டுக் கிளம்பினான்.

அவன் அங்கிருந்து அகன்றதுமே, தன் மனதில் நினைத்ததை வார்த்தைகளாக சிதற விட்டாள் அவள்.

"ஏய்... மெதுவாப் பேசுடி! விஷாக் காதிலே விழுந்திடப் போகுது... அவன் கிளம்பற நேரம் டென்ஷனாக்கி ருத்ர தாண்டவம் ஆட வைக்காதே."

தவிப்புடன் கூறிய தாயை, அலட்சியமாகப் பார்த்தாள், சாதனா.

''என்னம்மா... எதுக்கெடுத்தாலும் இந்த வீட்டிலே '144' தானா? நான் சுதந்திரமாவே இருக்க முடியாதா? சே!'' என்றபடி எழுந்து சென்றாள்.

''அண்ணன் சொல்றதில என்னம்மா தப்பு? வயசுப் பொண்ணுங்க ஒழுங்கா 'டிரெஸ்' பண்ணிக்கிட்டா தானே நல்லது! அப்புறம், அவன் இப்படி பாத்தான். இவன் இப்படி செஞ்சான்னு குற்றப் பத்திரிகை வாசிக்கறது..? முதல்லே நாம எப்படி இருக்கிறதுன்னு தெளிவான முடிவுக்கு வா! இது மாதிரி அரைகுறை உடை உனக்குத் தேவையா?'' கோபத்துடன் அலுத்துக் கொண்டார் புவனா.

சமீப காலங்களாக, அவளுடைய நடவடிக்கைகளும், போக்கும் நிறைய மாறி இருக்கின்றன.

விசாகன் கண்டித்தால், உடனே புவனா பரிந்து வருவது நினைவிற்கு வந்தது.

ஆனால், சுதாகர் அமைதியானவன்... நன்றாகப் படிக்கக் கூடியவன்.

நல்லவேளை... அவனைப் பற்றி கவலைப்பட வேண்டிய தருணங்கள் குறைவாக இருப்பது, பெரும் நிம்மதியைத் தருவதாய்!



காரைக் கிளப்பியவனுக்குள் மற்றதெல்லாம் மறந்து போக தொழிற்சாலையும், அன்று நடத்த வேண்டிய நேர்முகத் தேர்வும் மட்டுமே மனதில் மிதந்தன.

தொழிற்சாலைக்குள் கார் நுழைந்தபோது மணி எட்டு ஐம்பதைத் தொட, உள்ளே வேலைக்கு விண்ணப்பித்த சிலர் அங்கு கூடியிருந்தனர்.

அவனைக் கண்டதும் மரியாதையுடன் எழுந்து அனைவரும் வணங்க, நேர்முகத் தேர்வுக்கு தயாரானான் அவன்.



## 2

அம்பத்தூரிலிருக்கும் அந்த பெண்கள் விடுதியிலிருந்து கிளம்பிக் கொண்டிருந்தாள் சுபந்தினி.

இரண்டு மாதங்களுக்கு முன்புதான் ஒட்டப்பிடாரத்திலிருந்து தோழியுடன் சென்னைக்கு வேலை தேடி வந்திருந்தாள் அவள்.

இந்தத் தொழிற்சாலையில் வேலைக்கான விளம்பரம் வந்திருப்பதை அறிந்து, உடனே விண்ணப்பித்து இருந்தாள்.

சென்னையில் ஒரு வேலை கிடைத்தவுடன், தாயை அழைத்து வந்து தன்னுடன் வைத்துக் கொள்ள வேண்டுமென்ற வேட்கை அவளிடம் அதிகமாய்!

அவளுடைய தோழி அம்பிகாவின் மாமா ஒருவர் அம்பத்தூரில் இருந்ததால், அவரின் ஆலோசனைப் படியே இருவரும் ஊரிலிருந்து கிளம்பி வந்திருந்தனர்.

அம்பிகா, தன் மாமா சுப்ரமணியத்தின் வீட்டிலேயே தங்கிக் கொள்ள, சுபந்தினியை மட்டும் விடுதியில் சேர்த்திருந்தார் அவர்.

ஒரு 'ஆட்டோ' பிடித்து தேர்வு நடக்கும் அந்த தொழிற் சாலைக்கு அவள் சென்றபோது, அங்கு சிலர் காத்திருந்தனர்.

அவளுடைய முறை வந்ததும் உள்ளே சென்றவள், அங்கு அவ்வளவு இளமையான 'எம்.டி.'யை எதிர்பார்க்க வில்லை.

மனம் வியப்பில் ஆழ்ந்தாலும், இயல்பாகவே ''குட் மார்னிங்'' என்றாள்.

தன்னைப் பற்றிய விபரங்கள் அடங்கிய கோப்பினை அளித்தவள், அவன் அமரும்படி கூறியதும், ''நன்றி'' என்றபடி உட்கார்ந்தாள்.

விசாகன் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் அமைதி யாகவும், அழுத்தமாகவும் அவள் பதில் கூறிய விதம், அவனை மிகவும் கவர்ந்தது.

பிறகு தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் உதிரி பாகத்தைப் பற்றி அவன் விவாதித்தபோது, எந்தவிதத் தயக்கமுமில்லாமல் அவள் தன் கணிப்பைக் கூறி, கருத்துக்களைத் தொகுத்து... தான் அறிந்த விஷயங் களைக் கூறிய விதம், அவளை மேலும் உயர்த்தியது!

'இது இப்படித்தான்' என்று அடித்துப் பேசாமல், ''இது இப்படி இருக்கலாம் என்று நான் நினைக்கிறேன்'' என்று அவள் முடித்தபோது, பெரிதும் திருப்தி அடைந்தான் அவன்!



அதே நிமிர்வுடன் நேர்முகத் தேர்வு முடிந்து எழுந்த போது 'இந்த வேலைக்கு இவள் மிகவும் தகுதியானவள்' என்ற உணர்வை அவனுள் ஆழப் பதித்திருந்தாள் சுபந்தினி.

விசாகனின் மனதில், அவளைப் பற்றிய நினைவுகளே அதிகம் ஆக்கிரமித்திருந்தன.

அழகும், திறமையும், கம்பீரமும் ஒரே இடத்தில் குவிந்திருப்பதை ஒருவித ஆச்சர்யத்துடன் உணர்ந்தது மனது!

அழகாகவும், அதே நேரம் கண்களை உறுத்தா மலும் அழகிய நிறத்தில் சுடிதார் அணிந்து, விழிகள் பட்டாம் பூச்சியாய் படபடக்க, ஒரு சந்தனச் சிலை போல் ஐந்தரை அடி உயரத்திற்கு மேல், பெண்மைக்கு உதாரணமாய் இனிமையாகப் பேசி முடித்து கை குலுக்கி விடைபெற்றவளை, ஏனோ அவனால் மறக்கவே முடியவில்லை.

அவளையே தேர்வு செய்து, அதற்கான உத்தரவை தயார் செய்து அனுப்பும்படி பணித்து விட்டு மாலையில் வீடு வந்தான் விசாகன்.

ஏழு மணியாகியும் சாதனா வந்திருக்கவில்லை.

''என்னம்மா? சாதனா இன்னும் வரலையா? அவளுக்கு ரொம்பதான் செல்லம் குடுக்கறீங்க!'' சலித்தபடி 'டையை' கழற்றிவிட்டு சோபாவில் அமர்ந்தான்.

''இல்லைப்பா... இன்னிக்கு 'குரூப் ஸ்டடியாம்!' ஏதோ புராஜெக்ட்டுக்கு தயார் பண்ணணுமாம்! அதான் அவ தோழி ஊர்வசி வீட்டில் இருந்து படிக்கறா!'' பரிந்து வந்தார் அம்மா.

ஒரே பெண் என்பதால் செல்லம் அதிகம் தான்! வீட்டில் எல்லாவற்றிற்கும் ஆட்கள் இருப்பதால், அவள் எதுவுமே செய்வதில்லை... பழக்கமுமில்லை!

விசாகன் சொல்லும் போதெல்லாம் புவனா மறுத்து விடுவார்... "கல்யாணமாகிப் போற இடத்துல, எப்படியும் எல்லாம் பழகித்தானேப்பா ஆகணும்... குழந்தை தானே அவ! இங்கே ஓய்வு எடுக்கட்டுமே!" என்பார்.

தலையைக் குலுக்கிக் கொண்டு எழுந்து தன் அறைக்குள் சென்றவனுக்குள், விளக்கைச் சுற்றும் விட்டிலாய் சுபந்தினியின் நினைவுகள்!

அதே நேரம் அவளும் அதே நினைவில் இருந்தாள்.

தனக்கு அந்த வேலை கிடைக்குமா?... தன்னுடைய எதிர்கால லட்சியங்கள் நிறைவேறுமா? குழப்பமாய் யோசித்துக் கொண்டிருந்தாள்.

இந்த வேலைக்கான தேவையை உணர்ந்திருந்த மனது, உருக்கத்துடன் இறைவனைப் பிரார்த்தித்தது.

இப்போது அம்மா ஜீவராணி என்ன செய்து கொண்டிருப்பார் என்று நினைவுகளை உரசிப் பார்த்தது நெஞ்சம்!

தானும், அம்மாவும் நல்ல தோழிகளாய் பழகிக் களித்த நாட்கள் மனதிற்குள் வேகமாய், உலா வந்தன.

தாய் - மகளென்ற உறவைவிட இருவருக்குள்ளும் அன்யோன்னியமும், அனுசரணையும், புரிதலும் தான் முன்பு தோழமையுடன் நிறைந்திருந்தன.

சென்ற ஆண்டு அதில் ஒரு சிறு விரிசல் விழுந்ததென்னவோ உண்மைதான்!



ஆனாலும், அவளால் தன் தாய்க்காகப் பரிதாபப்பட மட்டுமே முடிந்தது.

ஒரு நல்ல வேலையில் சேர்ந்த பிறகு ஊரிலிருந்து அவரை சென்னைக்கு அழைத்து வந்து சந்தோஷமாக வாழ வைக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தாள்.



# 3

மறுநாளே வேலைக்கான ஆணை வந்து சேர, சுபி உடனே உற்சாகமாகி ஊருக்கு 'போன்' செய்து பேசினாள்.

"அம்மா! எனக்கு வேலை கிடைச்சிடுச்சி... இனிமே நீ அங்கே கஷ்டப்பட வேண்டாம்! என் படிப்புக்காக பட்ட கடனைக்கூட நான் மெதுவா அடைச்சிடுவேன்! ரொம்ப சந்தோஷமா இருக்கு!" மகிழ்ச்சியுடன் ஆர்ப்பரித்தாள்.

"சுபி! இதைக் கேக்கத்தான் இத்தனை நாள் நானும் தவமிருந்தேன்... ஒரு பொண்ணுக்கு படிப்பும், வேலை வாய்ப்பும் ரொம்ப அவசியம்டா! ஆனா, படிப்புக்காக கடன் பட்டேன்னு சொன்னே பாரு, அது தப்பு! யாரு... உன் அப்பா தானே செஞ்சாரு... இப்படியெல்லாம் பேசாதே சுபி!"

வருத்தமும், சந்தோஷமும் கலந்து தெரிந்தன அவர் வார்த்தைகளில்!

''அம்மா! உங்களுக்கு முதல்லே தர வேண்டிய மனைவிங்கிற அந்தஸ்தை அவரைத் தரச் சொல்லுங்க... அப்புறமா என்னை மகள்னு சொல்லிக்கலாம்... நானும் அவரை அப்பான்னு சொல்றேன்!''

வெறுப்புடன் மொழிந்து விட்டு வைத்தவளுக்குள், பழைய நினைவுகள் காட்டாறாய் பெருகின.

* * *

ஒட்டப்பிடாரத்தில் இருக்கும் அந்தப் பெரிய கிராமத்து வீடு என்றால் அவளுக்கும், ஜீவராணிக்கும் உயிர் என்றே சொல்லலாம்.

காலையில் எழும் போதே வீட்டில் மென்மையாக ஒலிக்கிற சுப்ரபாதம், சாம்பிராணி மணத்துடன் காற்றில் கலந்து மிதந்து வந்து நாசியை நிறைக்கும். சமையலின் நறுமணமும், அவள் மனதை ரம்மியமாக்கிவிடும்!

பிறகு எழுந்து சென்று தாயிடம் ஏதாவது சீண்டியபடி கிளம்பிப் பள்ளிக்கூடம் செல்வாள்.

எல்லா விஷயங்களையும், தாய் - மகள் என்று இல்லாமல் பகிர்ந்து அலசி ஆராய்ந்து விடுவார்கள்.

''அம்மா! இன்னிக்கு என் கூட படிக்கிற பையன் எனக்கு காதல் கடிதம் குடுத்தான்'' என்பாள் சாதுவாக!

''அய்யோ! அப்புறம் என்ன செஞ்சே?''

அவர் பதறும்போது, ''ம்... எங்க அம்மாவைக் கேட்டுச் சொல்றேன்னு சொல்லிட்டேன்!'' அவள் குறும்புடன் கண் சிமிட்டுவாள்.

''ஏய்! பொய்தானே சொல்றே?''



''இல்லைம்மா! நிஜமாத்தான்! என்னைப் பாத்தாலே எல்லாப் பசங்களும் பயப்படுவாங்க... இவன் புதுசா வந்திருக்கான், அதான் குடுத்திட்டான்.''

''எங்க அம்மா கிட்ட முதல்லே கேக்கணும்... அப்புறம் உங்க அம்மா கிட்டயும் நீ சம்மதம் வாங்கிடு...! அப்புறமா நாம 'லவ்' பண்ணலாம்னு சொன்னா உடனே அவன் முகம் இஞ்சி தின்ன குரங்காட்டம் மாறிடுச்சு... அப்படியே திரும்பி ஓடிட்டான்.'' விழுந்து விழுந்து சிரித்தபடி முடித்தாள்.

ஞாயிற்றுக்கிழமைகள் எல்லாமே ஒரே கொண்டாட்டமும், குதூகலமுமாகத்தான் இருக்கும்!

ஆனால் சில உண்மைகள் தெரியும் வரை, எல்லாமே மிகவும் அழகாகத்தான் இருந்தன... வாழ்க்கையையும் சேர்த்து!

சிறு வயதிலிருந்தே அவளுடைய தந்தை தணிகாசலம் அவர்களுடன் அதிக நாட்கள் தொடர்ந்து இருந்ததே இல்லை!

பாதி நாட்கள் வியாபார விஷயமாக வெளியூர் சென்று விடுவார்.

வார நாட்களில் இடையிடையே வந்து தங்குவதோடு சரி!

அவளுக்கும் இது பழக்கம் என்பதால், எதுவுமே கேட்டதில்லை.

ஆனால், அவளிடம் உயிராய் இருக்கிற தந்தை, கூடவே இருந்தால் நன்றாக இருக்குமென்ற எண்ணத்தை சிறு வயதில் ஒரு நாள் தாயிடம் மட்டுமே பகர்ந்தாள்.

''அப்பாவுக்கு நிறைய தொழில்டா! இங்கே ஒரு மரக்கடை இருக்கு! தூத்துக்குடியில் உப்பளம், மீன் பிடி தொழில் நடத்துறாங்க இல்லையா? எல்லாத்தையும் பாக்கணுமே... அதனால இங்கேயும், அங்கேயுமா இருக்காங்க'' - பொறுமையாய் விளக்கினார் ஜீவராணி!

அவளுக்கும், தணிகாசலம் என்றால் உயிர்!

அவருடைய கார் சப்தம் கேட்டாலே உடலும், உள்ளமும் இறக்கை விரித்து ஆட ஓடிச் சென்று அணைத்து வரவேற்பாள்.

அவர் தம்முடனே இல்லேயே என்ற குறையை தாயின் அன்பும், அக்கறையும் போக்கிவிடும்!

வார இறுதியில் இருவருமாகச் சேர்ந்து கோவில், சினிமா என்று சென்று வர பொழுதும் ஓடிப்போகும்!

அவளுக்குத் தான் ஏக்கமாக இருக்கும்... எல்லாரையும் போம் ஒரு நாள் கூடத் தன் தந்தை பள்ளிக்கூடம் வந்த தில்லையே என்று தோன்றும்போதே, அதை துடைப்பது போல் ஜீவராணி பள்ளிக்கூடத்தின் அனைத்து நிகழ்ச்சி களுக்கும் வந்துவிடுவார்.

இதே பழகிப்போய்விட, அவளும் அவரை எதிர்பார்ப்ப தில்லை...

நான்கு ஆண்டுகளுக்கு முன்பு மதுரையில் உள்ள என்ஜினீயரிங் கல்லூரியில் அவளை சேர்ப்பதற்காக அவர் வந்தபோது, மிகவும் மகிழ்ந்து போனாள் சுபந்தினி.

பிறகு விடுதியில் இருந்து விடுமுறைக்கு ஒட்டப் பிடாரம் வந்த நேரமெல்லாம் அவள் வாழ்க்கையில் வசந்த காலங்களாயின.



தோட்டத்திலேயே இருவரும் 'வாக்கிங்' செல்வதும், ஒருவரை ஒருவர் கேலி செய்வதும் எப்போதுமே பழக்க மான ஒன்று!

ஒரு நாள் அது போல் நடந்து கொண்டிருந்த போது தான், பக்கத்து வீட்டு இளைஞன் பசுபதி அவளை அழைத் தான்.

''சுபந்தினி! என்ன 'வாக்கிங்'கா?''

''ஊஹூம் இல்லை! கதா காலட்சேபம் பண்ணிட் டிருக்கோம்... கேக்க வர்றியா?'' தனக்கே உரிய குறும் புடன் நிறுத்தினாள், அவள்.

''என்ன கிண்டலா? ஊரிலிருந்து எப்போ வந்தே? அடுத்த வருஷம் படிப்பு முடியுதா'' ஆர்வத்துடன் விசாரித் தான், அவன்.

''ஆமாம்! நீ எப்படி இருக்கே?'' சிறு வயதிலிருந்தே பழகிய பழக்கத்தில் விசாரித்தாள்.

''ம்... நல்லா இருக்கேன்! ப்ச்! பேங்க்... வீடுன்னு உப்பு சப்பில்லாம போயிட்டிருக்கு வாழ்க்கை!''

''அப்படியா? பேசாம யாராவது நாலு பேரை போட்டுத் தள்ளிடேன்... ரொம்ப காரசாரமா மாறிடும்.''

சிரிக்காமலே அவள் கூற ''உனக்கு எல்லாம் கேலிதான்! பாருங்க மாமி... இவளை!'' சலுகையாகக் கூறினான் அவன்.

''சுபி! சும்மா இருடா... அவனை ஏன் வம்புக்கு இழுக்கிறே?''

''அம்மா! இவனுக்காக வக்காலத்து வாங்காதீங்க! சில நேரம் பார்வையாலேயே துகிலுரிச்சி வழியறான்'' குறும் புடன் அவள் கூற விதிர்த்துப் போனான் அவன்.

ஜீவராணி தவறாக எண்ணி விடுவாரோ என்ற பதற்றத்தில், ''எப்படி மாமி இவளை சமாளிக்கறீங்க? அவளுக்கு உங்க கிட்டே பயமே இல்லையா?'' - சட்டென்று கேட்டான்.

''ஏன் பயப்படணும்? அவ என் பொண்ணுன்னாலும் எல்லா விஷயத்துலயும் அவ என்னை விட ரொம்ப புத்திசாலி! எது தப்பு, எது சரின்னு சொல்லித் தந்திருக்கேன்... கருத்து சுதந்திரமும் குடுத்திருக்கேன்!''

''.........''

''அதனாலேயே அவ தப்பு பண்ணமாட்டா... தன்னோட எல்லை எதுன்னு புரிஞ்சி நடந்துப்பா!'' பெருமையுடன் முடித்தார் அவர்.

''அப்போ அவளை மிரட்டவே மாட்டீங்களா மாமி?''

அவன் வியப்புடன் வினவ, ''ஏம்பா மிரட்டணும்? இது அவ வீடு! நம்ம அம்மா - அப்பாவுக்கு நல்ல பெயர் வாங்கித் தரணும்னு அவளுக்கு நல்லாத் தெரியும்!

அதே மாதிரி என் மகளுக்கு அற்புதமான ஒரு வாழ்க்கையை அமைச்சுத் தரணுங்கிறது என்னோட கொள்கை! இதுவரைக்கும் அவ எதையுமே என்கிட்டே மறைச்சதில்லை! நானும் அவளை நம்பறேன்... அவ்வளவுதான்!'' மன நிறைவுடன் கூறினார்.

''ம்... எங்க அப்பாவும், பாட்டியும் என்னை மிரட்டிட்டே தான் இருப்பாங்க... உங்க வீட்டில நீங்க உங்க பொண்ணுக்கு குடுத்திருக்கற சுதந்திரத்துல நூத்திலே ஒரு பங்கு கூட எனக்குக் கிடையாது'' பெருமூச்சுவிட்டபடி வருந்தினான் அவன்!

''சரி பசுபதி! இப்படியே பேசிட்டிருந்தா அப்புறம் 'வாக்கிங்' அவ்ளோதான்!'' என்றபடி நடக்க ஆரம்பித்தாள் சுபி.



இரவு பெய்த மழையில் நனைந்து காய ஆரம்பித்திருந்த பூமியில், காற்றின் தாக்குதலில் உதிர்ந்து கிடந்த பவளமல்லியும், பன்னீர்ப் பூக்களும் நாசியை நிறைத்து சுகமாய் இனிமை சேர்த்தன.

அடர்ந்த மரங்களின் நடுவே நடப்பது, இதமான அனுபவமாய்!

தனக்குள் யோசித்தபடி நடந்த தாயை தொந்தரவு செய்ய மனமின்றி வேகமாய் முன்னேறினாள் சுபந்தினி.

மெதுவாக நிமிர்ந்து அவளைப் பார்த்த ஜீவாவுக்குள் பெருமையும், நெகிழ்வும் ஊற்றாய் பெருகின.

குறும்பும், துள்ளலும் அவளுடன் உடன் பிறந்தவை!

தான் இருக்கும் சுற்றுப்புறத்தை உயிர்ப்புடனும் தன்னையும் பெரும் உற்சாகத்துடனும், தன்னம்பிக்கையுடனும் வைத்திருக்கும் வல்லமை படைத்தவள் அவள் என்பது புரிவதாய்!

தனக்குப் பிறகு, அவளுக்கு ஒரு இனிமையான வாழ்க்கையை வரமாய் அமைத்துத்தர ஆசை வர, உடனே அதற்கான பிரார்த்தனையை செய்தார் அவர்.

# 4



ஒரு நாள்... எப்போதும் போல் பசுபதி அவளிடம் சுற்றுச் சுவரில் சாய்ந்தபடி பேசிக் கொண்டிருந்தான்.

''சினிமா ஏதும் பாத்தியா சுபி?'' ஆவலுடன் விசாரித்தான் அவன்.

''ம்... வர வர சில சினிமாவில இருக்கற அபத்தங்களாலே படம் பாக்கற ஆசையே போயிடும் போலிருக்கு!''

சலித்துக் கொண்டவளையே குறுகுறுப்புடன் பார்த்திருந்தபோது, தொடர்ந்தாள் அவள்.

''இப்போ சமீபத்துல பாத்தா, வன்முறை இல்லாத திரைப்படங்களே இல்லை! கதாநாயகின்னா 'டூயட்'டுக்கும், கவர்ச்சிக்கும் மட்டும்தான் என்கிற நிலை மாறணும்!

தமிழ்ப் பொம்பளைன்னா இப்படித்தான் ஆண்கள் சொல்றதுக்கு எல்லாம் தலையாட்டிட்டு தன் சுயத்தை தொலைச்சி அவளுக்குன்னு ஒரு தனி முகம் காட்டாம பொம்மையா இருக்கப் பழக்கப்படுத்தறாங்க!

''ஒரு ஆணுக்குக் கொடுக்கப்படுற எந்த அங்கீகாரமும், பெண்ணுக்கு இந்தத் துறையிலயும் இல்லை! ஆனா அதிலயும் பல படங்கள் விதிவிலக்கா வந்திருக்கறது உண்மைதான்! ஆனா அதெல்லாம் வியாபார ரீதியில் வெற்றி பெறுதான்னு தெரியலை!

''தன்னுடைய அடிப்படை உரிமைக்கும், நியாயமான காரணத்துக்கும் கூட எதிர்த்துப் போராட முடியாம, கதாநாயகனுக்கு அடிமையா இருக்கிற மாதிரி சில கதாநாயகிகளோட வேடம் இருக்கும்! இயல்பான - எதார்த்தமான உணர்வுகளுக்கு சில படங்கள்லே சமாதிதான் கட்டிடுறாங்க...''



- அவள் முடித்தபோது, அவன் வியப்புடன் பலமாகக் கைதட்டினான்.

''சரி போதும்... வாயாடி.... வா... நடக்கலாம்'' தோளைத் தட்டி அழைத்தார் ஜீவராணி!

மறுகணமே, பக்கத்து வீட்டு பாட்டி சொர்ணத்தம்மாவின் குரல் கர்ண கடூரமாய் வந்தது.

''இவ்வளவு பேசுறியே! உங்கம்மா தாலியே இல்லாம, கல்யாணமும் செஞ்சுக்காம, இத்தனை காலமா ஏன் என்னன்னு எதிர்த்துக் கேள்வி கேக்காம ஒருத்தருக்கு துணையா இருக்காளே... அதைப்பத்தி எதுவுமே கேக்க மாட்டியா?''

அந்த வார்த்தைகள்... அவளுக்குள் இருந்த தன்மானத்தையும், சுயகவுரவத்தையும் சுக்கு நூறாய்ச் சிதறச் செய்தன.

ஒரே நொடியில் உலகம் சுழல்வது நின்று - மூச்சு முட்டியது!

நம்ப முடியாத தவிப்புடன் திரும்பி தாயை நோக்கியபோது, அவர் தலைகுனிந்து வேகமாய் உள்ளே செல்வது தெரிந்தது.

''போ! போய் உன் குடும்பத்துல இருக்கிற ஓட்டையை முதல்லே சரி பண்ணு!''

எகத்தாளமாக அவர் கூற - பாட்டியைப் பலவந்தமாக இழுத்துக் கொண்டு வெளிறிய முகத்துடன் உள்ளே சென்றான் பசுபதி.

தங்களின் பொழுது போக்கிற்காக பிறர் வாழ்க்கையை எள்ளி நகையாடி... மற்றவரை இழிவு படுத்தும் சமூகத்தின் முன்பு நிலை குலைந்து நின்றாள் சுபந்தினி.

எதையுமே நம்ப முடியவில்லை... தன் தாயா இப்படி? அவர் கூறியது உண்மையா? மனம் குமுறியது.

அவள் உள்ளே வந்தபோது, ஜீவராணி பதறி அழுது கொண்டிருந்தார்.

அவர் பயப்படுகிறார்... குமுறுகிறார் என்பது புரிந்ததுமே இது உண்மைதான் என்பதும் முகத்தில் அறைவதாய்!

நேராக அவரிடம் சென்று நின்றாள்... ''அம்மா! இது உண்மையா?'' உடைந்த குரலுடன் கேட்டாள்.

அவரால் பதில் கூற இயலவில்லை... அழ மட்டுமே முடிந்தது!

அந்தப் பாட்டியின் பேச்சில் கூசிக் குறுகியிருந்த மனது வாய்மூடி மவுனியாய் அமர்ந்திருந்த தாயின் செய்கையால் ஆவேசமானது.

''ஏம்மா! இத்தனை நாள் என்கிட்ட ஏன் இதையெல்லாம் மறைச்சீங்க?'' கத்தினாள்.

அவர் எந்த பதிலுமே கூறவில்லை... சிறிது நேரம் கழித்து தானாகவே புலம்ப ஆரம்பித்தார்.

''எந்த விஷயம் உனக்கு தெரியக்கூடாதுன்னு இருந்தேனோ, இது இப்ப தெரிஞ்சிடுச்சே... கடவுளே... நான் என்ன பண்ணுவேன்?'' என்று அரற்றியவருக்குள் தன்னுடைய ரிஷிமூலமே நிறைந்திருந்தது.

''சே! உங்களைப் பத்தி... நம்ம குடும்பத்தைப் பத்தி... எவ்வளவு உயர்வா, கர்வமா நினைச்சிட்டிருந்தேன்! ஒரே நாளிலே எல்லாத்தையும் தரை மட்டமாக்கிட்டீங்களே! உங்களை எனக்குப் பிடிக்கலை'' வார்த்தைகள் அவர் முகத்தில் திராவகத்தை வீசின.



ஆனால், எந்த உணர்ச்சியுமின்றி விட்டத்தை வெறித்தபடித் தன் கதையை அவர் நினைவு கூற ஆரம்பித்தார்.

நினைவுச் சரங்கள் அறுபட, சப்தமே இல்லாததால் அவர் திரும்பிய போது சுபி அங்கு இல்லை! தன் அறைக்குள் சென்றிருந்தாள்.

சுபி வேகமாக எழுந்து தன் அறைக்குள் சென்று கதவை மூடிப் படுக்கையில் விழுந்தபோது அருவருப்பும் வேதனையுமாக நொந்த மனம் வெளி உலகைப் பார்க்க கூசியது.



# 5

வெகு நேரம் கழித்து மெதுவாகக் கதவு திறந்து உள்ளே வந்த தாயைப் பார்க்கப் பிடிக்காமல், மவுனப் பிடிவாதத்துடன் முகம் திருப்பி தனக்குள்ளேயே புழுங்கி புழுவாய் சுருண்டிருந்தாள் அவள்.

ஒரு ஆண் அயோக்கியனாக இருந்தால், அவன் செய்த தவறுக்கு இந்த உலகம் அவனுடைய இணையான பெண்ணை மட்டுமே கேவலப்படுத்துவதை, சுபியால் புரிந்து கொள்ள முடிந்தது.

இந்தச் சமூகத்தில் ஆண் மகனுடைய தவறுகள் ஏன் மன்னிக்கப்படுகின்றன? ஒரு தவறுக்குக் காரணம் அவனாகவே இருந்தாலும், எல்லாவற்றிற்கும் அந்தப் பெண்ணையே முழுக் காரணமாக்கி, பழியை அவள் மேல் போட்டு சமுதாயத்தின் விரல்கள் குற்றவாளியென அவள் முன்பே ஏன் நீள்கின்றன?

இடைவிடாத குழப்பக் கேள்விகளும், உறுத்தலுமாய் அவள் உறங்கிவிட ஒரு முடிவுடன் முதன் முதலாக தணிகாசலத்தின் 'செல்'லுக்கு தொடர்பு கொண்டார் ஜீவராணி.

உடனே பதற்றத்துடன் கிளம்பி வந்தவரைப் பார்க்கவும், அவர் கூறுவதைக் கேட்கவும், அவள் பிடிவாதமாக மறுத்து விட்டாள்.

இத்தனை ஆண்டு அவருடைய பணத்தில் படித்ததே தனக்குக் கேவலமென்று உணர்ந்தாள்.

உடனே வங்கியில் கடன் கேட்டு விண்ணப்பித்து அதிலேயே கடைசி ஆண்டு படிப்பை முடித்தாள்.

தன்னை 'அப்பா... அப்பா' என்று சுற்றி வந்த பெண் ஒரேடியாய் புறக்கணித்த அதிர்ச்சியில் பெரிதும் ஒடுங்கிப் போனார் தணிகாசலம்!

அன்றிலிருந்து இன்று வரை அவள் அவரை நிமிர்ந்தும் பார்த்ததுமில்லை... பேசுவதுமில்லை!

வீட்டிற்கு அவர் வந்தாலே உடனே கிளம்பி அருகில் இருக்கும் கோவிலுக்குச் சென்று விடுவாள்.

அவருடைய கார் கிளம்பிப் போன பிறகுதான் திரும்பி வருவார்.

அவளுக்கும் ஜீவராணிக்கும் இடையே இருந்த அன்யோன்னியம் தொலைந்து போயிருந்தாலும், ஏனோ தாயின் மேல் பெரும் பரிதாபமே வந்தது!



தனக்கும், தன் தாய்க்கும் - ஏன் உறவுகளின் அன்பும், அனுசரணையும் எப்போதுமே இருந்ததில்லை என்ற கேள்விக்கு இப்போது தான் விடை தெரிந்தது.

வாழ்க்கை இதுவரை தனக்கு மலர்ப் பாதையாகவே இருந்ததும், இனிதான் கரடு முரடான முட் பாதையாகப் போவதும் புரிந்தது.

இந்த முறை விடுமுறைக்கு வந்த போதுதான், இனி அவளால் அந்த வீட்டில் இயல்பாக இருக்க முடியாது என்பது புரிந்து போயிற்று.

தாயைப் பார்த்தாலே ஒரு விதப் பரிதாபமும், ஒதுக்கமும் வர - தணிகாசலத்தைக் கண்டாலே வெறுப்பும், குரோதமும் பொங்கின.

அதனால் மறு வாரமே தேர்வு முடிவு வருவதற்கு முன்பே சென்னை கிளம்பி விட்டாள் அவள்.

அதிலும், தணிகாசலத்தின் உதவியை அவள் ஏற்கவேயில்லை!

விடுமுறைக்கு சென்னைக்குக் கிளம்பிய அம்பிகாவின் குடும்பத்தினருடன் அவளும் சென்று, உடனே பெண்கள் விடுதியில் சேர்ந்து விட்டாள்.

அம்பிகாவிற்கு மட்டும் எல்லா விபரமும் தெரியும் என்பதால், அவள் தான் சுபிக்கு ஆதரவாக இருக்கிறாள்.

வானில் சுற்றிய பருந்தாய் வட்டமிட்ட நினைவுகள், மெதுவாகத் தரை இறங்கித் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டன.

வாழ்க்கை தான் எத்தனை முரண்பாடுகள் நிறைந்ததாய் இருக்கிறது... ஒரு நிமிடத்தில்... மலையில் இருந்

தவர்களை தலை குப்புறத் தள்ளி பள்ளத்திற்கு அனுப்பி விடும் இயல்புடையதாய்!

ஒரு அருமையான சொர்க்கத்தில் தாயின் கதகதப்புச் சிறகுகளுக்குள் தந்தையின் பாசப் பிணைப்பிற்குள் ஒளிந்திருந்தவள், இப்போது தனிமை மட்டுமே துணையாக நிற்கிறாள்.

முன்பிருந்த துள்ளலும், உற்சாகமும் அவளிடமிருந்து விடைபெற்றுச் சென்றிருக்க இப்போதெல்லாம் பெரும் யோசனையும், இறுக்கமுமே அவளை ஆக்கிரமித்து இருந்தன.

தன்னைச் சுற்றி ஒரு துன்பச் சிறையை வேலியாய் எழுப்பி - அதற்குள் யாரையும் புகவிடாமல் தனிமைத் தவமிருக்கிறாள்.

உள்ளே... அழுது வெளியே முகம் மலர்த்தி சிரிக்கும் வித்தையை அவள் அறியவில்லை.

அதனாலேயே தாயைப் பற்றிய ரகசியம் அவளை தலைகீழாகப் புரட்டிப் போட்டிருக்கிறது. தனக்குள்ளேயே இறுகச் செய்திருக்கிறது.



## 6

மறு வாரமே, சுபந்தினி வேலையில் சேர்ந்து விட்டாள்.



அந்தத் தொழிற்சாலையும், அதன் செயல்பாடுகளும் இனிதாய் மனதில் பதிந்து விட இயல்பாக அதனுடன் ஒன்றிப் போனாள்.

முதல் நாளன்று, விசாகனே அவளை நேரடியாக உற்பத்தி நடக்கும் இடத்திற்கு அழைத்துச் சென்று எல்லோருக்கும் அறிமுகப்படுத்தினான்.

உற்பத்தி மேலாளருக்கு உதவியாக அவளை நியமித்திருப்பதால், மேனேஜர் செல்வத்திடம் ஒப்படைத்தான்.

பிறகு வந்த நாட்களில் அவளுக்கு இந்த வேலை மிகவும் பிடித்துவிட, தொழிற்சாலையை மேற்பார்வையிடுதலில் செல்வத்திற்கு இணையாகத் தேறி விட்டாள்.

தினமும் அவளுடைய அறிக்கைகளை பரிசீலனை செய்ததிலும், வேலைத்திறமையாலும் விசாகனுடைய மதிப்பில் தான் உயர்ந்து கொண்டே செல்வதை அவள் அறியவில்லை.

தன்னை அறியாமலே அவளைக் கண்காணிக்க ஆரம்பித்தவன், அதையே பழக்கமாகி விட்டான்.

அவளுடைய நேர்மையிலும், தேனியைப் போல் சுறுசுறுப்பாய் சுற்றித் திரிந்த கடும் உழைப்பிலும் பெரிதும் ஈர்க்கப்பட்டான்.

எல்லாவற்றையும் புதிதாய் அறிந்து கொள்கிற ஆர்வமும், தன் கவலைகளை மறக்க வேலையில் மூழ்கிவிடும் தன்மையும் அவளை வெகுவாய் தனித்துக் காட்டி உயர்த்தின.

ஒருநாள் தொழிலாளர் பிரச்சினை ஒன்று வெடித்தது.

அன்று பார்த்து செல்வம் விடுமுறை எடுத்து விட, அவளே முன் நின்று தொழிலாளர்களின் குறைகளைக் கேட்டறிந்து சமாதானம் பேசி, நிர்வாகத்தின் பார்வைக்கு அதைக் கொண்டு சென்றாள்.

சிறிய விவாதத்திற்கு பிறகு விஷாக்கும் அதற்கு சம்மதிக்க விஷயம் முடிந்தது.

தொழிலாளர்கள் மிகவும் மகிழ்ந்து போய் அவளைப் பாராட்டினர்.

அன்று மாலையில் அவளைத் தனியே அழைத்தான் விஷாக்!

அறை உள்ளே நுழைந்ததுமே அமரும்படி பணித்தான். ''வெல்டன் மிஸ் சுபந்தினி! இந்தப் பிரச்சினையை நீங்க கையாண்ட விதம் ரொம்ப அபாரமா இருந்தது! இது மாதிரி பிரச்சினைகளை ஆரம்பத்திலேயே பேசி முடிக்கிறது தான் நல்லது!'' சிறு முறுவலுடன் முடித்தான்.

''நன்றி சார்! செல்வம் சார் வராததாலே கொஞ்சம் பயமா இருந்தது! ஆனா, அவங்களுக்குப் புரிய வச்சப்புறம் தான் உங்ககிட்டே பேசினேன்!

''செல்வம் சார் இருந்திருந்தா இதை விட இன்னும் நல்லா பண்ணி இருப்பாரோன்னு தோணுது... அவர் ரொம்ப நாளா இந்தத் துறையில் இருக்கிற திறமைசாலி... அனுபவஸ்தர் இல்லையா?'' - மெல்லிய குரலில் நிறுத்தினாள்.

''அப்படி இல்லை! அவர் இருந்தாலும் இந்த முடிவைத்தான் எடுத்திருப்பார்...! ஆமாம்... உங்க அப்பா - அம்மா, குடும்பம் எல்லாரும் எங்கே இருக்காங்க!



பெண்கள் விடுதி முகவரிதான் பாத்தேன்!'' மெதுவாக விசாரித்தான்.

சட்டென்று ஒரு வித இறுக்கமும், ஒதுக்கமும் வந்தன. அவளிடம்!

''அவங்க... வெளியூரிலே இருக்காங்க சார்! நான் மட்டும் வேலைக்காக இங்கே வந்து தங்கியிருக்கேன்!'' - கூறிவிட்டு, தன்னைப் பற்றிச் சொல்ல வேறெதுவும் இல்லை என்பது போல் சட்டென்று எழுந்து விட்டாள்.

''ஓகே மிஸ் சுபந்தினி! நீங்க கிளம்புங்க...'' தோளைக் குலுக்கியபடி எழுந்து விடை கொடுத்தான் அவன்.

திடீரென்று மூச்சுவிட முடியாதபடி ஏதோ ஒன்று நெஞ்சை அடைக்க, வேகமாக வெளியே வந்தாள் அவள்.

'தணிகாசலத்தைப் பற்றி யாராவது கேட்டாலே தவிப்பும், வெறுப்புமாய் இப்போதெல்லாம் மூச்சு முட்டுவது வாடிக்கையாய்!'

நேரே விடுதிக்குப் போக மனமின்றி வைஷ்ணவி கோவிலுக்குச் சென்றபோது மனம் பெரிதும் அமைதியடைய ஆரம்பித்தது.

வெளியிலிருந்த தோட்டத்தில் அமர்ந்திருந்தபோது, தான் வெகுவாய் மாறி இருப்பது புரிவதாய்!

முன்பு துறுதுறுக்கும் பட்டாம் பூச்சியாய், துள்ளும் மானாய் வலம் வந்தவள் - இப்போது பட்டுப் புழுவாய் குறுகி தன்னைச் சுற்றி ஒரு கூட்டைக் கட்டி வாழ்ந்து வருகிறாள்.

ஜீவராணியைப் பற்றி எண்ணும்போதே - அவருடைய கம்பீரம், கவுரவம், மதிப்பு எல்லாமே அடையாளமின்றித் தொலைந்து போன ஒரு உணர்வு!

'அம்மா! உன்னால் எப்படி இவ்வளவு கோழையாக வாழ முடிந்தது?' - மனம் மறுகியது.

கோவிலிலிருந்து மெலிதாய் ஒலித்த லலிதா சகஸ்ரநாமம் மனதை நிறைக்க, உடல் சிலிர்த்தது.

தன்னுடைய முகத்தையே தொலைத்து நிற்கும் அவலம், தற்காலிகமாக மறந்து போனது.

* * *

அன்று விசாகன் வீட்டிற்குச் சென்றபோது, மிகுந்த உற்சாகத்தில் இருந்தான்.

முகம் கழுவி வந்ததுமே சிற்றுண்டியை நீட்டிய தாயிடம், பெருமையுடன் அன்று நடந்ததைக் கூறி சுபந்தினியைப் புகழ்ந்து பேசினான்!

''அந்தப் பொண்ணை நீங்க பாக்கணும்மா! இந்தச் சின்ன வயசுல அவ்வளவு திறமை, தெளிவு, தன்னம்பிக்கை எல்லாம் நிறைஞ்சவ அவ!''

அவன் கூறிக் கொண்டே செல்ல - பலமுறை அவன் தொழிற்சாலையைப் பற்றிப் பேசி இருந்தாலும், ஒரு பெண்ணைப் பற்றி பாராட்டுவது இதுவே முதல் முறை என்பதால், அவருக்குள்ளும் சிறு ஆர்வம்!

சாதனாவும், சுதாகரும் கூட அவனையே வியப்புடன் கவனித்துக் கொண்டிருந்தனர்.

ஆனால் கூடிய சீக்கிரமே, செல்வத்தின் கவனக் குறைவால் நிகழ்ந்த ஒரு தவறுக்கு இருவருமே சேர்ந்து பொறுப்பேற்கும் நாளும் வந்தது.

அன்று செல்வத்தையும், அவளையும் அழைத்து அவன் எச்சரிக்க செல்வம் கோபத்துடன் வெளியேறி விட்டார்.



உடனே சுள்ளென்று கோபம் வந்தது அவனுக்கு!

''என்ன? உங்க பங்குக்கு நீங்க என்ன செய்யறதா உத்தேசம்? அவர் மாதிரியே நீங்களும் பாதிப் பேச்சிலே, மதிப்பு குடுக்காம எழுந்து போயிருக்கலாமே?''

''........''

''உங்க ரெண்டு பேரோட கவனக் குறைவாலே, பெரிய நட்டம் வர்ற மாதிரி இருந்து தவிர்க்கப்பட்டிருக்கு! அதாவது புரியுதா?'' எரிச்சலுடன் கேட்டான்.

சுபந்தினி தவறுக்கு வருந்தி, உடனே அவனிடம் மன்னிப்பு கோரினாள்.

''சாரி சார்! எனக்குப் புரியுது! நாம, நம்ம வாழ்க்கையில உயரணும்னா, மத்தவங்க நம்ம குறைகளை - தவறுகளை விமர்சிக்கும்போது கோபப்படாம அதை திருத்திக்கிற குணம் ஒவ்வொருத்தருக்கும் வேணும்!

''நம்மை பலவீனமாக்குற எதுவுமே நமக்கு நல்லதில்லை என்பது என்னோட கருத்து சார்... அது அதிகப்படியான கோபமா இருந்தாக்கூட!'' அழுத்தமான குரலில் தெளிவாக முடித்தாள்.

பெரும் பிரமிப்பும், மெச்சுதலும் அவன் விழிகளில் படர்ந்தன.

''நல்லது சுபந்தினி! நீங்க கிளம்புங்க... இனிமே இப்படி தவறு நேராம கவனமா இருங்க!'' சிறு முறுவலுடன் எழுந்து கைகுலுக்கி விடை கொடுத்தான்.

ஆனால், அவள் அங்கிருந்து சென்று வெகு நேரமாகியும், நெஞ்சிற்குள் நீங்காமல் நிறைந்திருந்தாள்.



# 7

அன்றிரவு உறங்காதிருந்த தருணங்களில், அவளைப் பற்றிய எண்ணங்களே மனதில் முகிழ்ந்தன.

அவளுடைய நேர்ப்பார்வைகள், தெளிவான பதில்கள், புத்திசாலித்தனமான அணுகுமுறைகள், யாரிடமும் வலியப் பழகாமல் ஒரு நிமிர்வுடன் ஒதுங்கி இருக்கும் கம்பீரம்...

வேலை நேரத்திற்குப் பிறகு அதிக வேலை, வீண் பேச்சு, தேவையில்லாத நெருக்கம், எல்லாவற்றையும் தவிர்க்கும் குணம்... அனைத்துமே ரம்மியமாக மனதில் பரவி பிரமாண்டமாய் விசுவரூபம் எடுத்து நின்றன.

தன் இதயத்தை அவளிடம் தொலைத்து விட்டு, தான் தவித்து நிற்பதும் புரிவதாய்!

எந்தப் பெண்ணும் இதுவரை வசீகரிக்காத, கவர முடியாத தன் உள்ளத்தை இந்த மூன்றே மாதங்களில் அவள் கவர்ந்து விட்டதும் உறைத்தது.

பூர்வஜென்ம பந்தமாய்... நீண்ட நாட்கள் தொடரும் சொந்தமாய்... அவளுடன் இணைய வேட்கை வந்தது.

தனக்குள் அழுத்தமான வேராய்ப் படர்ந்தவளை... சப்தங்களற்ற மவுனமான ஆழ்மன வெளியில் கவிதை



யாய் பரவியவளை... இதயக் கருவறையில் சுமக்க ஆரம்பித்தான் அவன்.

இப்போதெல்லாம் உதடுகள் பேசினாலும், விரித்து உரையாடும் அவள் விழிகளுக்குள் நிரந்தரமான பிம்பமாகப் பதிந்து - இதயத்திற்குள் நுழையும் ஏக்கமும், தாபமும் பரவின.

பிறகு வந்த நாட்களில், அவள் மீது தீராக்காதல் பெருக ஒரு நாள் தாங்க முடியாமல் தன் மனதைத் திறந்து அவளிடம் பேச முடிவெடுத்தான்.

அன்று மாலையில் - ''வேலை முடிந்ததும் என்னை வந்து பார்த்து விட்டு வீட்டிற்குக் கிளம்பிச் செல்'' எனக் கூறியிருந்தான்.

மனமோ அவளுடைய காலடி ஓசைக்காக இனிமையாய் தவமிருந்தது.

சரியாக ஆறு மணிக்கு, ''மே ஐ கமின் சார்?'' - அவளுடைய குரல் குயிலாய்க் கூவியது.

''எஸ்... கம்மின்'' அழைக்கும்போதே அவன் குரல் வித்தியாசமாக இருந்தது.

அவளை அமரும்படிக் கூறியவனுக்குள், தன் காதலை எப்படி அவளிடம் சொல்வதென்ற அலைப்புறுதலும், தவிப்பும்!

மேசை மேல் இருந்த உலக உருண்டையை சிறிது நேரம் சுற்றி விளையாடியவன், மெதுவாக நிமிர்ந்தான்.

''மிஸ் சுபந்தினி? என்னைப் பத்தி உங்க அபிப்ராயம் என்னன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?'' - ஆழமான குரலில் கேட்டான்.

சட்டென்று ஒருவித விதிர்ப்பு எழ - மெதுவாக நிமிர்ந்தவள், ''சார்... நான் உங்களைப் பத்தி... என்ன சொல்றது?''தவிப்புடன் வந்தது குரல்!

''ம்... உங்களுக்குத் தெரிஞ்சதை... இத்தனை நாளா நீங்க பார்த்ததை... பழகினதை வச்சு சொல்லலாமே?''

சிறிது நேரம் பூ உதிர்ந்தால் கூடக் கேட்குமளவு பெரும் நிசப்தம் அங்கு!

பிறகு சஞ்சலத்துடன் பார்வையை உயர்த்தியவள், ''தொழிலைப் பொறுத்தவரைக்கும் நீங்க ரொம்ப உயர்ந்தவர்! மத்தபடி தனிப்பட்டு எனக்குத் தெரியாது'' - தயக்கத்துடன் முடித்தாள்.

''ம்... தனிப்பட்டு தெரிஞ்சுக்க ஆசை இருக்கா?''

அவன் கேட்டவுடன் பதறி நிமிர்ந்து ''சார்... அப்படி எல்லாம் இல்லை'' - அவள் முடிக்குமுன்பே இடைமறித்தான் அவன்.

''ஆனா எனக்கு விருப்பமிருக்கு... உன்னைப் பத்தி முழுமையா எல்லாம் தெரிஞ்சுக்கணும்... என் இணையா உன்னை ஆக்கிக்கணும்னு மனசு துடிக்குது!

''என்னை கல்யாணம் செஞ்சுக்கிட்டு, வாழ்நாள் முழுக்க என்னோடு வருவியா சுபந்தினி?'' - ஏக்கத்துடன் கேட்டான்.

வெலவெலத்துப் போய் எழுந்தவளின் விழிகளில் சட்டென்று நீர்த்துளிகள் அரும்பின.

''சாரி! நான் தப்பா எதுவும்...''

''இல்லை! இந்த மாதிரியான எண்ணம் உங்க மனசுல வர நான் காரணமாயிட்டேன்னு நினைக்கிறப்ப ரொம்பக் கஷ்டமா இருக்கு! என்னால யாரையும் கல்யாணம் செஞ்சுக்க முடியாது!



''என்னைப் பொறுத்தவரைக்கும் எந்த ஆண் மீதும் எனக்கு நம்பிக்கை இல்லை. அதோட கல்யாணம்கிறது பெரிய முள்வேலி மாதிரி என்னைப் புரிஞ்சுக்கங்க... ப்ளீஸ்'' கையெடுத்துக் கும்பிட்டு விட்டு வேகமாக வெளியேறி விட்டாள்.

யாரோ முகத்தில் அறைந்தாற் போன்ற உணர்வுடன் உறைந்து, அமர்ந்திருந்த விசாகன், சமாளித்து எழுந்து சென்று பார்ப்பதற்குள் சுபந்தினி சென்று விட்டது தெரிந்தது.

இனம் புரியாத கோபமும், புறக்கணிக்கப்பட்ட தகிப்பும் சேர்த்து அவனை எரிமலையாக்கின.

* * *

அன்று வீட்டிற்குச் செல்லாமல் நேரே கடற்கரையில் போய் அமர்ந்திருந்தபோது அவனுக்குள்ளும், கோபம் அலையாய் ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தது.

எந்தப் பெண்ணிடமும் இதுவரை தோன்றாத ஒன்று அவளிடம் மட்டும் வந்தது ஏனென்று புரியவில்லை!

அவளைக் கண்ட மறுகணமே தான் உயிர்த்ததும், இன்று அவள் வார்த்தைகளால் உதிர்ந்த விண் மீனாய் சிதறியதும் நினைவு வருவதாய்!

ஏதோ கோடி யுகங்கள் அவளுடன் சேர்ந்திருந்த இனிய மயக்கம் இதுவரை சூழ்ந்திருந்தது.

இப்போது எல்லாமே கலைந்த கனவாய், கானல் நீராக இருக்க - நெஞ்சப் பரப்பை பெரும் சோகம் ஆக்கிரமிப்பதாய்!

அன்றிரவு வெகு நேரம் கழித்து தாமதமாக வீட்டிற்கு வந்தவனை பதற்றத்துடன் வரவேற்றார் புவனா.

''என்னப்பா விஷாக்? இன்னிக்கு இவ்வளவு தாமதம்? 'போன்' பண்ணினா நீ முன்னாடியே கிளம்பிட்டதா சொன்னாங்க! 'செல்'லும் கிடைக்கலை. 'ஆப்' பண்ணி வச்சிட்டியா... நான் பயந்தே போயிட்டேன்.''

''அம்மா! என் நண்பன் ஒருத்தனுக்கு பிரச்சினை. அதான்! எனக்கு சாப்பாடு வேண்டாம்.. நீங்க படுத்துக் கங்க'' என்றபடி உள்ளே சென்று அறைக்கதவை மூடிக் கொண்டான்.

'கடவுளே! நான் சுபந்தினியை சந்திக்காமலே இருந் திருக்கலாம்! நான் ஏன் உன்னை நேசித்தேன்? உன்னைக் கண்ட முதல் நாளே நெஞ்சம் ஆர்ப்பரிக்கத் தொடங்கி விட்டதே?

'என் இதயச் சுவரில் உன்னை ஓவியமாய் நான் வரைந்திருப்பது உனக்குத் தெரியுமா? பல இரவுகள் நான் உறக்கம் தொலைத்ததை நீ அறிவாயா?'

பாதி இரவு மவுனப் புலம்பல்களுடன் நீண்டது.



# 8

மறுநாள் விசாகன் எழுந்த போது மணி எட்டாகி இருந்தது.



சரியாக உறங்காததால் விழிகள் செவ்வரிகளுடன் சிவந்திருக்க உடலும், உள்ளமும் ஓய்ந்திருந்தன.

தாமதமாக தொழிற்சாலைக்குச் சென்றால், அன்று சுபந்தினி வந்திருக்கவில்லை!

தன்னுடைய பேச்சு அவளை இந்த அளவு பாதித்திருக் கும் என அவன் நினைக்கவே இல்லை.

அன்று முழுவதும் அவளுடைய நினைவுகளிலேயே மிதந்திருந்தவனுக்கு - மறுநாள் வந்திருந்த கடிதம், சம்மட்டி அடியாய்!

சுபந்தினி, தன்னுடைய ராஜினாமா கடிதத்தை அனுப்பி இருந்தாள்... இந்த திடீர் முடிவுக்கு மன்னிப்பையும் கோரி இருந்தாள்.

கடிதத்தைப் படித்து முடித்தவுடன் கைகளை இறுக மூடி மேசையில் குத்தியவன், மதிய இடைவேளையி லேயே அவளைத் தேடி பெண்கள் விடுதிக்குக் கிளம்பி விட்டான்.

அங்கு சென்ற பிறகுதான் தெரிந்தது... அவள் முதல் நாள் இரவே அறையைக் காலி செய்து சென்ற விஷயம்!

அவர்கள் கொடுத்த உள்ளூர் முகவரிக்கு போனபோது, அம்பிகாவின் மாமா சுப்ரமணியத்தை சந்தித்தான் அவன்.

அவரிடம் விசாரித்தபோதுதான், அவருக்கும் முகவரி தெரியாது என்பதை அறிந்தான்.

''என் அக்கா பொண்ணு அம்பிகாவோட 'கிளாஸ்மேட்' அவ. அவ்வளவு தான் தெரியும். எங்க முகவரியை அவ தந்திருக்கா! மத்தபடி எங்களுக்கு எதுவும் தெரியாது'' என்று கைவிரித்து விட்டார்.

அம்பிகாவிடம் சுபி எச்சரித்து சென்றிருக்க, அவளும் மவுனமாகவே இருந்தாள்.

விஷாக்கிற்கோ சுபந்தினி அருகில் இல்லாத நிமிடங்கள் நரகமாய்!

'அவளைப் பார்த்து பழகி ஐந்து மாதங்கள்தானே ஆகின்றன... அதற்குள் எப்படி இந்தளவு ஈர்ப்பு வந்தது?

'எத்தனையோ படித்திருக்கிறேன்... ஒரு பெண்ணின் மனதைப் படிக்கத் தெரியவில்லையே?

'எனக்கெனவே ஜனித்த அற்புத தேவதை நீயா? என் இதயத்தை உன் விழியோரக் கயிற்றில் முடித்து விட்டாயே?

'ஒரு பெண்ணின் மறுப்பு என் வாழ்க்கையையே வர்ணமிழக்கச் செய்திருக்கிறதே... என்ன மாயம் செய்தாய் பெண்ணே? மனித சுவடற்ற பூமிக்கு செல்ல மனம் ஏங்குகிறதே?'

விடை தெரியாப் பல கேள்விகளுடன் தான் அன்றிரவு கண்ணயர்ந்தான் அவன்.

மறுவாரம் முழுவதும் கூண்டுப் புலியாய் உறுமிக் கொண்டிருந்தவனை இதப்படுத்தும் விதமாக ஒரு நாள் 'செல்' அழைத்தது.

எடுத்தபோது அவனுடைய கல்லூரி நண்பன் மணி கண்டன் பேசினான். மாதம் ஒரு முறையாவது பேசி விடுபவன், ஏனோ மூன்று மாதங்களாகவே அழைக்கவில்லை.

சுபியின் நினைவுகளில் தன்னைத் தொலைத்திருந்ததால் விசாகனும் பெரிதாகக் கவலைப்படவுமில்லை!



இன்று மணி என்ற எழுத்துகள் ஒளிர்ந்ததும், ஏனோ சோர்வு நீங்கி சிறு உற்சாகம் ஊற்றெடுக்க 'செல்'லை உயிர்ப்பித்தான்.

''என்னடா விஷாக்... 'செல்'லை எடுக்க இவ்வளவு நேரம்? மூணு மாசமா 'போன்' பண்ணலைன்னு என் மேல கோபமா?''

மணியின் கேள்விக்கு என்ன பதில் சொல்வதென்று புரியாமல், ''அப்படி எல்லாம் இல்லைடா! எப்படி இருக்கே? அப்பா நல்லா இருக்காரா?'' மெல்ல விசாரித்தான்.

''ம்... அதுக்குதான்டா 'போன்' பண்ணினேன்! அப்பாவுக்கு லேசா மாரடைப்பு வந்து ஆஸ்பத்திரியில் இருக்காரு... வீட்டிலே கொஞ்சம் பிரச்சினை!'' பெருமூச்சுடன் முடித்தான்.

''என்னாச்சு மணி... அப்படி என்ன பிரச்சினை, யாரை யாவது நீ காதலிச்சி வம்பாயிடுச்சா?'' தன் நினைவிலேயே கேட்டான்.

''அதெல்லாம் இல்லை! இது வேற... அப்பாவுக்கும், எனக்கும் தான்.... நீ இங்கே வர முடியுமா? உன் கூட நிறைய பேசணும்னு நினைக்கிறேன்'' உடைந்த குரலில் கேட்டான்.

சட்டென்று உள்ளே ஒரு ஒளி பரவியது...

''நான் கூட எங்கேயாவது போயிட்டு வரலாம்னு யோசிச்சிட்டிருந்தேன் மணி... சரியான நேரத்துக்குத்தான் 'போன்' செஞ்சிருக்கே!''

அவன் கூறியதும் ஒலித்த மணியின் குரலில் புதுத் தெம்பும், தைரியமும் கைவசப்பட்டிருந்தன.

''ஓ! நன்றி விஷாக்... எனக்கு உன்னை மாதிரி... எல்லா விஷயங்களையும் பகிர்ந்துக்கற ஒருத்தரோட துணை இப்ப கட்டாயம் வேணும்!''

''ம்... எனக்கும் தான்! நான் நாளைக்கு ராத்திரி கிளம்பி வரேன்... நாளன்னிக்கு காலையிலே அங்கே இருப்பேன்! சாந்தாம்மா கையால சாப்பிட்டு ரொம்ப நாளாச்சு... வரேன்னு சொல்லு!'' புதிதாய் எழுந்த குதூகலத்துடன் கூறினான்.

''வாடா... உன்னை ஆவலா எதிர்பார்த்துக் காத்திட் டிருப்பேன்... 'டிரெயின்'ல தானே வர்றே! ஸ்டேஷனுக்கு ஓடி வந்துடறேன்.''

''ஏய் பாத்து... கால் வலிக்கப் போகுது! காரிலேயா வா!'' கேலியுடன் முடித்துவிட்டு 'செல்'லை அணைத்தான் அவன்.

மறுநாள் முழுவதும், பத்து நாட்களுக்கு செய்ய வேண் டிய வேலைகளையும், கையெழுத்து போட வேண்டிய காசோலைகளையும், அனுப்ப வேண்டிய பொருட்களையும் பற்றி மேனேஜரிடம் பேசி விட்டு, துணிகளை அடுக்கி ஊருக்குக் கிளம்பினான்.

இங்கிருந்தால் தன்னுடைய முதல் காதலும், சுபந்தினியால் புறக்கணிக்கப்பட்ட பச்சாதாபமும் தன்னை உருக்குலைத்துவிடும் போலிருந்தது அவனுக்கு!

நிம்மதி தேடியும், தன் மனதைப் பகிரவும் ஒரு நல்ல துணை தேடிய விசாகன் - பெரும் சஞ்சலத்துடன் ரெயிலில் முதல் வகுப்பில் பயணம் செய்தான்.

எப்போதும்... எங்கிருந்தோ ஒரு இனம் புரியாத உற்சாகத்தை துணைக்கு அழைக்கும் ரெயில் பயணம்



அன்று அமைதியாக எந்தவித ரம்மியமுமின்றித் தொடர்ந்தது.



# 9

மறுநாள் காலையில் அவன் தூத்துக்குடியில் சென்று இறங்கியபோது, மணி ஆவலுடன் அவனுக்காகக் காத் திருந்தான்.

நண்பனைக் கண்டதும் ஓடி வந்து அணைத்துக் கொண்டவன், ''உன்னைப் பார்த்ததும் யானை பலம் வந்த மாதிரி இருக்குடா! இனிமே எந்தப் பிரச்சினையையும் சுலபமா சந்திக்கலாம்னு தோணுது!'' தெம்புடன் கூறி னான்.

''ம்... அப்போ என்னை யானைன்னு சொல்றியா? உடம்பு கூட அவ்வளவா குண்டாகலையேடா? 'ஜிம்' முக்குப் போய் நல்லாத்தானே வெச்சிருக்கேன்?''

வார்த்தைகளில் கிண்டல் கசிந்தாலும், முகம் இறு கியே இருந்தது.

''என்னாச்சு என் நண்பனுக்கு...?'' அக்கறையுடன் விசாரித்த மணியிடம் பதிலேதும் கூறாமல் நடக்க ஆரம்பித்தான் அவன்.

டிரைவர் டிராலி கேஸை தள்ளியபடி உடன் வர, ''அப்பா இப்ப எப்படி இருக்காங்க?'' விஷாக்கின் குரலில் வருத்தமும், கரிசனமும் தெரிந்தன.

''பரவாயில்லை... இன்னும் அவசர பிரிவில்தான் இருக்காங்க! வா... உன் கூட நிறைய பேசணும்!

தோளோடு சேர்த்து அவனை அணைத்து அழைத்தபடி சென்று காரில் அமர்ந்தான் மணி.

வீட்டிற்குச் சென்றதும் பாசத்துடன் வரவேற்றார், அங்கு வெகு நாட்களாக சமையல் வேலைக்கு இருக்கிற தூரத்து உறவான சாந்தாம்மா!

''வாங்க தம்பி! நாலைஞ்சு வருஷம் இருக்குமா நீங்க இந்த ஊருக்கு வந்து...! ரொம்ப சந்தோஷமா இருக்கு...''

உடனே ஏதோ நினைவில் புருவம் சுருக்கிய மணி, ''இல்லை... விஷாக் வந்து மூணு வருஷம் ஆச்சு... அம்மா இறந்தப்ப வந்தது!'' ஒரு ஆதங்கத்துடன் முடித்தான்.

''அதுக்கு முன்னாடி வருஷம் ஒரு தடவையாவது விடுமுறைக்கு வருவீங்க... இப்பல்லாம் வர்றதே இல்லை'' ஆதங்கத்துடன் கூறினார் சாந்தாம்மா.

''ஆமாம்மா! அப்போ ரெண்டு பேரும் படிச்சிட்டிருந் தோம்... லீவுக்கு வருவேன்...! அப்புறம் நான் மேல் படிப்பு படிக்கப் போனேன்...

''மணிதான் இங்கே தொழிலைப் பார்க்க உக்காந்துட் டானே! இப்போ நானும் அப்பாவோட தொழிலில் உட்கார்ந்துட்டேன்... ரொம்ப பிஸி... அதான்.

''ஆனா உங்களோட குழிப் பணியாரமும், முந்திரிக் கொத்தும், புட்டும் என்னிக்குமே மறக்காதவை சாந் தாம்மா!''



சிறு முறுவலுடன் கூறிவிட்டு, மணியுடன் மாடியில் இருக்கும் விருந்தினர் அறைக்குச் சென்றான் விஷாக்.

உடனே குளித்துத் தயாராகி, சாப்பிட்டுவிட்டு இருவரும் மருத்துவமனைக்குக் கிளம்பினர்.

அங்கு பல மருத்துவ உபகரணங்கள் புடைசூழப் படுத் திருந்தார் தணிகாசலம்!

அவனைக் கண்டதும் சைகையில் விசாரித்தவர், 'ஆக்சிஜன் மாஸ்க்'கை எடுக்கும்படி மணியிடம் ஜாடை காட்டினார்.

நர்ஸ் ஒருவர் அதைத் தற்காலிகமாக எடுத்துவிட, ''மணி... ஜீவா... ஜீவா...'' மீண்டும் மீண்டும் அதே பெயரையே உச்சரிக்க ஆரம்பித்தார்.

உடனே அவரருகில் குனிந்தவன், ''அப்பா! நான் இன்னிக்கு கட்டாயம் அவங்களை அழைச்சிட்டு வரேன்! கவலைப்படாதீங்க... பேசாம படுங்க... ரொம்ப 'ஸ்டிரெயின்' பண்ணாதீங்க!''

அவரை அமைதிப்படுத்திவிட்டு, 'ஆக்சிஜன் மாஸ்க்' கைப் பொருத்தினான்.

உடனே நர்சிடம் திரும்பியவன், ''இன்னிக்கு அப் பாவை அறைக்கு மாத்திடுறதா சொல்லி இருந்தாங்களே சிஸ்டர்! எப்போ மாத்துவாங்க?'' ஆர்வத்துடன் விசாரித் தான்.

''இப்போ டாக்டர் வந்து பாத்துட்டுச் சொன்னதும் மாத்திடுவோம் சார்!'' என்றபடி தணிகாசலத்திற்கு உதவ ஆரம்பித்தாள்.

பிறகு இருவரும் வெளியே வந்தபோது, அவனிடம் கேட்க விஷாக்கிற்கு நிறைய கேள்விகள் இருந்தன.

''என்னாச்சு மணி? யார் அந்த ஜீவா...? ஏதோ பிரச்சினைன்னியே... அது என்ன?'' யோசனையுடன் கேட்டான்.

''வா... எங்க உப்பளத்துக்குப் போய் ஒரு சுற்று பாத்துக்கிட்டே பேசலாம்'' என்றபடி அவனை அழைத்துச் சென்றான் மணி.

அங்கு சென்று அவன் கூறிய விஷயம் - விஷாக்கிற்குப் பெரும் அதிர்ச்சியையும், வியப்பையும் தந்தன.



# 10

உப்பளத்தைப் பார்வையிட்டுவிட்டு குடோனுக்குள் வந்த மணி, அங்கிருந்த அலுவலக அறைக்கு விஷாக்கை அழைத்துச் சென்றான்.

''உக்காரு விஷாக்! இதை... எப்படி... எங்கேருந்து ஆரம்பிக்கிறதுன்னு புரியலை...! இதுக்கு காரணம் யாருன்னு சொல்லவும் தெரியலை! ஆனா, முக்கியமான காரணம் எங்கம்மா கனகவல்லியாத்தான் இருக்கணும்! உனக்குத்தான் தெரியுமே அவங்களைப் பத்தி!

''பெரிய பணக்கார வீட்டுப் பொண்ணுங்கிற ஆணவம், தான் சொல்றதைத்தான் எல்லாரும் கேட்கணும்கிற கா்வம், தான் செய்யறதுதான் சரிங்கற அகம்பாவம்...



''எங்க அப்பா தன்னைவிட வசதியில குறைஞ்சவருங்கிற எகத்தாளம்... எல்லாமா சேர்ந்து அவங்களை ஒரு பணப் பேயாகத்தான் ஆட வச்சிது!

''கல்யாணத்தப்போ, அப்பா ஓரளவு வசதி படைச்சிருந்தாலும் அவரோட உழைப்பாலதான், உப்பளத்தோட மீன் பிடி காண்டிராக்ட், மரக்கடை துறைமுக காண்டிராக்ட்டுன்னு பெருக்கினாரு!

''ஆனாலும், எங்க அம்மா கடைசி வரைக்கும் மாறலை! தனக்கு அவர் நிகரில்லைங்கிற திமிர் எப்பவுமே அவங்களுக்கு அதிகம்! அப்பாவை மதிக்கவே மாட்டாங்க... உனக்குதான் தெரியுமே... எல்லார் முன்னாடியும் எடுத்தெறிஞ்சுதானே பேசுவாங்க...

''வெளியில பெரிய தொழில் அதிபரா மீசையை முறுக்கி கம்பீரமா வலம் வர்றவரு, அம்மா முன்னாடி கூனிக் குறுகி நிக்கறதை நானே நிறைய தடவை பாத்திருக்கேனே!

''என்னடா... இவன் அம்மாவைப் பத்தியே இப்படி சொல்றானேன்னு நினைக்காதே! உண்மை அதுதான்! இப்போ நான் முக்கியமான விஷயத்துக்கு வரேன்! ஒரு வாரத்துக்கு முன்னாடி அப்பா என்னைக் கூப்பிட்டுத் தனியாப் பேசணும்னாரு...

''நானும் போனேன்... அப்பதான் தனக்கு இன்னொரு குடும்பமும், அங்கே ஒரு மகளும் இருக்கிறதை குற்ற உணர்ச்சியோட தயங்கித் தயங்கி சொன்னாரு!

''எனக்கு பெரிய அதிர்ச்சி...! இதை சத்தியமா அவர் கிட்டருந்து நான் எதிர்பார்க்கலை! உடைஞ்சு போயிட்டேன்... என்கிட்ட இருந்து அவரு ரொம்ப தூரம் விலகிப் போயிட்ட மாதிரி ஒரு உணர்வு.

''ரெண்டு நாள் சரியா சாப்பிடலை... தூங்கலை! என்னால அதை ஜீரணிக்கவே முடியலை! பைத்தியமா, பித்துப் பிடிச்ச மாதிரி திரிஞ்சேன்... என்னவோ, என்னோட ஆணி வேரையே யாரோ அசைச்சுப் பார்த்த மாதிரி இருந்தது.

''திடீர்னு எனக்குன்னு யாருமே இல்லாத மாதிரி ஒரு உணர்வு! மனசே பெரிய வெற்றிடமாப் போச்சு!

''அப்போதான் என்கிட்டே அவர் ஒரு சத்தியம் கேட்டாரு! அந்தப் பொண்ணை நான்தான் பாத்துக்கணும்... அவளுக்கு ஒரு நல்ல வாழ்க்கையை அமைச்சுத் தரணும்னு கையைப் பிடிச்சு அழுதாரு!

''என்னால தாங்க முடியலை... அந்த அம்மா ஜீவராணி ரொம்ப நல்லவங்க... பொறுமையானவங்க... எங்கம்மா கனகவல்லிக்கு ரொம்ப எதிர் மறையான குணவதின்னு சொல்லிக் கலங்கினாரு.

''அன்னிக்கு ராத்திரியே அவருக்கு மாரடைப்பு வந்திடுச்சி... அப்பவும் அவருக்கு அவங்க ஞாபகம்தான்! அந்த நல்ல மனுஷியைக் கை விட்டுடாதேன்னு அழுதிட்டேதான் ஆஸ்பத்திரிக்குக் கிளம்பினாரு.

''இப்போ அவங்க பெயரையே சொல்லிப் புலம்பறாரு! இங்கே அவங்க முகவரியும் பார்த்தேன்.

''அவங்க ஒட்டப்பிடாரத்துல இருக்காங்க போலருக்கு... அங்கே போறப்ப, அந்த வீட்டுக்குப் போயிட்டு வருவாரு போலருக்கு!

''முதல்ல ரொம்ப அருவருப்பா இருந்தது... எங்க அப்பாவா இப்படின்னு குமுறினேன்.



''ஆனா இந்த ஒரு வாரமா யோசிச்சிப் பாத்தப்ப, நானும் சின்ன வயசுல இருந்தே ஆஸ்டல்லதான் படிச்சேன்... அம்மாவும் அவருக்கு அனுசரணையா இல்லை! அதான் தடம் மாறிட்டாரோன்னு தோணுது!

''அவர் செஞ்சது நியாயமான்னு சொல்லத் தெரியலை. அவரது மாற்றத்துக்கு இதெல்லாம் ஒரு காரணமா இருக்குமோன்னு நினைக்கிறேன்.

''என்னால எந்த முடிவுக்கும் வர முடியலை... ரொம்பக் குழம்பி இருக்கேன்... நீதான் இப்ப நான் என்ன முடிவு எடுக்கலாம்னு சொல்லணும்.

''டாக்டர்கள் வேற, 'ஜீவான்னா யாரு...? அவங்களை உடனே அழைச்சிட்டு வாங்க'ன்னு சொல்றாங்க... என்ன செய்யறதுன்னே புரியலை!''

விழிகளில் நீர் கசிய, தலையை இரு கைகளாலும் தாங்கியபடி அமர்ந்து விட்டவனைப் பார்த்தபோது, பரிதாபமாய் இருந்தது.

இந்த நிலை வேறு யாருக்கும் வரக்கூடாது என்று தோன்றியது.

உடனே அவனை ஆறுதல்படுத்தினான் விஷாக்.

''ஏய்! இவ்வளவு தெளிவாப் பேசுறே... அப்புறம் ஏன் இப்படி உடைஞ்சுபோறே!

''என்னைக் கேட்டா நடந்தது எல்லாமே தப்புதான்!

''தன் கணவரை மதிக்காம 'டார்ச்சர்' பண்ணினது உங்க அம்மாவோட தப்பு...! தப்பே செஞ்சிருந்தாலும் அவங்களைத் திருத்தாம கோழைத்தனமா இருந்துட்டு, மறைமுகமா தப்பு செஞ்சது உங்க அப்பாவோட தவறு.

''இப்போ காலம் கடந்து இதை விமர்சனம் செய்யறதிலே எந்தப் பயனும் இல்லை!

''அம்மா இறந்துட்டாங்க... ஆனா, இப்போ அப்பா ஆபத்தான நிலையில் இருக்கிறதாலே, அவரோட நிலை மையை நாம நினைச்சுப் பாக்கணும்! அவர் கோரிக்கையை நிறைவேத்தித்தான் ஆகணும்!

''உன்னால முடியலைன்னா சொல்லு... உன் சார்பிலே நான் போய்ப் பேசி அந்த அம்மாவை அழைச்சிட்டு வரேன்! - யோசனையுடன் நிறுத்தினான் விஷாக்.

ஒரு முடிவுடன் கண்களை அழுந்தத் துடைத்து நிமிர்ந் தான் மணி.

''இல்லை! நானும் உன்கூட வரேன்! நான்தான் இதைப் பத்தி அவங்ககிட்டே பேசணும்... இது ரொம்ப சிக்கலான விஷயம்! அதோட எனக்கும் அந்த அம்மாவைப் பார்க் கணும் போலருக்கு...

''இத்தனை வருஷமா கூடவே இருந்த எங்க எல் லாரையும் மறக்க வச்சு - மரண வாசல்லே கூட எப்படி உங்களைப் பத்தி மட்டுமே நினைக்க வச்சீங்கன்னு கேக்கணும்?''

கோபமும், குமுறலாய் முடித்தவன் - வேகமாக எழுந் தான்.

''வா... மதியம் சாப்பிட்டுட்டு அவங்க வீட்டுக்குப் போகலாம். எங்க 'மில்' கணக்கப்பிள்ளைக்கு எல்லாம் தெரியும்னு நினைக்கிறேன்... கூடவே அழைச்சிட்டுப் போய் வீட்டை மட்டும் காட்டிட்டுக் கிளம்ப சொல்லிட லாம்!'' என்றான் ஒரு முடிவுடன்!



பிறகு சாப்பிட்டு முடித்து இருவரும் காரில் கிளம்பி ஒட்டப் பிடாரத்தில் இருக்கும் அவர்களுடைய மரம் அறுக்கும் 'மில்'லுக்குச் சென்றனர்.

கணக்கப்பிள்ளை பிச்சை முத்துவிடம் விபரம் கேட்ட போது, ஒரு கணம் அவர் ஆடிப்போனது புரிந்தது.

''தம்பி... இது... உங்களுக்கு எப்படி?'' பதறிப் போய்க் கேட்டார்.

''எனக்கு எல்லாம் தெரியும்! எங்ககூடவே வந்து வீட்டைக் காமிச்சிட்டு நீங்க உடனே ஒரு 'ஆட்டோ' பிடிச்சிக் கிளம்பிடுங்க! நான் பேசிக்கறேன்!''

அவனுடைய முகத்திலிருந்த தீவிரத்தைக் கண்டு, பயந்து போனார் பிச்சைமுத்து.

''தம்பி! எந்தத் தப்பான முடிவுக்கும் போயிட வேண் டாம்! அந்த அம்மா ரொம்ப நல்லவங்க... பொறுமை யானவங்க!'' தயங்கி நிறுத்தினார்.

''நான் வம்பு செய்யவோ, சண்டை போடவோ அங்கே போகலை முத்து அண்ணே! அப்பாவைப் பார்க்க ஆஸ்பத்திரிக்கு வரச் சொல்லி கேக்கப் போறேன்! கிளம்புங்க.''

உடனே புறப்பட்டு அவர்களுடன் வந்தார் அவர்!

அடையாளம் காண்பித்துவிட்டு அந்த வீட்டு வாசலிலேயே இறங்கிக் கொண்டவர், இருவரிடமும் விடைபெற்று உடனே திரும்பிவிட்டார்.

# 11



வீட்டின் முன்புறம் நித்திய மல்லிக்கொடி, வளைந்திருந்த பந்தலில் படர்ந்திருந்தது.

ஒருபக்கமிருந்த துளசி மாடமும், மறுபுறமிருந்த அழகிய மலர்த் தொட்டிகளும் அந்த வீட்டின் தூய்மையையும், அழகிய நேர்த்தியையும் பறை சாற்றின.

வாசலில், இருந்த அழைப்பு மணியை அழுத்திய போது, கதவைத் திறந்த இளம் பெண்ணின் முகம், சட்டென்று சிவந்து போனது.

''உங்க கண்ணில படாம இருக்கணும்னுதான் இவ்வளவு தூரம் ஓடி வந்தேன்... நான்தான் என் முடிவை உறுதியா சொல்லிட்டேனே! அப்புறம், ஏன் என்னைத் துரத்தி வந்து தொந்தரவு செய்யறீங்க?'' அடிக்குரலில் சீறினாள்.

சுபந்தினியை, தான் அங்கு சத்தியமாக எதிர்பார்க்கவில்லை என்பதை விஷாக்கின் விழிகள் கூறின.

அவளை நினைத்து தன் இதயக் கூடாரத்தில் அவன் சேமித்து வைத்த காதல்... உயிர்ப்புடன் புன்னகைத்தது. மணிக்கோ எதுவுமே ஓடவில்லை!

ஒன்றும் புரியாமல் நண்பனிடம் திரும்பியவன், ''விஷாக்! இவங்க என்ன சொல்றாங்க...? எனக்கு



ஒண்ணுமே புரியலை...! உனக்கும், இவங்களுக்கும் என்ன சம்பந்தம்?'' குழப்பத்துடன் கேட்டான்.

மறுகணமே சுதாரித்து நிமிர்ந்த விஷாக்கின் விழிகள், அவளைக் கூர்மையுடன் ஊடுருவின.

''சுபந்தினி! நான் உன்னைப் பார்க்க வரலை... நீ இங்கே இருப்பேன்னு எனக்கு சத்தியமா தெரியாது... அதை எதிர்பார்க்கவுமில்லை...! இது வேற விஷயம். நாங்க உங்க அம்மா ஜீவாவைப் பாக்கணும்!'' அழுத்தமான குரலில் முடித்தான்.

''எங்க அம்மாவை நீங்க ஏன்?''

அதற்குள் பின்னாலிருந்து ஒரு குரல் இடைமறித்தது.

''யாரு வந்திருக்காங்க சுபி?'' என்றபடி வந்த ஜீவராணி - எதிரே மணியைக் கண்டதும், விதிர்த்துப் போய் அப்படியே உறைந்து நின்று விட்டார்.

பிறகு மெதுவாக இயல்புக்கு வந்தவர், ஒருவிதத் தடுமாற்றத்துடன் அவன் அருகில் வந்தார்.

இவ்வளவு இளமையாக, நாற்பது வயதுகூட நிரம்பாத ஒரு பெண்மணியை அவனும் எதிர்பார்க்கவில்லை!

சுபந்தினியின் மறுபதிப்பாய்... அவளுக்கு ஒரு தமக்கையைப் போல் தோற்றமளித்தவர் - நெருங்கி வந்து ஒரு கணம் தயங்கி நின்றார்.

மறு நிமிடமே ''மணி'' என்றபடி ஓடிவந்து அவன் முகத்தை தன் கைகளில் ஏந்தி வருடியபடி விம்ம ஆரம்பித்தார்.

நடப்பது என்னவென்றே புரியாமல் சுபி உறைந்து நிற்க - வியப்பும், திகைப்புமாய் நின்றிருந்த விஷாக்தான் அந்த இறுக்கத்தை உடைத்தான்.

''அப்போ... உங்களுக்கு இவனை முன்னாடியே தெரியுமா?'' அமர்ந்த குரலில் கேட்டான்.

கண்ணீருடன் அவன்புறம் திரும்பிய ஜீவாவிற்கு பேச்சு வருவதற்கே சில நிமிடங்களாயின.

''ம்... தெரியும்! ஐயா இவரோட போட்டோவைக் காமிச்சிருக்காரு! உள்ளே வாப்பா... இது உன் வீடு?'' உரிமையுடன் வரவேற்றார்.

தான் கேட்க வந்த கேள்விகள் அனைத்தையும் மறந்து உறைந்து நின்றிருந்தான் மணி!

மனதிற்குள் அவன் உருவகம் செய்து வைத்திருந்த தற்கு சிறிதும் சம்பந்தமில்லாமல், தாய்மையின் வடிவாய்... கருணையே உருவான ஒரு பாசம் நிறைந்த பெண்மணியை இங்கு அவன் சத்தியமாக எதிர்பார்க்கவில்லை!

அந்த நடுங்கிய கரங்களின் நேச வருடல் - அவருடைய பரிவையும், கனிவையும் வெளிப்படுத்த - வார்த்தைகளற்ற ஒருவித மவுனத்துடன் இறுகிப் போயிருந்தான் அவன்.

சட்டென்று ஒரு அழுத்தமான குரல் அவனைக் கலைத்தது.

''அம்மா! ஒரு நிமிஷம் இருங்க... எதையும் புரிஞ்சி தான் பேசுறீங்களா? இவர் யாரு? அந்தத் தணிகாசலத்தோட சொந்தமா...? முதல்லே இவரை வெளியே போகச் சொல்லுங்க?'' சீறினாள்.



வாழ்க்கையில் முதன் முறையாக ஜீவராணிக்குள் கடும் கோபம் பொங்கியது.

''சுபி! அவரை நாம வெளியே போகச் சொல்ல முடியாது... ஏன்னா இது அவங்க வீடு...! அவரோட பிள்ளை இவர்.''

''ஓ! அதனால... உங்க புருஷன்... சாரி... புருஷன்னு சொல்றது தப்பு இல்லை...? என்ன உறவுன்னே புரியாம, ஒருத்தரோட வாழ்ந்துட்டிருக்கீங்களே... அவரு உங்களுக்காக குடுத்த வீடு?'' நக்கலாகக் கேட்டாள்.

''சுபி...! என்னைப்பேச வைக்காதே...! உள்ளே போ!'' அடிக்குரலில் எச்சரித்தார் ஜீவா.

''இல்ல! நான் போக மாட்டேன்... எனக்கு ஒரு உண்மை தெரியணும்! உங்களுக்கு நான் முக்கியமா? இல்லை... உங்களைத் தப்பான ஒரு உறவோட இந்த வீட்டிலே வைச்சிருக்காரே... அவர் முக்கியமா?''

அடுத்த நொடியே இடியாய் அவர் கரம் பளாரென்று சுபியின் கன்னத்தில் இறங்கியது.

''இனிமே ஒரு வார்த்தை பேசினே... அவ்வளவு தான்...''

கடும் கோபத்துடன் அவர் கூற - வாழ்க்கையில் முதன் முறையாக அடி வாங்கிய அதிர்ச்சியிலிருந்து மீண்டாள் அவள்.

''என்ன, ரொம்ப வக்காலத்து வாங்கறீங்க? நான் திரும்பத் திரும்ப அப்படித்தான் சொல்லுவேன்! உங்களுக்கும், தன் முதல் மனைவிக்கும் நிறைய துரோகங்கள் செஞ்சவர் அவர்!'' உரத்த குரலில் முடித்தாள்.



# 12

ஜீவராணியின் விழிகள் நீரில் மிதந்தன.

''இல்லை! எனக்கு ஒரு நல்ல வாழ்க்கையையும், உனக்கு உயிர்ப்பிச்சையையும், நீ பிறந்ததுக்கு உண்டான ஒரு மதிப்பையும் இந்த சமுதாயத்துல உருவாக்கித் தந்தவரு அவரு! இனிமே ஒரு வார்த்தை பேசாதே... உள்ளே போ!''

இடியாய் முழங்கி கணவனுக்காக நீதிகேட்டு பாண்டியனின் அரசவையில் நின்ற பத்தினித் தெய்வம் அவரிடமே தெரிய - சட்டென்று பொங்கிய அருவருப்புடன் உள்ளே ஓடினாள் சுபி.

வெளியே விஷாக்கின் குரல் மெலிதாய் கேட்டது.

''தணிகாசலம் அங்கிளுக்கு மாரடைப்பு வந்து ஆஸ்பத்திரியில் இருக்காரு... நீங்க உடனே வரணும்.''

அவர் பதறி ''நான் உங்களோட வரேன் தம்பி... வாங்க... போகலாம்!'' என்றார் அழுகையுடன்!

உடனே கிளம்புவதும் தெரிந்தது.

உடல் கூனிக் குறுகி சிறுத்துப் போக சுருண்டு படுத்திருந்தவளின் நெஞ்சுக்குள்ளோ பெரும் போராட்டம்!



சிறிது நேர அமைதிக்குப் பிறகு வாசல் கதவு பூட்டப்படும் ஒலி கேட்க, தாங்க இயலாமல் விம்மி விம்மி அழ ஆரம்பித்தாள் அவள்.

இருவரிடமும் சாவி இருப்பதால், கதவைப் பூட்டிக் கொண்டு படி இறங்கிய ஜீவாவின் மனதிலோ பெரும் சோகமும், தவிப்பும்!

என்ன சொல்லி தன் மகளுக்கு புரிய வைப்பது என்ற சலிப்புடன் காரில் ஏறினார்.

மருத்துவமனைக்குச் சென்று தணிகாசலத்தைக் கண்டதும், அவரால் பேசவே முடியவில்லை.

அன்று மதியம்தான் அவரை அறைக்கு மாற்றி இருக்க, உறவினர் ஒருவர் துணையிருந்தார்.

வாயில் முந்தானையைப் பொத்தியபடி ஜீவா அழ ஆரம்பிக்க, தணிகாசலம்தான் சமாதானப்படுத்த வேண்டியதாயிற்று!

ஜீவா சிறிது அமைதி அடைந்ததும், ''சுபி வரலையா? அவ, என்ன சொன்னா?'' மெதுவாக விசாரித்தார்.

''ம்... அவளுக்குத்தான் ரொம்ப கோபம்! உங்களுக்குத்தான் தெரியுமே. அவ பிடிவாதத்தைப் பத்தி...! மணி தம்பி வந்ததுமே நானும் சொல்லாம கிளம்பி வந்திட்டேன்'' சோர்வுடன் கூறினார்.

''ஏம்மா! அவ நம்ம குழந்தை... அவகிட்டே உனக்கு என்ன வெறுப்பு! ஒரு அம்மாவும், பொண்ணும் நெருங்கின தோழிகளா இருக்க முடியும்கிறதை நிரூபிச்சவ நீ! இப்ப யார் கண்ணோ பட்ட மாதிரி ஆயிடுச்சி!''

மூச்சு வாங்க அவர் நிறுத்தியபோது, ''அப்பா! அதெல்லாம் அப்புறம் பேசிக்கலாம். நீங்க அநாவசியமா

'ஸ்டிரெயின்' பண்ணிக்காதீங்க.'' சிறு எரிச்சலுடன் கூறிய மணி - உடனே கிளம்பி விட்டான்.

அன்று முழுவதும் அவருடனே இருந்த ஜீவாவை, இரவு வற்புறுத்தி வீட்டிற்கு அனுப்பி வைத்தார் தணி காசலம்.

விஷாக்தான், அவரை காரில் அழைத்துக் கொண்டு ஒட்டப் பிடாரத்திற்குக் கிளம்பினான்.

மகள் வீட்டில் தனித்திருப்பதும், இரவு சாப்பாட்டிற்கு என்ன செய்திருப்பாளோ என்ற கவலையும், உறுத் தலுமாய் மதியத்திலிருந்து அமர்ந்திருந்தார் அவர்.

''என்ன ஆன்ட்டி? ரொம்ப யோசனையும் கவலையுமா இருக்கீங்க? மகளைப் பத்தின கவலையா?'' மெல்லக் கேட்டான் அவன்.

ஒரு பெருமூச்சுடன் நிமிர்ந்தவர், ''ஆமாம் தம்பி! அப்புறம் ஒரு விஷயம் கேக்க மறந்தே போச்சு! என் பொண்ணு உங்ககிட்டே ரொம்ப தெரிஞ்ச மாதிரி ஏதோ கோபமாய் பேசிட்டிருந்தாளே...? அவளை உங்களுக்கு முன்னாடியே தெரியுமா?'' ஒருவித ஐயத்துடன் கேட்டார்.

''ம்... தெரியும் ஆன்ட்டி! அவ சென்னையில வேலை செஞ்ச தொழிற்சாலை அதிபர் நான்தான்! என்னாலதான் அவ வேலையை விட்டுட்டு வந்ததே!'' தயக்கத்துடன் நிறுத்தினான் அவன்.

''ஓ! நானும் ஏதோ பிரச்சினை இருக்கணும்னு எதிர் பார்த்தேன்... முன்னே மாதிரி அவ என்கிட்டே இப்பல் லாம் மனசுவிட்டுப் பேசறதில்லை! அதனாலதான் எதையுமே கேக்க முடியாமல் போச்சு! ஏன் தம்பி... வேலை விஷயமா ரெண்டு பேருக்கும் ஒத்து வரலையா?''



''இல்லை ஆன்ட்டி... வேலையைப் பொறுத்த வரைக் கும் சுபந்தினி ரொம்ப அருமை! இது தனிப்பட்டது!''

அதற்கு மேல் கூற முடியாமல் அவன் நிறுத்த, பரி தவிப்புடன் திரும்பினார் அவர்.

''தம்பி! நீங்க சுபியை... இப்படி கேக்கிறேன்னு தப்பா நினைக்காதீங்க... அவளை விரும்பறீங்களா?'' பெரும் ஆர்வத்துடன் கேட்டார்.

சிறிது நேர மவுனத்திற்குப் பிறகு ''ஆமாம்'' எனத் தர்மசங்கடத்துடன் தலையசைத்தான் விஷாக்.

ஆனால், அவன் எதிர்பார்த்ததற்கு மாறாக - பெரும் ஒளியுடன் மலர்ந்தது ஜீவாவின் முகம்!

''தம்பி! ரொம்ப சந்தோஷம்! என்னடா இவ இப்படி சொல்றாளேன்னு தப்பா நினைக்காதீங்க! இன்னிக்கு ஐயா உங்களைப் பத்தி ரொம்பப் பெருமையாப் பேசிட்டிருந் தாங்க!

''நீங்க பாரம்பரியமான குடும்பத்தைச் சேர்ந்தவங்கன்னு சொன்னாங்க... அவங்க மனசுலேயும் இந்த மாதிரி ஒரு ஆசை இருக்கிறதை இன்னிக்குத்தான் நான் தெரிஞ்சு கிட்டேன்'' விழிகள் மின்னக் கூறினார்.

சட்டென்று அவனுடைய உலகமே கோடி மின்னல் கீற்றொளியால் பிரகாசித்த உணர்வு!

''அங்கிள்... அவர் மனசிலே இப்படி ஒரு உணர்வு இருக்கா? ஓ... நான் ரொம்ப அதிருஷ்டசாலிதான்! ஆனா, உங்க பொண்ணுக்குத்தான் என்னைக் கண்டாலே பிடிக்கலை! அதைவிட கல்யாணம்கிற விஷயத்தையே அவ வெறுக்கிறாளே!'' யோசனையுடன் கூறினான்.

''ம்... அதுக்கெல்லாம் காரணம் நான்தான்ப்பா! அவளுக்கு நான் ஐயாவோட ரெண்டாவது மனைவின்ற உண்மை தெரிஞ்சதிலேருந்து ரொம்பவே மாறிப் போயிட்டா!''

ஒரு பெருமூச்சுடன் அவர் எல்லாவற்றையும் கூற, புதிராய் பல நிகழ்வுகள் அதில்!

அவர் கண்ணீருடன் முடித்தபோது, காரை ஓரமாக நிறுத்திவிட்டு திரும்பினான் அவன்.

''நான் இவ்வளவு சொன்னப்புறமும்... எங்களைப் பத்தி எல்லாம் தெரிஞ்சப்புறமும் நீங்க பழைய மாதிரியே நினைப்பீங்கன்னு எதிர்பார்க்க முடியாதுதான்! பரவா யில்லை தம்பி! வாழ்க்கையில நாம எதிர்பார்க்கிற, ஆசைப்படுற எல்லாமா நடந்துடுது?''

ஒரு விம்மலுடன் அவர் முகத்தை மூடி அழ ஆரம்பிக்க - அவன் குரல் அவரை மீட்டது.

''ஆன்ட்டி! இப்பதான் அவளை நான் இன்னும் அதிக மாக நேசிக்கிறேன்... இதுவரைக்கும் அவ வெறுப்பா நினைச்சிட்டிருக்கிற தாம்பத்தியத்தை எவ்வளவு அற்புதமானதுன்னு உணர்த்தனும்னு நினைக்கிறேன்.''

உணர்ச்சிகள் நிறைந்த குரலில் அவன் கூற - கலங்கிய விழிகளுடன் கையெடுத்து அவனைக் கும்பிட்டார் அவர்.

''இந்தக் கல்யாணத்துக்கு உங்க அப்பா - அம்மா சம்மதிக்கணுமே தம்பி?'' முகம் சுருங்க தவிப்புடன் கேட்டார்.

''எனக்கு அப்பா கிடையாது... அம்மா மட்டும்தான்! அவங்க நிச்சயமா சம்மதிப்பாங்க'' நம்பிக்கையுடன் கூறியவன், அது பொய்க்கப் போவதை அறியவில்லை!



# 13



வீட்டிற்குச் சென்று ஜீவாவை இறக்கிவிட்டு, அவன் விடைபெற்றுச் செல்ல - மெதுவாகக் கதவைத் திறந்து உள்ளே சென்றார் அவர்.

ஹாலில் அமர்ந்து டி.வி. பார்த்துக் கொண்டிருந்த சுபி, முகம் சுழித்தபடி எழுந்து உள்ளே சென்று தன் அறைக் கதவை வேகமாக சாத்திக் கொண்டாள்.

சிறு விரக்தியுடன் உள்ளே போய் பார்த்தால் மேசை யில் இட்லியும், சட்னியும் காத்திருந்தன.

ஒரு பெருமூச்சுடன் குளியலறைக்குச் சென்று குளித்துவிட்டு வந்து சாப்பிட அமர்ந்தார்.

அப்போது முகத்தில் அறைந்த தனிமையும், நிசப்த மும் அவருள் பெரும் சோர்வை ஜனிக்கச் செய்தன.

காரிருளில் ஒளிரும் மின்னல் கீற்றாய், மனதோரம் சிறு நம்பிக்கை ஒளி மட்டும் எட்டிப் பார்த்தது.

சுபந்தினியின் வாழ்விலும் ஒரு விடிவெள்ளியாய், இனிய சூரியனாய் விஷாக் வந்திருப்பது புரிந்தது.

ஆனால் இந்தப் பெண் யாரையுமே புரிந்து கொள்ள மறுக் கிறாளே என்ற கோபம், நீருபூத்த நெருப்பாய் மனதில் பரவ மெதுவாகச் சென்று படுக்கையில் சாய்ந்தார் ஜீவராணி.

இதைப் பற்றிப் பிறகு தணிகாசலத்திடம் பேசி ஒரு நல்ல முடிவாக எடுக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் உறங்க ஆரம்பித்தார் அவர்.

மறுநாளைய விடியல், சோகமாக ஒலித்த குருவியின் ஏக்க அழைப்புடன் விடிந்தது.

மெதுவாகப் புரண்டு கண் விழித்த சுபிக்குள், கேள்விப் பந்து உருள ஆரம்பிக்க - அக்கினியாய் தகித்தது மனது!

ஒரு முடிவுடன் எழுந்தவள், குளித்துவிட்டு வெளியே வந்தபோது - பூஜையை முடித்து கிளம்பிக் கொண்டிருந் தார் ஜீவா.

அவளைக் கண்டதும் முகத்தில் சிறு புன்னகை அரும்ப அருகே வந்தார்.

''சுபி! டிபனுக்கு பொங்கலும், மதியம் புளியோதரை - தயிர் சாதமும் கிளறி வெச்சிருக்கேன்! சாப்பிட்டு ஓய்வு எடுத்துக்கடா!'' மெல்லிய குரலில் மொழிந்தார்.

உடனே ஆவேசத்துடன் நிமிர்ந்தாள் அவள்.

''எனக்கு எதுவும் வேண்டாம்! நானும் உங்களோட ஆஸ்பத்திரிக்கு வரேன்... உங்க புருஷனோட... ஓ சாரி... மிஸ்டர் தணிகாசலத்தோடு நான் கொஞ்சம் பேசணும்!'' வெறுப்புடன் கூறினாள்.

ஒரு கணம் ஆடிப் போனவரின் விழிகள் உடனே கலங்க ஆரம்பித்தன.

''ப்ளீஸ் சுபி! அவங்க நேத்துதான் அறைக்கே வந்திருக் காங்க! ரெண்டு நாள் போகட்டும்! திரும்பவும் அவங் களுக்கு ஏதாவது 'அட்டாக்' வந்திச்சின்னா, அப்புறம் நீ என்னை உயிரோடு பாக்க முடியாது!''



தலைகுனிந்தபடி கூறிவிட்டு அவர் கிளம்ப - வெறுப் பும், தவிப்புமாய் ஓய்ந்து போய் அமர்ந்தாள் அவள்.

பிறகு பதினொரு மணி அளவில் பசி வயிற்றைக் கிள்ள - எழுந்தபோது, அழைப்பு மணி ஒலித்தது.

இந்த நேரத்தில் யாராக இருக்கும்? என்ற யோசனை யுடன் சென்று கதவைத் திறந்தால், எதிரே விஷாக் நின்றிருந்தான்.

அவள் சுதாரித்து கதவை மூடுவதற்குள், ஒற்றைக் கையாலேயே அநாயசமாக கதவைத் திறந்து உள்ளே நுழைந்தவனின் உதடுகள், ஏதோ நினைவில் புன் னகைத்தன.

''இப்ப என்ன சிரிப்பு? இங்கே வாழ்க்கையே சிரிப்பா சிரிச்சிட்டிருக்கு... பாத்து ரசிக்க வந்தீங்களா?''

எரிச்சலுடன் கேட்டுவிட்டு அவள் செல்ல, சட் டென்று வழி மறித்தான் அவன்.

''இல்லை! அதை அழகா அர்த்தமுள்ளதா ஆக்கி உனக்கு சொர்க்கத்தை அறிமுகப்படுத்தலாம்னு வந் தேன்!'' உதட்டோரம் குறும்புச் சிரிப்பில் துடிக்கக் கூறினான்.

''ம்! யாரோட பரிதாபப் பார்வையும் அனுதாபமும், எனக்குத் தேவையில்லை!''

தோளைக் குலுக்கி ஒருவித அலட்சியத்துடன் அவள் பகர, ''ஓ! அப்போ காதல் மட்டும் போதும்கிறியா? நன்றி!'' இடைவரை குனிந்து நிமிர்ந்தான் அவன்.

''ப்ச்! ஒரு தடவை சொன்னா உங்களுக்குப் புரியாதா? நல்ல மாட்டுக்கு ஒரு சூடும்பாங்க... தெரியுமா?'' அவள் நக்கலாகக் கேட்டாள்.

''ம்! தெரியும்! ஆனா, அது மாட்டுக்குத்தானே! நான் கம்பீரமா... அழகா... ஆறடி உயரம் இருக்கிற மனுஷன்! எனக்கு சூடெல்லாம் வேண்டாம்! நீதான் வேணும்!''

பார்வை இடுங்க ஒருவிதக் கூர்மையுடன் கூறியபோது, அவனுடைய விழிகள் வித்தியாசமாய் ஒளிர்ந்தன.

அவனுக்குள்ளும் சிறு கோபம் அக்கினி சுவாலையாய் கொழுந்து விட்டெரிவது அதில் தெரிந்தது.

'அவனாகத்தானே தொடர்ந்து வந்து வம்பு செய்கிறான்! நன்றாகப் படட்டும்' என்ற வீம்பும், கோபமுமாய் அவள் திரும்பினாள்.

''சாப்பிட்டாச்சா சுபந்தினி? ஏன்னா.. பசி ஒரு மனுஷ னோட மூளையை மழுங்கடிச்சி செயலிழக்க வெச்சிடும்! பசிக் கொடுமையிலே எதையுமே நிதானமா யோசிக்க முடியாது!''

சட்டென்று இறங்கிய குரலில் கூறினான்.

அதுவரை அனுபவித்த தனிமை, துக்கம், வேதனை, பசி எல்லாமாகச் சேர்ந்து அவளை ஆக்கிரமித்து உருக்க - சீற்றத்துடன் நிமிர்ந்தாள்.

''என்னைப் பாத்துக்க எனக்குத் தெரியும்! யாரும் 'அட்வைஸ்' பண்ண வேண்டாம்!''

கோபமாய்ப் படபடத்தவளையே இடுங்கிய கண் களால் அளவெடுத்தவனுக்குள் சிரிப்புதான் ஆர்ட்டி ஷியன் ஊற்றாய்ப் பொங்கிற்று!

''சுபி! உலகத்துல எத்தனையோ பேர் சாப்பாடு இல்லாம கஷ்டப்படுறாங்க... வாய் பேச முடியாம, கண் பார்வை இல்லாம எவ்வளவு மனுஷங்க வாழறாங்க...



''அவ்வளவு ஏன்? பூகம்பம், சுனாமி, வெள்ளம் - இது மாதிரி பல அழிவுகள் பூமியை பெரிசா பாதிச்சிட்டிருக்கு. அதிலிருந்து மீண்டு, உறவுகளை எல்லாம் இழந்தும், தைரியமா வருங்காலத்தை எதிர் கொண்டு துணிச்சலா வாழ்க்கையை நடத்துறவங்க எத்தனை பேர் தெரியுமா?''

அவன் முடிக்கும் முன்பே அடிக் குரலில் சீறினாள் அவள்.

''இப்ப இந்தப் புள்ளி விபரமெல்லாம் எனக்கு எதுக்கு? நான் உங்களைக் கேட்டேனா?''

''நீ கேக்கலை... ஆனாலும் உன்னை மாத்த வேண்டிய கடமை எனக்கு இருக்கே... எவ்வளவோ கஷ்டப்பட்ட வங்க கூட, உன்னாட்டம் ஒடிஞ்சு போய் நின்னதில்லை!

''வாழ்க்கையை அதோட போக்குல போய் அனுசரிச்சி வாழ்ந்திட்டுதான் இருக்காங்கன்னு சொல்ல வர்றேன்!''

''நீங்க எதுவும் சொல்ல வேண்டாம்... என்னைத் தொந்தரவு பண்ணாம கிளம்பினால் போதும்!''

கையெடுத்துக் கும்பிட்டவளையே கூர்ந்தவன், சட்டென்று சிரித்துவிட்டான்.

''அப்போ... நான் உன்னை பாதிச்சிருக்கேன்... அப்படித்தானே?'' அடிக்குரலில் குறும்புடன் கேட்டான்.

''இல்லை! உங்களாலே எனக்கு எந்தப் பாதிப்பும் இல்லை. அதோ அந்த மரம் மாதிரி... இந்த டீப்பாய் மாதிரி... நீங்களும் என்னைப் பொறுத்த வரைக்கும் ஒரு ஜடப் பொருள்தான்!''

அலட்சியமாகக் கூறிவிட்டு அவள் திரும்ப - சட் டென்று சொடக்குப் போட்டு அவளை அழைத்தான்.

''நன்றி! எங்கே என்னை வெளியே போகச் சொல்லிடுவியோன்னு பாத்தேன்! நானும் ஒரு பொருள்தானே... எந்த விதத்திலயும் உன்னை பாதிக்காதவன் வேற...

''அப்போ 'அங்கிள்' சொன்ன மாதிரி உங்க அம்மா வர்ற வரைக்கும் உனக்குத் துணையா இருக்கலாம்தானே... உனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லையே?'' - வேண்டுமென்றே சீண்டினான்.

''இல்ல! எனக்கு யார் துணையும் தேவையில்லை! அதுவும் அந்தப் பெரிய மனுஷன் சொல்லி யாரும் இங்கே வரவேண்டியதில்லை!''

உதடு சுழித்தபடி அவள் முகம் திருப்ப - அவளுடைய கை வெடுக்கென்று பற்றப்பட்டு சுண்டி இழுக்கப்பட - வேகமாக அவன் புறம் திரும்பினாள்.

''ஒரு விஷயம் ஞாபகம் வச்சுக்க! உங்க அம்மா - அப்பா விவகாரம் அவங்களோட சொந்த விஷயம்! அவருக்கும், அவங்களுக்கும் ஒருத்தரை ஒருத்தர் பிடிச்சிருந்தது. அதனால் அப்படியொரு வாழ்க்கையை வாழ்ந்திட்டிருக்காங்க...

''நியாயப்படி பார்த்தா நீ இவ்வளவு கோபப்படக் கூடாது! தன் அம்மாவையும், தன்னையும் விட்டுட்டு இன்னொரு குடும்பத்தைத் தேடிட்டாரேன்னு மணிதான் கோபப் படணும்! அவன்தான் நிம்மதி இழந்து தவிக்கணும்! அவனே பேசாம இருக்கான்...''

அவன் முடிக்கும் முன்பே கோபத்துடன் இடைமறித் தாள் அவள்.

''ஆமாம்! நீங்க எல்லாரும் ஆண் வர்க்கம்! ஒரு ஆண் தப்பு செஞ்சா அதை தட்டிக் கேக்காம ஜால்ராதானே போடுவீங்க!



''அவருக்கு அப்பாகிட்ட பயம்... சொத்து வேணுமேங்கிற ஆசை... பேசாம இருப்பாரு! என்னால அப்படி இருக்க முடியாது... நியாயம்னு என் மனசுல பட்டதை நிச்சயமா கேட்பேன்!'' படபடவென்று பொரிந்தாள்.

''என்ன... பெரிய நியாயத் தராசை கையில வச்சிருக்கற நீதி தேவதைன்னு நினைப்பா? அவங்கவங்க நிலைமையில இருந்து பாத்தாதான் தெரியும்... ஏன் அவங்க அப்படி செஞ்சாங்கன்னு!'' சுள்ளென்று எரிந்து விழுந் தான்.

''ஆமாமாம்! நீங்க எல்லாரும் தப்பு செஞ்சிட்டு உங்களுக்கு சாதகமா எதையாவது பேசி சமாளிக்கிறதிலே மன்னர்களாச்சே... அதான் நான் எந்த ஆணையும் நம்புறதாயில்லை.

''என் வாழ்க்கையை அவங்ககிட்ட ஒப்படைக்கிற தாயும் உத்தேசமில்லை'' மூச்சு வாங்க நிறுத்தினாள்.

''சுபந்தினி! எல்லா ஆண்களுமே அப்படி இல்லை!... எனக்குத் தோணுது... உங்க அப்பா கூட இப்படி செஞ்சதுக்கு ஏதாவது ஒரு அழுத்தமான காரணம் இருக்கும்னு!''

அவன் முடிப்பதற்குள் வெறுப்புடன் எழுந்தாள் அவள்.

''சே! ஒரு தப்பைக் கூசாம செஞ்சிட்டு, அதை நியாயப் படுத்தறவருக்கு வக்காலத்து வாங்கற உங்களை எல்லாம்... ப்ச்!''

வார்த்தைகளை முடிக்காமல் கோபமாக எழுந்தவளை, இழுத்துப் பிடித்து நிறுத்தியவனின் புருவங்கள் நெறிந்தன.

கூர்மையான அவனுடைய விழிகள், அவள் இதயம் வரை ஊடுருவின.

''என்ன... எங்களை எல்லாம் நிக்க வச்சு 'ஏகே 47' ஆல சுடணும்னு தோணுதா? இல்லை...'' அவன் இழுத்தான்.

அவள் பதில் கூறாமல் வீம்பாகத் திரும்பிக் கொள்ள விடாமல் தொடர்ந்தான்.

''உன்னோட அழகான கண்கள்லே கொஞ்சம் பொய் கலந்திருக்கோன்னு தோணுது! அதைத் தேடலாம்னு பார்த்தா உடனே திரும்பிக்கிறே!'' கேலியாகச் சீண்டினான்.

''என்ன பொய்?'' வெடுக்கென்று கைகளை விடுவித்தபடி திரும்பிக் கேட்டாள்.

''ம்... மனசு முழுக்க என் மேல் இருக்கற காதலை மறைச்சிட்டு, வெளியே முட்பலா மாதிரி வேஷம் போடறீயோன்னு தோணுது... கண்கள்லே வெறுப்பை பொய்யாகசிய விடுறேன்னு சொல்றேன்.''

அவன் சிரிக்காமல் குறுகுறுத்த விழிகளுடன் கூற ஒரு கணம் கண்களை இறுக மூடித் திறந்தவள், வேகமாக ஓடிச் சென்று தன் அறைக்கதவை சாற்றினாள்.



# 14

அறையின் உள்ளே சென்றதுமே ஏதோ ஒரு உந்துதலில் கண்ணாடி முன் சென்று தன் முகத்தை ஆராய்ந்தாள்.



மறுகணமே மனம் விழித்துக் கொள்ள அவன் கூறியது எவ்வளவு பெரிய அசட்டுத்தனம்.

அதை சரி பார்க்கிறோமே என்ற குற்றவுணர்வுடன் சலித்தபடி கட்டிலில் அமர்ந்தாள்.

நெஞ்சுக்குள் விஷாக்கைப் பற்றிய எண்ணங்கள் ஓட ஆரம்பிக்க, அவன் மகா கர்வி என்று தோன்றியது.

'இவ்வளவு அகம்பாவமும், அலட்சியமாகவும் இருப்பவன் ஒருவேளை பெண்களைத் துரத்தும், காமுகனாய் இருப்பானோ?'

- மனம் கேள்வி எழுப்பியது.

'ஏன் என்னையே சுற்றிச் சுற்றி வருகிறான்...? பெண்கள் இவனது கவர்ச்சியில் மயங்கி விழுந்து விட நான் மட்டும் விதிவிலக்காய் இருப்பது இவன் 'ஈகோ'வை வீழ்த்தி விட்டதா...? இதை காதல் என நான் நம்ப மாட்டேன்.'

மனம் முதலில் முரண்பட்டது... ஏனோ உடனே இளகி மென்மையாகி யோசிக்கவும் செய்தது!

அவன் ஆண்மை நிறைந்தவன்தான்... அவனுடைய ஒவ்வொரு அசைவிலும் புலியைப் போன்ற ஒரு லாவகமும், கம்பீரமும், அழுத்தமான நிமிர்வும் தெரிவதை யாராலும் மறுக்க முடியாது...!

உண்மை உறுத்த - உடனே தலையைச் சிலுப்பி, அந்த எண்ணங்களை அழித்தவளின் அமைதி தொலைந்தே போனது.

வெகு நேரம் கழித்து அவள் வெளியே வந்தபோது - கம்பீரமாக, அதே நேரம் சொந்த வீட்டிலிருப்பதைப்

போன்ற இயல்புடன், சோபாவில் சரிந்தபடி டி.வி. பார்த்துக் கொண்டிருந்தான் அவன்.

அவளைக் கண்டதும் சோம்பலுடன் எழுந்து அமர்ந்தான்.

''என்ன கோபமெல்லாம் குறைஞ்சிடுச்சா? அது குறைஞ்சாலே புத்தி கூர்மையாகி, நல்லா யோசிக்க முடியும்!'' குத்தலாக மொழிந்தபடி அவளையே நோக்கினான்.

''எங்க புத்தி எல்லாம் நல்லா கூர்மையாத்தான் இருக்கு... பெண் புத்தி ஒண்ணும் பின்புத்தி கிடையாது... கூர்மையான புத்தி தெரியுமா?'' அலட்சியமாகக் கேட்டாள்.

அவனுடைய புருவங்கள் வியப்பில் உயர - தோளைக் குலுக்கி கைகளை விரித்தான் அவன்.

''நான் வேற மாதிரி. இல்லை கேள்விப்பட்டிருக்கேன்... முன்னாடி தெரியாமப் பேசிட்டு பின்னாடி உணர்ந்தப்புறம் அதுக்காக வருந்துகிற 'பின்' புத்தின்னு நான் படிச்சிருக்கேன்.''

சிரிக்காமல் அவன் கூற - முகம் திருப்பி வேகமாக உள்ளே சென்றாள்.

சாப்பாடு மேசையருகில் சென்று பார்த்தபோது, பாத்திரங்கள் எல்லாம் காலியாகி இருந்தன.

பசி வயிற்றைக் கிள்ள, யோசனையுடன் சமையல் அறைக்குச் சென்றால் - அவனும் பின் தொடர்ந்து வந்திருந்தான்.

''ஒரே பசி! நீ வருவேன்னு பாத்தேன்... வரலை! அதான் எல்லாத்தையும் நானே கபளீகரம் செஞ்சிட்டேன்...''

அவன் கூறியதும் - பசியும், இயலாமையுமாய் உள்ளே பெரும் கோபம் ஊற்றாய்ப் பீறிட்டது.



''கொஞ்சம்கூட மனிதாபிமானம் இல்லாத மனுஷங்க... சே!''

தனக்குள்ளேயே முணுமுணுத்தபடி அவள் குளிர் சாதனப் பெட்டியிடம் செல்ல - உடனே வழிமறித்தான் அவன்.

''என்ன சொன்னே? எனக்கு மனிதாபிமானம் இல்லையா?... ஒரு நோயாளி அங்கே உயிருக்குப் போராடிட்டிருக்காரு... கடைசியா தன் பொண்ணைப் பாக்கணும்னு தவியாத் தவிக்கிறாரு!...

''அவரைப் பாக்க மறுத்துட்டு, ஜாலியா வீட்டில உக்காந்து மூணு வேளையும் சாப்பிட்டுட்டு இருக்கிறவங்க, ரொம்ப மனிதாபிமானம் உள்ளவங்க... நாங்க தான் மோசம்... கடவுளே... நீயே சொல்லுப்பா... எது நியாயம்னு?''

கைகளை விரித்து மேலே பார்த்தபடி கேட்டவனைக் கண்டதும், அவளுடைய கோபம் பல்கிப் பெருகியது தான் மிச்சம்!

''ம்... பசிக்கு சாப்பாடு தராதவங்க எல்லாம் பேச வந்தாச்சு'' - அவள் சலிக்கும் முன்பே,

வாசலில் அழைப்பு மணி ஒலித்தது.

வேகமாகச் சென்று கதவைத் திறந்தால், அங்கு டிரைவர் நமச்சிவாயம் நின்றிருந்தார்.

''அம்மா! விஷாக் தம்பி ஓட்டல்லேருந்து உங்களுக்கு சாப்பாடு வாங்கிட்டு வரச் சொன்னாங்க... இந்தாங்க'' என்று நீட்டினார்.

உள்ளே பொங்கிய சினத்துடன் அதை வாங்கியவள், வேகமாகக் கதவை மூடிவிட்டு அவனிடம் வந்தாள்.

''எனக்கு என்ன வேணும்கிறதை நான் தீர்மானிச்சிப்பேன்! நீங்க ஒண்ணும் எனக்காக முடிவெடுக்க வேண்டாம்!''

''இப்ப நான் என்ன செஞ்சேன்னு உனக்கு இவ்வளவு கோபம்... ம்...?'' அவனும் சீற்றத்துடன் கேட்டான்.

''ம்.. இந்த மாதிரி சாப்பாடு வாங்கித் தர்றதை சொல்றேன்!''

''சரி! நாளையிலிருந்து எல்லா சாப்பாட்டையும் நானே சாப்பிட்டுவிட்டு உன்னை பட்டினி போட்டுடுறேன் போதுமா?''

அவன் வேடிக்கையாக கேட்க, ''இது எங்க வீடு! உங்க மனசுல நீங்க என்னதான் நினைச்சிட்டிருக்கீங்க?'' சுள்ளென்று கேட்டாள்.

''ம் சரி...! இப்பவாவது கேட்டியே? நான் உன்னைத் தான் நினைச்சிட்டிருக்கேன்!''

அழுத்தமான குரலில் கூறி விட்டு, ஒற்றைப் புருவம் ஏற்றி அவன் ரசித்து சிரித்தபோது, அவனிடம் ஏன் பேசினோம், என்று தோன்றியது!

ஆனாலும் அப்படியே விட மனமின்றி, ''ப்ச்! நான் என்ன கேட்டேன்னு புரிஞ்சும் ஏன் இப்படி நக்கலாகப் பேசறீங்க? இப்படி என் கூட நீங்க தனியா இருக்கிறதை, நாலு பேர் பாத்தா என்ன நினைப்பாங்க?... இப்போ நமச்சிவாயும் மாமா வேற பார்த்துட்டாரு!'' கோபமாய் பேசினாள்.

''ம்... ம்... என்ன நினைப்பாங்க? ரொம்ப உரிமையுள்ளவரு... கூடிய சீக்கிரத்துலேயே நெருக்கமான உறவாகப் போறவரு... அதனாலதான், அவங்க அப்பா -



அம்மாவே இவரை வீட்டில் அனுமதிச்சி இருக்காங்கன்னு நினைப்பாங்க!''

சிரிக்காமல் கூறினாலும் அவன் மனதிற்குள் நகைப்பதை, கண்ணாடியாய் முகம் வெளிப்படுத்தியது.

''அவங்க நினைச்சா மட்டும் போதாது... அதை நானும் ஒத்துக்கணும்... அது தெரியுமா?''

''ம்... தெரியும்! அதைத்தான் ஒத்துக்கன்னு சொல்றேன்...! எதுக்கு இவ்வளவு வீம்பும், கோபமும்? மனசிலே இருக்கிறதை தைரியமா வெளியே சொல்ல வேண்டியது தானே?'' சீண்டலாகக் கேட்டான்.

''இல்லாததை எப்படிச் சொல்ல முடியும்?''

''எது? உனக்கு தலைக்குள்ளே எதுவும் இல்லேங்கிறதையா? ஆமாமாம்... இல்லாததை ஒத்துக்க முடியாது தான்!''

தனக்குள்ளே பேசியபடி அவன் நமட்டுச் சிரிப்பு சிரிக்க - பொங்கி வந்த கோபத்தை அடக்க முடியாமல் கையில் கிடைத்த புத்தகத்தைத் தூக்கி அவன் மேல் எறிந்தாள்.

சட்டென்று அதை லாவகமாகப் பிடித்தவன், குலுங்கிக் குலுங்கி சிரிக்க ஆரம்பித்தான்.

''எதுக்கு இப்ப சிரிக்கிறீங்க?''

அவள் எரிச்சலுடன் கேட்க, ''ம்... நம்ம எதிர்கால வாழ்க்கை ரொம்ப ஜாலியா இருக்குமே... அதை நினைச்சி சிரிச்சேன்! இது மாதிரி அப்பப்ப கிரிக்கெட் விளையாடலாம்! நீ பந்து போட்டா நான் சுலபமா 'கேட்ச்' பிடிப்பேன்... நல்லாப் பொழுது போகும்... இரவு - பகலாக விளையாடலாம்!''

குறும்புடன் அவன் கூற, இறுக்கத்துடன் கண்களை இறுக மூடித் திறந்தவள் - ''சே'' என்றபடி வேகமாக மறு அறைக்குச் சென்றாள்.

அவளுடன் வார்த்தைக்கு வார்த்தை பேசி மன்றாடிக் களித்த நிமிடங்கள் பெரும் நிறைவைத் தர, புன்ன கையை சுமந்திருந்தன அவன் உதடுகள்!

சாப்பாட்டைப் பிரித்து வைத்து உண்பதற்கு ஏற்பாடு கள் செய்யும் போதே - உறுதியான காலடி ஓசை அவளைக் கலைத்தது.

''ஏதாவது உதவி வேணுமா சுபி?''

இயல்பாக விசாரித்தபடி அருகிலிருந்த நாற்காலியில் அமர்ந்தவனை நெருப்பாய் உமிழும் விழிகளால் வெறித்தாள்.

''ஏன் இந்தக் கோபம் டியர்? எப்பவுமே பசி வந்தா, பத்தும் பறந்துடும்பாங்க! முதல்லே சாப்பிடு!''

''ம்.. எங்கே... சாப்பிட விட்டாத்தானே...! என் வீட்டிலேயே எனக்கு உபசாரம்... ரொம்பத் தேவைதான்!''

முகம் சுழித்தபடிக் கூறிவிட்டு அவள் சாப்பிட ஆரம்பிக்க, ரசனையுடன் அவளையே வருடின அவன் விழிகள்!

''நம்ம வாழ்க்கை ரொம்ப சுவாரசியமா இருக்கப் போவுது! எதுக்கெடுத்தாலும் பூம்பும் மாடு மாதிரித் தலையாட்டுற ஒருத்தி எனக்குத் தேவையில்லை... ரொம்ப போரடிக்கும்!

''எதையுமே தைரியமா எதிர்த்துக் கேட்டு - தெளிவா முடிவெடுக்கிற ஒரு துணைதான் எனக்கு வேணும்!''

அவன் முடித்தவுடன், மெதுவாகத் திரும்பினாள் அவள்.



''அதை ஏன் என்கிட்டே சொல்லி உங்க நேரத்தை வீணடிக்கிறீங்க! உங்களைக் கல்யாணம் பண்ணிக்கப் போறவங்ககிட்டே போய் சொல்லுங்க!

''அவகிட்டே தான் பேசிட்டிருக்கேன்! ஏன்... அது நீதான்னு உனக்குப் புரியலையா? இல்லை... புரியாத மாதிரி நடிக்கிறியா? கடவுளே... உன்னை எப்படித்தான் இன்னும் வரப் போற காலமெல்லாம் சமாளிக்கப் போறேனோ தெரியலை! ஹூம்!''

ஒரு போலிப் பெருமூச்சுடன் அவன் நிறுத்த, ''எனக்கு அது மாதிரி எந்த எண்ணமும் கிடையாது'' முகத்தில் அறைந்தது போல் வந்தது பதில்!

''அப்படியா? இதுவரைக்கும் சரி... இனிமே அடிக்கடி அப்படி நினைச்சிப் பழகிக்கோ! ஏன்னா... உங்கம்மாவும், அப்பாவும் முடிவு பண்ணிட்டாங்க உனக்கு நான்தான்!''

''அதை நான் முடிவு பண்ணணும் மிஸ்டர் விஷாக்! ரொம்பவும் கனவு காணாதீங்க'' கூறிவிட்டு, ஓய்ந்து போய் சாப்பிட ஆரம்பித்தாள் அவள்.



## 15

அன்று முழுவதுமே, அவள் தன் அறைக்குள் அடைந்து கிடக்க, சோபாவில் படுத்தபடி ஓய்வெடுத்துக் கொண்டிருந்தான் விஷாக்.

மாலையில் ஆறு மணியானதும் கதவைத் தட்டி அவளை அழைத்தவன். ''மேடம்! விளக்கேத்தறது பெண்கள் வேலை! 'சுவிட்ச்' போட்டா எரியாதான்னு கேக்காதே? நான் 'லைட்'டெல்லாம் போட்டுட்டேன்... பூஜை அறையில் மட்டும் தீபம் ஏத்திடு!'' என்றான். உள்ளார்ந்த சிரிப்புடன்.

''ம்க்கும்! இதுக்கு ஒண்ணும் குறைச்சலில்லை.''

அடிக்குரலில் முணுமுணுத்தபடி அவள் செல்ல, குறும்புடன் அவளையே தொடர்ந்தன அவன் விழிகள்.

பிறகு எட்டு மணிக்கு ஜீவராணி வந்துவிட - அந்தக் காரிலேயே கிளம்பி விட்டான்.

''ரொம்ப நன்றி தம்பி!''

கனிவுடன் கூறிய ஜீவாவிடம் விடைபெற்று காரில் ஏறியவனுக்குள் இரவு முழுவதும் சுபியின் நினைவுகளே!

அடித்து முடித்தும் ரீங்காரமாய் ஒலி எழுப்பும் கோவில் மணியைப் போல், அவளைப் பிரிந்து வந்தும் நினைவுகள் விடாமல் தொடர்ந்தன.

வான வீதியில் பூரண சந்திரன் ஒளிப்பிழம்பாய் பவனி வர, அவனுக்குள் பிரகாசமாய் அவளுடைய பதிவுகள்!

மறுநாள் காலையில் மருத்துவமனைக்கு ஜீவா கிளம்புவதற்கு முன்பே, விஷாக் வந்துவிட்டான்.

விழிகளில் கசப்பும், வெறுப்புமாக ஏறிட்ட சுபியை கண்டு கொள்ளாதவன் போல், ஜீவாவிடமே பேசிக் கொண்டிருந்தான்.

அவரும் விடைபெற - அவரை வழியனுப்பிவிட்டு அவன் வீட்டுக்குள் வந்தபோதுதான், அவள் பொங்கி எழுந்தாள்.



''நீங்க என்ன எனக்கு காவலாளியா...! தினம் வந்திட நீங்க?'' கேலியுடன் கேட்டாள்.

''ஆமாம்! இதிலே எனக்கு எந்த வருமானமும் கிடையாது... என் நண்பனுக்காக இந்தக் காவல் காக்குற வேலையைச் செய்ய வேண்டியதாப் போச்சு!''

அவனும் ஏளனமாகவே பதில் கூறினான்.

இந்தப் பதிலை எதிர்பார்க்காததால் வீம்புடன் சென்று தன் அறைக்குள் சிறை புகுந்தாள் அவள்.

கையில் கிடைத்த ஒரு புத்தகத்தை எடுத்துப் படிக்க ஆரம்பித்தபோதும், புலன்கள் ஒருவித விதிர்ப்புடன் இருந்தன.

''இவன் ஏன் என்னை தினமும் அருகிலிருந்து கொண்டு சித்திரவதை செய்கிறான்?'' மனம் பொருமியது.

சரியாக ஒரு மணிக்கு அவளுடைய அறைக்கதவு தட்டப்பட்டது.

வேண்டுமென்று சிறிது நேரம் கழித்து கதவைத் திறந்து வெளியே வந்தவளின் முகம், கோபத்தில் மொட்டாய் கூம்பி இருந்தது.

''சாப்பிடலையா? வர்றியா?'' உற்சாகத்துடன் கேட்டவனையே உறுத்து விழித்தவள் சீறினாள்.

''இது என் வீடு... யாரும் உபசரிக்க வேண்டிய அவசியமில்லை! உங்களுக்கு வேற வேலையே இல்லையா? யாருமே இல்லாத வீட்டில் ஒரு பொண்ணுக்கு...''

அவள் முடிப்பதற்குள் இடைமறித்தான் அவன்.

''புரியுது! தனியா இருக்கிற பொண்ணோட உனக்கு என்ன வேலைன்னு கேட்கிறே... அதானே? நீ

புத்திசாலின்னு நினைச்சேன்... இல்லைன்னா வேணும்னே நடிக்கிறியா?'' மெதுவாகக் கேட்டான்.

அவள் கசப்புடன் திரும்பிக்கொள்ள - மீண்டும் தொடர்ந்தான்.

''சுபி! இங்கே நானா வரலை... உங்க அப்பாதான் என்னை உனக்குத் துணையாக இருக்கச் சொல்லிக் கேட்டுக்கிட்டாரு! அவருக்குத் தெரிஞ்சிருக்கு... நான் ரொம்ப நல்லவன்னு! ம்... நீயும் போகப் போக புரிஞ் சிப்பே!''

அழுத்தமான குரலில் அவன் கூற, பெரும் சீற்றம் ஜெனித்தது அவள் முகத்தில்!

''எனக்கு எதுவும் புரியவேண்டாம்! இந்த அம்மாவுக்கு எவ்வளவு சொன்னாலும் தெரியாது! நான் என்ன குழந்தையா? தனியா இருக்கேன்னு பயப்படுறதுக்கு?''

படபடவென்று பொரிந்தவளையே இடுங்கிய கண் களால் நோக்கினான் அவன்.

''இந்தத் தனிமையிலே என் மனசிலே இருக்கிறதை எல்லாம் உன்கூட பேசிடலாம்னுதான் உங்க அப்பா கேட்டவுடனே நானும் ஒத்துக்கிட்டேன்.''

''எனக்கு உங்ககிட்டே பேசறதுக்கு எதுவுமில்லை... ப்ளீஸ்... என்னைக் கொஞ்சம் நிம்மதியா தனியா விடுறீங் களா?''

சலிப்புடன் கேட்டவளையே, அவன் விழிகள் குறுஞ் சிரிப்புடன் வருடின.

ஏனோ அவன் மேல் கோபமே வர மறுத்தது!

ஊடலும், நேசமும் கண்ணாமூச்சி ஆட, சாப்பிடும் அறைக்குச் சென்றான்.



அவள் சாப்பாட்டை எடுத்து வைத்துக் கொண்டிருக்க, ஏனோ அவளைச் சீண்ட வேண்டும்போல் ஒரு உணர்வு!

''நன்றி! பரவாயில்லையே... உனக்குக்கூட மரியாதை தெரியுது... வீட்டுக்கு வந்திருக்கிற விருந்தாளிக்கு பரிமாறின பிறகுதான் நாம சாப்பிடணும்கிற புத்தியாவது இருக்கே?''

புகழ்வதுபோல் மட்டம் தட்டினவனை சீற்றத்துடன் நோக்கியவள், ''இது எனக்கு! உங்களுக்கு வேணும்னா நீங்களே எடுத்துக்கங்க!'' அலட்சியமாகக் கூறினாள்.

''அதானே! ஏதோ நம்ம மேலேயும் கருணை வந்திருக் கேன்னு பார்த்தேன்.''

அதே தொனியில் நக்கலாகக் கூறிவிட்டு, தனக்கு வேண்டியதை அவன் பரிமாறிக் கொள்ள ஆரம்பித்தான்.

ஒரு தட்டில் எல்லாவற்றையும் எடுத்துக் கொண் டவள், உடனே தன் அறைக்குள் சென்று விட்டாள்.

இதயம் முரசாய் அதிர, தன் மேலேயும் கோபம் வந்தது.

உடனே, இதற்கு ஒரு முடிவு காண வேண்டும் என்ற வேகமும் சேர்ந்தது.



## 16

**சா**ப்பிட்டு முடித்த உடனே வெளியே வந்தவள், ''நான் இப்ப வெளியே போகணும்... அதனால நீங்க கிளம்பலாம்!'' எங்கோ பார்த்தபடி கூறினாள்.

''இப்படி உன்னை அம்போன்னு தனிமையில விட்டுட்டுப் போறதுக்காக நான் இங்கே வரலை! உனக்கு ஏதாவது ஆச்சுன்னா அங்கிளுக்கு நான்தான் பதில் சொல்லணும் தெரியுமா?''

சிறிது கோபமும், அழுத்தமுமாக அவன் பேச - உடனே விதிர்த்துப் போனது அவள் மனது!

''நான் அவரைத்தான் பார்க்கப் போறேன்... அதனாலே யாரும் எனக்காக பதில் சொல்ல வேண்டாம்... என்னைப் பாத்துக்க எனக்குத் தெரியும்!''

''இப்ப போனா பாக்க முடியாது... 'அங்கிள்' தூங்கிட்டிருப்பாங்க... சாயங்காலம் நாம ரெண்டு பேருமாவே போகலாம்!''

ஆழ்ந்த குரலில் அவன் பகர, ''முடியாது! நீங்க உத்தரவு போடுறதுக்கெல்லாம் தலையாட்ட நான் ஒண்ணும் உங்க...'' சட்டென்று உதடு கடித்து நிறுத்தினாள் அவள்.

''சொல்லு... சொல்லு! இப்ப என்ன சொல்ல வந்தே?'' அவசரமாகக் கேட்டான்.

''ம்...! ஒண்ணுமில்லை!''

''ஹூம்! இதுதான் எங்களைப் போல ஆண்களைப் பிடிச்ச சாபக்கேடு! இந்தப் பெண்களே இப்படித்தான்...!

''மத்தவங்களுக்கு புரிகிற மாதிரி எதையும் பேசறது மில்லை... செய்யறதுமில்லை!'' சலித்தபடி சிறு எரிச்ச லுடன் நிறுத்தினான்.

சுள்ளென்று எரிச்சல் பொங்க, ''இப்ப என்ன புரியலை, உங்களுக்கு?'' கோபமாகக் கேட்டாள்.



''ம்... எதுவுமே புரியலை! உனக்கு மட்டும் என்ன வாம்? நமக்காக ஒருத்தன் எல்லா வேலையையும் விட்டுட்டு வந்து இங்கே வந்திருக்கானே...! அவன் கிட்டே கொஞ்சம் மரியாதையா... நாகரீகமா நடந்துப் போம்னு தெரியலையே?''

கண்கள் இடுங்க, சிறு சினம் தொனிக்க அவன் கூறியதும் - அவளும் விடவில்லை.

''மிஸ்டர்! அப்படி நாகரீகம் இல்லாம நாங்க என்ன செஞ்சிட்டோமாம்?''

''ம்... யோசிச்சுப் பாத்தா... தலைக்குள்ளே எல்லாருக்கும் இருக்குமே... மூளைன்னு அது இருந்தாத் தெரியும்!''

சீண்டலாக இழுத்து நிறுத்தியவனையே வெறுப்புடன் வெறித்தவள், ''எங்களுக்குத்தான் அது இல்லை! நீங்கதான் மகா புத்திசாலி போலருக்கு...! என்னன்னு விளக்கறதுதானே?'' என்றாள் ஏளனத்துடன்.

அவன் பதிலொன்றும் கூறாமல் மவுனமாகக் கூர்ந்து நோக்கவே, ''என்ன... சொல்றதுக்கு எதுவுமே கிடைக்கலையா?''

அலட்சியமாக வந்தது அவன் குரல்!

''ஹூம்! முதல்லே வயசுக்கு மரியாதை தந்திருக்கணும்! அப்புறம் பழைய முதலாளி நான்... அதையாவது யோசிச்சிருக்கணும்! அதையெல்லாம்விட நம்ம அம்மா - அப்பாவே இவரை நம்பி ஒப்படைச்சிருக்காங்களே என்பதாவது ஞாபகம் வரணும்?

''எதுவுமே இல்லாம என்னவோ உன் வீட்டு வேலைக்காரன் மாதிரி பேசிட்டிருக்கே! இதிலே நாகரீகம் இல்லாம என்ன செஞ்சிட்டோம்ற கேள்வி வேற? ப்ச்!''

தலையைக் குலுக்கி கண்களை இறுக மூடியபடி தொப்பென்று சோபாவில் சரிந்தான்.

சட்டென்று தன் தவறு புரிந்துவிட - சுபியின் முகம் பயத்திலும், தவிப்பிலும் வெளுத்தது.

''சாரி! நான் ஒரு பெண்! அதுவும் கல்யாணம் ஆகாதவ! இப்படி உங்களை... அறிமுகமில்லாத ஒருத்தரை எனக்கு துணையா வச்சா இந்த ஊர் என்ன பேசும்னு ஏன் அம்மாவும், அவரும் யோசிக்கலை...? அதான் என் கோபம்!'' வீம்புடன் கேட்டு நிறுத்தினாள்.

''என்னது... ரொம்ப ஆச்சரியமா இருக்கு! மத்ததி லெல்லாம் ஆணும், பெண்ணும் சமம்... முப்பத்து மூணு சதவீதம் பத்தாதுன்னு போட்டி போடுறீங்க! இப்ப என்னடான்னா நான் ஒரு பெண்! நீங்க ஒரு ஆண், அது இதுன்னு வசனம் விடறே!

''..........''

''ஏன்! உன்னோட தனியா இருந்தா நான் ஏதாவது தப்பு செஞ்சிடுவேன்னு பயப்படுறியா? நான் என்ன பெண்களையே சந்திச்சதில்லையா? இல்லை, நீதான் உலக அழகியா? எனக்கும் ஒரு தங்கை உண்டு... நினைவிருக்கட்டும்!''

அழுத்தமான குரலில் இறுக்கத்துடன் முடித்தவனையே சஞ்சலத்துடன் நோக்கியவளுக்கு, எதுவுமே பேச முடியாமல் வார்த்தைகள் தொலைந்து போயின.

அவனுடைய ஊசியாய் உரசுகிற ஏளனக் குத்தலும், பார்வையும் அவளை இம்சிக்க - பதில் கூறாமல் அறைக்குள் சென்றாள்.





# 17

மாலை ஆனதும் உடை மாற்றிக் கிளம்பி ஹாலுக்கு சுபி வந்தபோது - அவனும் தயாராகவே இருந்தான்.

''இப்போ நானும் ஆஸ்பத்திரிக்குத்தான் போறேன்... என்கூட நம்பி வர்றதா இருந்தா வரலாம்!''

எங்கோ பார்த்தபடி கூறியவனிடம் மெல்லத் தலையசைத்தபடி பின் தொடர்ந்தாள்.

மருத்துவமனைக்குச் சென்றதுமே பழைய வீம்பையும், பிடிவாதத்தையும் தத்தெடுத்துக் கொண்டது மனது!

படுக்கையில் சாய்ந்து அமர்ந்திருந்த தணிகாசலம், அவளைக் கண்டதும் வேகமாக நிமிர்ந்து வரவேற்கும் விதமாகப் புன்னகைத்து வாஞ்சையுடன் கை நீட்டினார்.

அதைக் கண்டு கொள்ளாதவள் போல் தாயிடம் சென்று அமர்ந்தவளின் முகமே பெரும் இறுக்கமாய்!

''அம்மா! என்னால வீட்டிலே தனியா இருக்க முடியும்...! இது மாதிரி முன்னே பின்னே தெரியாதவங்களை எல்லாம் எனக்கு துணைக்கு வைக்க வேண்டாம்! அந்தப் பெரிய மனிதர்கிட்ட சொல்லிடுங்க!'' அடிக்குரலில் பேசினாள்.

ரகசியம்போல் விழுந்த வார்த்தைகள் விஷாக்கிடம் இறுக்கத்தை வரவழைத்தது!

ஆனால், அவன் பேச ஆரம்பிப்பதற்குள் தணிகாசலத்தின் குரல் இடைமறித்தது.

''சுபிம்மா! இனிமே நீ இப்படி பேசக்கூடாது! விஷாக் தம்பி யாரோ இல்லை... உன்னை விரும்பினவரு! கூடிய சீக்கிரமே கல்யாணம் செஞ்சுக்கப் போறவரு!'' உற்சாகமாய் முடித்தார்.

திக்கென்று அதிர்ந்து நிமிர்ந்தவளின் விழிகள் விரிந்து சூடாகி, அந்த மார்கழி மாலையை உஷ்ணமாக்கின.

''அம்மா! எனக்கு கல்யாணம் செய்யறது இருக்கட்டும்! முதல்லே அவர்கிட்ட கேளுங்க! உங்களுக்கு எப்போ மனைவிங்கிற அந்தஸ்தை தரப் போறாருன்னு? வீட்டில் ஒரு மனைவி அவருக்காகக் காத்திட்டிருக்கும்போதே அதை நினைக்காதவரு அவரு!

''இதே மாதிரி ஒரு தப்பை அவங்க செஞ்சிருந்தா விட்டிருப்பாரா? பொண்ணுங்க மேல மதிப்பே இல்லாம போகப் பொருளா மட்டுமே நினைக்கிறவர்கிட்டே, இப்பவாவது கேக்க மாட்டீங்களா...? தன் முதல் மனைவி இறந்தப்புறமும் உங்களை ஏன் ஆசைநாயகியாவே வச்சிருக்காருன்னு...?''

வார்த்தைகள் நெருப்புக்கங்காய் சிதற, விஷாக்கின் விழிகள் கூர்மையாய் அவளிடமே பதிந்திருந்தன.

''சுபி!... போதும்!''

ஜீவாவின் இந்த அதட்டலை தணிகாசலத்தின் குரல் அடக்கியது.



''விடு ஜீவா!... அவ பேசட்டும்... உண்மையத்தானே சொல்றா! நியாயத்தை பேசக்கூடாதுன்னு இதுவரைக்கும் நாம அவளை அடக்கினதில்லையே?''

''அதுக்காக... உங்களை அவ என்ன வேணாலும் பேசுவா... அதைக் கேட்டுட்டு நான் சும்மா இருக்கணுமா?''

கண்ணீருடன் கேட்டவரை, ஒரு பார்வையாலேயே அடக்கியவர், மகளிடம் திரும்பினார்.

''நான் செஞ்சது தப்புதானே! உப்பு தின்னவன் தண்ணி குடிச்சித்தானே ஆகணும்! ஒண்ணு... என் மனைவியை அடக்குற தைரியம் எனக்கு இருந்திருக்கணும்...

''என்ன சொன்னே சுபி? வீட்டில... என் மனைவி எனக்காகக் காத்திட்டிருந்ததா தானே சொன்னே? ஹூம்... அவ என்னிக்குமே எனக்காகக் காத்திட்டிருந்ததில்லை. என்னை ஒரு மனுஷனா மதிச்சதுமில்லை!

''மணி பிறந்தப்புறம்... அவ என்னைத் தொடாதீங்கன்னப்போ அங்கேயே நின்னு ஒரு பிச்சைக்காரனா தாம்பத்தியத்தை யாசிக்கவும் முடியாம... ஒரு கணவனா வீரத்தை நிலை நாட்டி அவளை அடக்கவும் முடியாம தவிச்ச கோழை நான்!

''ஒருத்தி... மனைவியாவே இருந்தாலும்... அவ விருப்பம் இல்லாமத் தொடுறது தப்புன்றது என் கொள்கை! அப்போ அந்த மனைவிக்கு உண்மையா இருந்திருக்க வேண்டியதுதானேன்னு இப்ப நீங்க எல்லாருமே... ஏன், சுபிக்குட்டியே கேட்டுட்டாளே!

''ஹூம்... அந்தச் சின்ன வயசிலே என்னோட ஐம்புலன்களையும் அடக்கியாளுற சக்தி எனக்கு இல்லாமப் போச்சு! அப்படி நான் உடைஞ்சு நொந்திருந்தப்பதான், ஜீவா என்

வாழ்க்கையில் வந்தா! ஆதரவில்லாம தனிச்சு நின்ன அவளை என் துணையா... புரியாத ஒரு விதப் பாசத்தாலயும், என் சுயநலத்தாலேயும் உடனே ஏத்துக்கிட்டேன்'' என்றவர், ஜீவாவிடம் திரும்பினார்.

''தப்புத்தானே ஜீவா! ஒரு பொண்ணு தன் கணவன் இருக்கும்போது, இன்னொரு ஆணை எந்த சந்தர்ப்பத்திலே ஏத்துக்கிட்டாலும், அதை அசிங்கமா தானே சொல்றோம்! அதைத்தானே நம்ப மகளும் இப்ப சொல்றா!

''அதுக்கு அவ மேலே கோபிச்சுக்கறதைவிட, நம்ம தவறை ஒத்துக்கிறதுதான் சரி! ஏன்னா, இதால பாதிக்கப்பட்டது அவதான் இல்லையா?

''நாம, மனசு ஒத்துப்போய் ஒரு மோதிரத்தையே தாலியா மதிச்சி வாழறது மத்தவங்களுக்குப் புரியும்... அதை அவங்க ஏத்துப்பாங்கன்னு எதிர்பார்க்கிறதே முதல்லே தப்பு ஜீவா!

''அவ கேட்டா பாரு ஒரு கேள்வி! ஏன் உங்க முதல் மனைவி இறந்தப்புறமும் எங்க அம்மாவை இப்படி ஆசைநாயகியாவே வெச்சிருக்கீங்க?'ன்னு! செருப்பால அடிச்ச மாதிரி இருந்துச்சு எனக்கு.''

''............''

''ஜீவா! நாம ரெண்டு பேரும் செய்யறது தான் நியாயம்னு ஒரு கனவுலகில இருந்திருக்கோம்... ஆனா நம்மைச் சுத்தி ஒரு சமுதாயம் இருக்குதே... அதிலே என்ன நடக்குது... நம்ம பொண்ணு பெரியவளா ஆயிட்டாளேன்றதை எல்லாம் உணர மறந்திட்டோம்.

''இப்போ தகப்பன் சாமியா மண்டையில அடிச்சாப்புல என்மக அதைப்புரிய வச்சிருக்கா! நான் ஒரு முடிவெடுத்துட்டேன்!''



''...........''

''அடுத்த வாரமே நம்ம கல்யாணம்! அதுக்கப்புறம் நீங்க ரெண்டு பேருமே நம்ம வீட்டுக்கு வந்துடணும்! இதுதான் என் முடிவு!''

அவர் முடிப்பதற்குள் குறுக்கிட்டாள் சுபி.

''ஒருவேளை... இது மணி அண்ணனை பாதிச்சா?'' - உடனே ஒரு குரல் கதவு பக்கமிருந்து கேட்டது...

அவர்கள் பேச ஆரம்பித்த போதே மணி வந்து விட்டிருந்தான்!

''இல்லை... எனக்கு சம்மதம்! எங்க அம்மாவைக் கூட இருந்து பார்த்தவன் நான்! அதனால எங்க அப்பா செஞ்சது சரின்னு நான் சொல்ல வரலை! ஆனா செஞ்ச பாவத்துக்கு வருந்தி - திருந்தி பிராயசித்தம் செய்ய நினைக்கிறவங்களை மன்னிக்கிறது தான் முறை!

''இதுவரைக்கும் என் வாழ்க்கையில, எங்க அப்பா எனக்கு எந்தக் குறையும் வச்சதில்லை! அவர் ஒரு தகப்பனா நின்று செய்ய வேண்டிய கடமைகளை எல்லாம் என்னைப் பொறுத்தவரைக்கும் நிறைவாகவே செஞ்சாரு!

''அவர் இவ்வளவு உணர்ந்து பேசினப்புறம்... தான் செஞ்ச தப்பை ஒத்துக்கிட்டு அதை சீர் செய்ய முயற்சிக்கிறப்போ அதை நாம தடுக்கக் கூடாது! இதுக்கு மேலயும் உங்க அம்மா மறைஞ்சு வாழ வேண்டாம்... அவங்களுக்கு அந்தத் தண்டனை தேவையில்லைன்னு எனக்குத் தோணுது!''

சட்டென்று முடித்தவனின் குரல் வெகுவாய் நெகிழ்ந்திருந்தது.

''அப்போ... இதிலே உங்களுக்கு எந்த ஆட்சேபணையும் இல்லையா?''

வியப்புடன் கேட்ட சுபியையே யோசனையுடன் ஒரு கணம் அளவிட்டவன்,

''இல்லை! ஆனா ஒரே ஒரு நிபந்தனை! இந்தக் கல்யாணம் நடக்கணும்னா... உங்க அம்மா கழுத்திலே எங்க அப்பாவோட தாலி ஏறணும்னா... நீ அடுத்த முகூர்த்தத்திலேயே என் நண்பன் விஷாக்கை கணவனா ஏத்துக்கணும்... இதுதான் என் முடிவு!'' உறுதியுடன் மொழிந்தான்.

உடனே சிலையாய் சமைந்து நின்றவளின் முன்னே, அவன் கூறிய வார்த்தைகள் விசுவரூபமாய் வாளெடுத்து நின்றன!



## 18

வாழ்க்கை எனும் சதுரங்க விளையாட்டில் அனைவருமாக சேர்ந்து எதிரணியாக ஒன்று திரண்டு... அவளுக்கென 'செக் - டு - குயின்' வைத்தது போல் ஒரு உணர்வு!

பெரும் அலைப்புடன் விஷாக்கிடம் திரும்பியபோது, அவனுடைய முகம் பாறையாய் இறுகியிருந்தது.



விழிகள் உணர்ச்சிகளைத் தொலைத்து, அவளையே ஊடுருவிக் கொண்டிருந்தன.

அதன் கூர்மையில் சட்டென்று விதிர்த்துத் திரும்பியவள், ''ஒருவேளை நான் சம்மதிக்கலைன்னா?'' மெதுவாகக் கேட்டாள்.

''அப்போ, பெரியவங்க கல்யாணமும் நடக்காது'' மணியிடமிருந்து அம்பாய் வந்தது பதில்!

அந்த வார்த்தைகள்... அவளை அனிச்சமலராய் கூம்பச் செய்தன!

இருதலைக் கொள்ளி எறும்பாய் அவள் தவித்தது, சில கணங்கள்தான்!

எதிர்பார்ப்பும், ஏக்கமுமாய் அலை பாய்ந்த கொண்டிருந்த ஜீவாவின் முகமும், கண்களும் தன்னை அறியாமலே அவளை பதிலளிக்க வைத்தன.

''சரி... ஏற்பாடு செய்யுங்க.''

தூக்குமேடைக்கு செல்பவனைப் போன்ற வேதனையுடன் கூறிவிட்டு, அவள் அங்கிருந்து வேகமாக வெளியேற - விஷாக் உடனே பின் தொடர்ந்தான்.

பெரியவர்களின் முகங்களில் இமயம் தொட்ட மகிழ்ச்சி!

உடனே தந்தையின் அருகே வந்து, அவருடைய கையைப் பற்றி ஆதரவுடன் இதமாய் அழுத்திய மணியின் முகத்திலும் அந்த உற்சாகம் தொற்றிக் கொண்டது.

''மணி ரொம்ப நன்றிப்பா! நீ... என் வயித்தில் பிறக்கலைன்னாலும், எங்க பிள்ளைதான்.''

நெகிழ்ந்து கும்பிட்டபடி நின்றிருந்த ஜீவாவின் அருகே வந்தான் அவன்.

''நன்றியெல்லாம் வேண்டாமே! அவ எனக்கும் தங்கைதானே!'' பெருந்தன்மையுடன் கூறியவனையே பார்த்திருந்த தணிகாசலத்தின் விழிகள் பெருமிதம் கலந்த கண்ணீரில் நனைந்தன.

மருத்துவமனையிலிருந்து வேகமாகச் சென்று வெளியே சென்று ஆட்டோவுக்காக நின்ற சுபியைப் பற்றி இரும்பாய்த் தடுத்தது ஒரு கரம்!

''சுபி! வா... காரிலயே போயிடலாம்!'' விஷாக் ஆழ்ந்த குரலில் அழைத்தான்.

''வேண்டாம். நான் ஆட்டோவில் போயிடுறேன்... எனக்கு வழி தெரியும்... இது எங்க ஊர்!'' வீம்பாக மறுத்தாள்.

''இப்போ அடம் பண்ணாம நீயா வந்து காரிலே ஏறுறியா...? இல்லை... அப்படியே அலக்காகத் தூக்கிட்டுப் போயி உன்னைக் காரிலே போடணுமா? எது வசதின்னு நீயே யோசிச்சிக்கோ!''

அழுத்தமாகக் கூறியவனை திரும்ப ஏறிட்டவள், ''என்ன... மிரட்டுறீங்களா?'' சினத்துடன் கேட்டாள்.

''இல்லையே... உண்மைய சொன்னேன்! அதுவே மிரட்டுற மாதிரி இருக்கா? எனக்கு இன்னும் கோபம் வரலை... வர வெச்சிடாதே!''

விழிகளில் சிறு சிவப்பும், கசப்பும் படர ஆரம்பிக்க - மறு பேச்சின்றி வேகமாக வந்து காரில் ஏறினாள்.

செல்லும் வழியில் பெரும் கட்சி ஊர்வலம் குறுக்கிட - வேறு பாதையில் திரும்பிச் சென்றவன், ஒரு விதத் தீவிரத்துடன் அவளிடம் திரும்பினான்.



''இதுக்குத்தான் சொன்னேன்... ஆட்டோவில் வந்தா பெரிய கஷ்டம்! சுத்தித்தான் போகணும்... நான் சொல்றதிலே எப்பவுமே ஒரு நியாயம் இருக்கும்... அதைப் புரிஞ்சி நடந்துக்கலாம்... எப்ப பாரு எதிர்ப் பேச்சு பேசிட்டு வீம்பாவே முகத்தைத் தூக்கி வச்சிட்டு இருக்கணும்கிற அவசியமில்லை!''

நறுக்கென்று தைப்பதுபோல் கூறிவிட்டு - ஏளன முறுவலுடன் அவன் எதிர்புறம் சாலையைப் பார்க்க, ''ப்ச்...'' என்றபடி அலட்சியத்துடன் திரும்பிக் கொண்டாள் அவள்.

வீட்டிற்குச் சென்றதும் உரிமையுள்ளவன் போல் அவன் சோபாவில் சாய - அவள்தான் அறைக்குள் பதுங்க வேண்டியதாயிற்று.

நீறுபூத்த நெருப்பாய் மனம் கனன்று எரிய, உடலெங்கும் அனலாகியதைப் போன்ற ஒரு உணர்வு!

திருமணம் என்ற ஒன்றை ஏற்கவும் மனமின்றி, விஷாக்தான் நினைத்ததை சாதித்து விட்டானே என்ற உணர்வும் எரிமலையாக்க, சட்டென்று அறையிலிருந்து வெளிவந்து - கதவைத் திறந்து தோட்டத்திற்கு வந்தாள்.

மார்கழி மாதத்து முன்னிரவு, பனிப்பொழிவை தூதனுப்பி, பூமியை சிலிர்த்துக் குளிர வைத்துக் கொண்டிருந்தது.

வான ஓடையில் வெள்ளைப் பரிசல்களாய் மேகங்கள்... கண் சிமிட்டும் சுழல்களாய் நட்சத்திரக் காதலர்களின் துணையுடன் நிலவு மட்டும் ஒற்றைப் படகாய் தனித்திருந்தது.

எதிர்காலம் என்ற ஒன்று... தன் கண் முன் வெற்றிடமாய் ஓசையின்றி விரிய - உறைந்து நின்றிருந்தாள் அவள்.

அந்த இடத்தில் சொரிந்திருந்த மரமல்லிப் பூக்களின் நறுமணமும், புதிதாய் மலர ஆரம்பித்திருந்த மருதாணிப் பூவின் வாசனையும் சேர்ந்து, அவளை ஒருவிதக் கிறக்கத்தில் ஆழ்த்தின.

சட்டென்று அருகில் ஏதோ ஒரு அசைவு வர, உணர்வுகள் தன் வசம் மீள்வதாய்!

திரும்பினால் விஷாக்தான் உறுதியான காலடி ஓசையுடன் அருகில் வந்திருந்தான்.

வானத்திலிருந்து இறங்கி வந்த தேவ குமாரனைப் போல் பெரும் கம்பீரம் சுமந்து நின்றிருந்தான்.

அவனுடைய செதுக்கிய முகமும், அந்த ஒளி வீசும் கண்களும், பரந்து விரிந்த தோள்களும், அசாத்திய உயரமும்... அலட்சிய பாவமும்... அவளிடம் முதன் முதலாய் சிறு சலனத்தை ஏற்படுத்துவதாய்!

சட்டென்று குனிந்தவளின் காது அருகில் சீறலாக ஒலித்தது அவன் குரல்!

''உனக்கும் இந்த மாதிரித் தோட்டத்திலே ஏகாந்தமா நிற்கப் பிடிக்குமா? எனக்கும்தான்! சாரி, நான் உன் தனிமைத் தவத்தைக் கலைச்சிட்டேனா?''

முதன் முதலாகக் கனிவும், அக்கறையுமாக வந்த குரலில் உசுப்பப்பட்டு நிமிர்ந்தவளின் விழிகள், சிறு சஞ்சலத்துடன் அவன் விழிகளுடன் கலந்தன.

கண்ணோடு கண் நோக்கி மவுனமாய் உரையாடிய போது, உள்ளே ஏதோ ஒன்று உருகுவதைப் போன்ற உணர்வு அவனுக்குள்!



இதயம் உற்சாகச் சிறகு முளைத்து பரவசமாய் சிலிர்த்தது.

அதே நிமிடம் அவளையும் ஏதோ ஒரு உணர்வு தாக்க - தவிப்பும், கலக்கமுமாய் விழிகளைத் தழைத்தாள்.

''என்ன பயம் சுபி உனக்கு? நம்ம எதிர்காலம் எப்படி இருக்கும்னா?''

அவன் கேள்வியில் விதிர்த்து நிமிர்ந்தவளின் விழிகளில், 'இவன் எப்படி என் எண்ணங்களை அறிந்தான்?' என்ற வினா!

சிறு முறுவலொன்று உதட்டோரம் கசிய, ''எனக்கு எப்படி தெரியும்னுதானே யோசிக்கிறே? இந்த நேரத்தில உனக்குள்ளே இதுதானே ஓடிட்டிருக்கும்! பயப்படாதே நான் கொஞ்சம் கோபக்காரன்தான்! ஆனா, நியாயமான காரணங்களுக்கு மட்டுமே ஆத்திரப்படுவேன்!

''தேவையில்லாத பயத்தினால் நம்ம எதிர்காலம் எப்படி இருக்குமோன்னு மனசைப் போட்டு குழப்பிக்காதே!

''நிச்சயமா... அதை நல்ல சந்தோஷம் நிறைஞ்சதா, நிம்மதியுடையதா ஆக்கறதுக்கு... உனக்குப் பக்கத்தில் எப்பவுமே துணையா நான் இருப்பேன்!

''இப்போ இந்த நிமிஷம் பைபிளோட சில வரிகள்தான் என் ஞாபகத்துக்கு வருது...

**'ஆகாயத்துப் பட்சிகளைப் பாருங்கள்... அவை விதைப்பதுமில்லை... அறுப்பதுமில்லை... களஞ்சியத்தில் சேர்த்து வைப்பதுமில்லை.'**

எவ்வளவு அர்த்தமுள்ள வரிகள்! அந்த மாதிரி சந்தோஷமா இருக்கப் பழகிக்கணும்!

''நாளை எப்படி இருக்குமோ என்ற பயத்தில் இன்னைக்கு கிடைச்சிருக்கிற சந்தோஷத்தை தொலைச்சிடக் கூடாது! புரியுதா?'

சிறு குழந்தையிடம் கூறுவது போல் அவன் ஆழ்ந்த குரலில் வலியுறுத்த, ஏதோ ஒரு வித மாய உலகில் சஞ்சரித்திருப்பது போன்ற உணர்வு அவளுக்கு!

'முதன்முதலாக அவனுடைய வார்த்தைகள் மனதிற்குள் நுழைந்து, சிறு ஜாலம் செய்ய ஆரம்பித்தன.

சட்டென்று திரும்பி உள்ளே சென்றவனைப் பார்த்ததும், சிறு ஏமாற்றம் நெஞ்சுக்குள் விரவிப் பரவியது.

தான் அவனிடம் வேறு என்ன எதிர்பார்த்தோம் என்ற கேள்விக்குத்தான் அவளிடம் விடையில்லை!

மவுனமாக தோட்டத்து கிணற்று மேடையில் அமர்ந்து யோசித்தபோது, சட்டென்று ஒரு அமைதி வந்தது.

சிறிது நேரம் கழித்து மெதுவாக எழுந்து உள்ளே சென்றபோது - ஜீவாவும், மணியும் வந்திருந்தனர்.

''அப்போ நான் கிளம்புறேம்மா!'' என்று ஜீவாவிடம் விடைபெற்றவன், அவள் அருகில் வந்தான்.

''சுபி! நீ இன்னிக்கு ஒரு சம்மதம் சொன்னே இல்லையா...? அதுக்காக வாழ்நாளிலே எவ்வளவு சந்தோஷமா இருக்கப் போறே பாரு!'' என்றபடி மனநிறைவுடன் விடைபெற்றான்.

மெதுவாக உயர்ந்த விழிகளில் - விஷாக்கின் குறும்புச் சிரிப்புடன் கலந்த கம்பீரத் தலையசைப்பும், மவுன விடைபெறுதலும், வெகுநேரம் விலகாமல் பதிந்திருந்தன.





# 19

மறுநாளிலிருந்து நேரம் இறக்கை கட்டிச் செல்ல, மூன்று நாட்களில் மருத்துவமனையிலிருந்து 'டிஸ்சார்ஜ்' ஆனார் தணிகாசலம்!

அந்த வெள்ளிக்கிழமையன்று - விஷாக், சுபி, மணியின் சில நண்பர்கள், நெருங்கிய உறவினர்கள் புடைசூழ, தணிகாசலம் - ஜீவாவின் திருமணம் ஒரு கோவிலில் இனிதாக நடந்தேறியது.

அன்றிரவே விஷாக் அனைவரிடமும் பிரியாவிடை பெற்றுப் புறப்பட - மறுநாளே சுபியும், ஜீவாவும் தூத்துக்குடியில் இருக்கிற அந்தப் பெரிய வீட்டிற்கு வந்து விட்டனர்.

ஒருவித உறுத்தலுடனே அந்த வீட்டிற்கு காலடி எடுத்து வைத்தவளுக்கு, வேலைக்காரர்களின் மரியாதை கலந்த வரவேற்பும், சமையல்கார சாந்தம்மாவின் அனுசரணையான அன்பும் பெரும் இதம் தந்தன.

எந்தவித விகல்பமும் இல்லாமல் உறவும், நட்பும், தொழிலாளர்களும்... இருவரையும் ஏற்றுக் கொண்டது பெரும் அதிசயமாய்!

ஆனால்... தணிகாசலத்தின் இந்தக் குடும்பம் பற்றி எல்லோருமே ஓரளவு அறிந்திருந்தனர்.

அத்துடன் கனகவல்லியுடன் பழகி ஒருவிதக் கொத்தடிமைத் தனத்துடனே வாழ்ந்து வந்த வேலைக்காரர்களுக்கும் கடந்த இரண்டு ஆண்டுகளாகத்தான் விடுதலையே கிடைத்திருந்தது.

ஜீவாவின் வரவு சிறு பயத்தையே அளித்தாலும் - அவருடைய கனிவான பேச்சும், பழகுகின்ற முறையும் தான் இந்த வீட்டிற்கு எஜமானி என்கிற பந்தா இல்லாமல் இயல்பாக இருந்த விதமும் அவர்களைப் பெரிதும் கவர்ந்தன.

மறுநாளிலிருந்தே இருவரும் ஆரத்தில் பதித்த முத்தாய் - இயல்பாகப் பொருந்திப் போயினர்.

மணி அவர்கள் இருவருக்கும் அளித்த மரியாதை வேறு. அங்கு இருவரின் மதிப்பை உயர்த்தப் பெரும் காரணமாய்!

ஜீவாதான் மணியின் பெருந்தன்மையிலும், அன்பிலும் பெரிதும் நெகிழ்ந்திருந்தார்.

தனக்கு ஒரு ஆண் குழந்தை இல்லையே என்ற கவலையை, இனி மணியின் மூலம் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார்.

சுபிக்குமே இந்த உறவெல்லாம் புதிதாய்... ஏதோ ஒரு இனிய பாசக்கூட்டில் சிக்கிக் கொண்ட புரியாத உணர்வு!

அங்கு வந்து சேர்ந்த ஒரே வாரத்தில் ஜீவாவின் கைப்பக்குவமும், பாசமும் மணியை ஈர்த்து விட்டிருந்தன.

வீட்டிற்கு வந்தாலே இதமாகப் பேசி, பிரியத்துடன் உணவு பரிமாறி - தாயின் மறு உருவாய் நின்ற ஜீவாவும், ஒத்த வயதுடையவளாய் நட்புடன் உணர்வுகளைப் பகிர்ந்து கொண்ட சுபியும், அவனுக்கு இன்றியமையாதவர்களாக மாறிப் போனதுதான் உண்மை!



அதுவே தணிகாசலத்துக்கு பெரும் நிம்மதியையும், திருப்தியையும் தர - சீக்கிரமே உடல் தேறி எழுந்து உப்பளத்தையும், 'சா-மில்'லையும் கவனிக்க ஆரம்பித்தார்.

சென்னைக்குச் சென்ற விஷாக்கிற்குத்தான், தனது நிலையைத் தாயிடம் எப்படி விவரிப்பது என்ற தயக்கம்!

ஒரு நாள் மெதுவாக புவனாவிடம் இது பற்றிப் பேச ஆரம்பித்தான்.

முதலில் மணியின் குடும்பத்தில் நடந்த நிகழ்ச்சிகளை அவன் கூறக் கூற, நம்ப முடியாமல் வாயடைத்துப் போனார் அவர்.

எல்லாவற்றையும் கேட்டிருந்தவரால், அவன் கடைசியாகக் கூறியதை மட்டும் ஜீரணிக்கவே முடியாமல் போனது.

''அம்மா! நான் அந்த சுபந்தினியை மனசார விரும்புறேன்! இது... அவ யாருன்னு தெரியறதுக்கு முன்னாடியே நான் எடுத்த முடிவு. அவளைத்தான் நான் கல்யாணம் செஞ்சுப்பேன்...

''அவ நம்ம 'பேக்டரியிலதான் முன்னாடி வேலை செஞ்சிட்டிருந்தா! நான் அவளை விரும்பறேன்னு சொன்னவுடனே மறுத்து, வேலையை விட்டுட்டு விலகிப் போனா!

''அது என்னை ரொம்ப பாதிச்சதாலதான் ஒரு வாரம் லீவு எடுத்துட்டு நான் மணியோட ஊருக்குப் போனேன்!

''ஆனா, அங்கே அவனோட தங்கையாகவே நான் அவளை சந்திப்பேன்னு நினைக்கவே இல்லை... அவ ரொம்ப நல்லவம்மா! அவளைப் பார்த்தா உங்களுக்கும் ரொம்ப பிடிச்சிடும்...

''அங்கிளுக்கும், ஆன்ட்டிக்கும், மணிக்கும் இதிலே ரொம்ப சந்தோஷம்... சுபி மட்டும் முதல்லே பிடிவாதமா மறுத்தா! அப்புறம் மணி ஒரு நிபந்தனை போட்டதால சம்மதிச்சா'' என்று நடந்த விபரங்களைக் கூறினான்.

புவனாவால் எதையுமே நம்ப முடியவில்லை...! அவர் மனதிற்குள் சிறு வெறுப்புத்துளி குமிழியிட்டுப் பீறிடுவதை அறியாமலே அவன் தொடர்ந்தான்.

''உங்க சம்மதம் எனக்கு வேணும்மா! அதுதான் முக்கியம். நீங்க அவளை நம்ம வீட்டு மருமகளா ஏத்துக் கணும்!''

பெரும் எதிர்பார்ப்பும், தவிப்புமாய் முடித்தவனையே ஒரு கணம் கலக்கத்துடன் ஆராய்ந்தவர், ''ஒருவேளை நான் மறுத்தா?'' மெதுவாகக் கேட்டார்.

அந்தக் கேள்வியை அவன் சற்றும் எதிர்பார்க்கவில்லை, என்பதை சட்டென்று இடுங்கிய அவனது விழிகளே அறிவித்தன.

''ம்... வாழ்நாள் முழுவதும் பிரம்மச்சாரியாகவே இருப்பேன்... உங்களுக்கு இந்த வீட்டுக்கு சுதாகர் மூலமா மட்டுமே ஒரு மருமக வரணும்னு விதி இருந்தா அதை யாராலம்மா மாத்த முடியும்?''

விரக்தியுடன் கேட்டு விட்டு அவன் எழ - ஒரு விம்மலுடன் அவனைத் தடுத்தார் அவர்.



''விஷாக்! அதுக்கில்லைப்பா! அவங்க அம்மா இப்படின்னு ஊர் உலகத்துக்கு நம்ம சொந்தங்களுக்குத் தெரிஞ்சா, அப்புறம் நம்ம சாதனாவோட கல்யாணம்... எதிர்காலம்?''

நிராசையுடன் கேட்டவரை அமைதிப்படுத்தி அமர வைத்தவன், ''அம்மா... நாம சொன்னாதானே இது பத்தி மத்தவங்களுக்குத் தெரியும்...? இப்போ அவங்க ரெண்டு பேரும் தம்பதிகளாகத்தான் வரப் போறாங்க!

''மணி, மூத்த தாரத்து மகன் என்பதைக்கூட நாம ஏன் சொல்லணும்? இந்த விஷயம் நமக்குள்ளே மட்டும் இருக்கட்டும்! பிறகு, தெரிய வந்தா - 'எங்களுக்கு எல்லாம் தெரியும்'னு சொல்லிப் பேசறவங்களோட வாயை அடைச்சாப் போச்சு?'' இலகுவாக முடித்தான்.

''எனக்கென்னவோ பயமாயிருக்குப்பா! உன் அத்தைக்கு, அவங்க பொண்ணு ரூபாவை உனக்குத் தரணும்னு ரொம்ப ஆசை! எல்லாரும் எப்படிப் பேசுவாங்களோன்னு தயக்கமா இருக்கு!''

யோசனையுடன் முடித்தவரை சமாதானப்படுத்தியவன், ''எல்லாத்தையும் என்கிட்ட விட்டுட்டு நீங்க நிம்மதியா இருங்க! யார் கேட்டாலும் என்கிட்ட வந்து பேசச் சொல்லுங்க! இந்த வாரமே நாம தூத்துக்குடிக்குப் போய் நிச்சயம் பண்ணிட்டு வந்திடலாம்'' உற்சாகத்துடன் முடித்தான்.

அவள் இல்லாத தனிமை உயிரை வதைக்க - பிரிவுத் துயர் கூட சில நேரங்களில் சுகமான சுமையாவது புரிந்தது.



# 20

மறுநாளே, தொலைபேசியில் தணிகாசலத்திடம் பேசி முடிவு செய்தவன், நெருங்கிய உறவினர்களுக்கு மட்டும் விபரம் கூறி அழைப்பு விடுத்தான்.

சுபியே எதிர்பாராத விதமாக - எல்லாக் காரியங்களும் 'ஜெட்' வேகத்தில் நடக்க ஆரம்பித்தன.

துணிகள், நகைகள் வாங்குவதற்கென்று மணியுடன் நிறைய நேரம் செல்ல வேண்டியிருந்தது.

ஒரு மூத்த சகோதரனாய்... அவளுக்குத் தேவையான வற்றை பட்டியலிட்டு, கூடவே வந்து தேர்ந்து எடுத்தவ னிடம், அவள் அறியாமலே ஒருவிதப் பாசமும், பரிவும் ஊற்றெடுத்தது.

ஆனாலும் இந்தத் திருமண முடிவால், கண்ணைக் கட்டி காட்டில் விட்டது போன்ற நிலையில் இருந்தாள் அவள்.

நிச்சயதார்த்த நாளும் வந்தது.

காலையிலேயே ரெயிலில் வந்துவிட்ட விஷாக் கையும், அவனுடைய உறவினர்களையும் வரவேற்று - நகரில் பெரிய ஓட்டலில் தங்க வைக்கும் பொறுப்பை மணி ஏற்றிருந்தான்.



அவர்களுக்கு எல்லா வசதிகளும் செய்து கொடுத்து விட்டு அவன் கிளம்ப, புவனா அவனை அழைத்தார்.

''மணி! இந்தாப்பா! இது சாயந்திரம் கட்ட வேண்டிய நிச்சயப் புடவையோட ஜாக்கெட்! எப்படியாவது சொல்லி உடனே 'டெய்லர்'கிட்ட தச்சு வாங்கிடுப்பா!'' என்று கொடுத்தார்.

பிறகு, வீட்டிற்குக் கிளம்பியவுடன் விஷாக்கும் வந்தான்.

''ஏய்! நீ எங்கே என்னோட வர்ற! அங்கே சாயந்திரம் தான் மாப்பிள்ளையை வரவிடுவோம்! குறும்புடன் தடுத்தான் மணி.

''ம்... இப்போ நான் மாப்பிள்ளையா வரலை... உன் நண்பனாத்தான் வரேன்... வாயை மூடிட்டு காரை எடு!'' குறும்புடன் கூறிவிட்டு ஏறி அமர்ந்து விட்டான்.

அதைக் கண்ட புவனாவின் நாத்தனார் மனோன்மணி, அவரைக் கலைக்க ஆரம்பித்தார்.

அவருக்குள் தன் மகள் ரூபாவை அவன் மறுத்த கோபம்... தணலாய் கனன்று கொண்டிருந்தது.

''பார்த்து... ஜாக்கிரதையா இருந்துக்க புவனா! இப்பவே விஷாக் இப்படி ஓடுகிறான்...!

''பத்திரம்மா! நம்ம ரூபான்னாக் கூட ஏதோ ஒண்ணுக் குள்ளே ஒண்ணு 'அட்ஜஸ்ட்' பண்ணிப்பா! இவ புதுசு வேற... காதல் மயக்கம் எல்லாத்தையும் மாத்திடும்!

''ஆரம்பத்திலிருந்தே கெடுபிடியாவே இரு! ஏமாளியா இருந்திடாதே... இப்படித்தான் எங்க ஊரிலே காதலிச்சு கல்யாணம் முடிஞ்சி வந்தவ, மறுநாளே மாமியாரை வெளியில அனுப்பிட்டா! ஜாக்கிரதையா இரு!''

பல உதாரணங்களைக் கூறி புவனாவை சஞ்சலத்தில் ஆழ்த்திவிட்டு நிம்மதியாக ஓய்வெடுக்க ஆரம்பித்து விட்டார் அவர்.

புவனாவிற்குள் பெரும் குழப்பமும், சஞ்சலமும் மையம் கொள்ள ஆரம்பித்தன.

மருமகளாக வருபவள் தன் மகனைத் தன்னிடமிருந்து பிரித்து கைக்குள் போட்டுக் கொண்டு போய் விடுவாளோ... - தேவையில்லாத பயமும், கவலையும் அலையலையாய்ப் பரவின.

வீட்டிற்குப் போன மணியும், விஷாக்கும் உற்சாகமாகப் பேசிச் சிரித்தபடி உள்ளே சென்றனர்.

சப்தம் கேட்டு வெளியே வந்த தணிகாசலம், மாப்பிள்ளையை மகிழ்ச்சியுடன் வரவேற்றார்.

பரபரப்புடன் தொடர்ந்து வந்த ஜீவாவும், ''உட்காருங்க மாப்பிள்ளை... அம்மா, தங்கச்சி, தம்பி எல்லாரும் நல்லா இருக்காங்களா? ஓட்டல் அவர்களுக்கு வசதியா இருந்ததா?''

மெதுவாக நலம் விசாரித்தார்.

''எல்லாம் ஓ.கே. ஆன்ட்டி. எந்தப் பிரச்சினையும் இல்லை! எனக்கு ஒரு காபி கிடைக்குமா... ஸ்ட்ராங்கா?'' இயல்பாகக் கேட்டான்.

''இதோ எடுத்துட்டு வரேன் தம்பி'' என்றபடி அவர் திரும்பும்போதே, அவன் குரல் தடுத்தது.

''எனக்கு... காபி வேணும்தான் ஆன்ட்டி...! ஆனா... அது என் 'வுட்பி' கையால கிடைச்சா ரொம்ப சந்தோஷப் படுவேன்...''



குறும்புடன் இழுத்தாற்போல் அவன் கூற, வெட்கத்துடன் உள்ளே சென்றார் அவர்.

சிறிது நேரத்தில் மெல்லிய கொலுசொலி அவனை ஈர்க்கத் திரும்பியபோது, அழகிய இளம் கனகாம்பரப்பூ நிற சேலையில் 'காபி டிரேயு'டன் அழகோவியமாய் எதிரில் நின்றிருந்தாள் சுபி.

விழிகள் பூமியில் பதிந்திருக்க, முகமோ எந்த உணர்ச்சியுமின்றி பனிப்பாறையாய் இறுகித் தெரிந்தது.

முதன் முதலாய் அவளைச் சேலையில் கோவில் சிற்பம்போல் கண்டவனுடைய புலன்கள் சிலிர்த்துப் போயின.

அவனிடம் காபியை நீட்டியவள், நிமிர்ந்து கூடப் பாராமல் திரும்பிச் சென்றபோது, ஏனோ இதயமே வலிப்பது போல்!

அன்று மாலையில் நிச்சயதார்த்தத்தின்போது, அனைவருக்குமே பெண்ணை மிகவும் பிடித்துப் போனது.

புவனாவின் முகத்தில் இனம் புரியாக் கலக்கமும்... சாதனாவின் விழிகளில் சுபியின் அபரிதமான அழகினால் விளைந்த பொறாமையும் விரவித் தெரிந்தன.

சுபியின் மனதில் பெரும் சஞ்சலமும், குழப்பமும் படர்ந்திருக்க - இயல்பாகவே எதிலும் ஒன்ற முடியாமல் அமைதியாக இருந்தாள்.

சுதாகரும், மற்ற உறவினர்களும் சுபியின் அழகில் வாய்மூடி அமர்ந்திருந்தனர்.



# 21

நாட்கள்... நாட்காட்டியின் உதிர்தலோடு விரைய - விஷாக்கின் மனம் மட்டும் சுபியின் நினைவுகளைப் பொக்கிஷமாய் - பாதுகாத்தபடி எதிர்பார்ப்புடன் காத்திருந்தது.

அவன் எதிர்பார்த்த நாளும் வந்துவிட - மிக விமரிசையுடன் திருமணம் சிறப்பாய் நடந்து முடிந்தது.

தனக்கருகில் அலங்கரிக்கப்பட்ட பொம்மையாய் உணர்ச்சிகளின்றி அமர்ந்திருந்தவளை ஏறிட்ட விஷாக்கின் விழிகள், மென்மையாகிக் கசிந்தன.

அவளுடைய பயமும், உணர்வுகளும் புரிய - அவனைக் கண்ணுக்குள் இமையாய் வைத்துத் தாங்க வேண்டுமென்ற உத்வேகம் வந்தது.

முதலிரவு... எல்லா மனிதனுமே பெரும் கனவுடன் எதிர்பார்த்திருக்கிற ஒரு இனிய இரவு!

பலவிதமான மலர்களின் நறுமணங்கள் இதமாய் சூழ்ந்திருக்க, பட்டு வேட்டி - சட்டையில் கம்பீரமாகக் காத்திருந்தான் அவன்.

மெதுவாகக் கதவு திறந்து அவள் உள்ளே வர - எதிர்பார்ப்புடன் எழுந்தபோதுதான் அவளுடைய முகத்தையே சந்தித்தான்.



விழிகளின் ஓரம், இரு கண்ணீர் அரும்புகள் ஜனித்திருக்க, உடனே பதறிப் போனான்.

அவள் அருகே விரைந்து வந்தவன், ''சுபி... என்னாச்சு ஏன் இப்ப அழறே?'' மென்மையாகக் கேட்டான்.

அவளிடமிருந்து வார்த்தை கங்குகள் வெடித்துச் சிதறின.

''இப்ப கேட்டு என்ன பிரயோஜனம்? என் விருப்பத்தை யாராவது கேட்டீங்களா? எனக்கு இந்தக் கல்யாணத்தில இஷ்டமில்லை!'' படபடவெனக் கொட்டி விட்டாள்.

அவனுக்குள் அதுவரை மலர்ந்திருந்த ஒரு இனிய உணர்வு - சட்டென்று வாடிவிட, புலன்கள் இறுகி, விழிகள் கூர்மையாகின.

''ஏன்? என்னைப் பிடிக்கலையா?'' ஆழ்ந்த குரலில் கேட்டான்.

சிறிது நேரம் கழித்துத் தயங்கியபடி வந்தது பதில்!

''உங்களைன்னு இல்லை... யாரையுமே அப்படி நினைச்சிப் பார்க்க என்னால முடியாது!''

''ஏன்?''

கூர்மையுடன் கேட்டவனை ஒருவித மிரட்சியுடன் விழித்து நோக்கியவள், மெதுவாகப் பேசத் தொடங்கினாள்.

''நானும் படிக்கும்போது ஆயிரம் எதிர்காலக் கனவுகளோட இருந்தவதான்!

''ஆனா... எங்க அம்மா - அப்பாவைப் பத்தித் தெரிஞ்சப்புறம் எல்லாமே மாறிப் போச்சு... என்னால இயல்பாவே இருக்க முடியலை!

''ஆண்கள் எவ்வளவு சுயநலமானவங்க... சந்தர்ப்ப வாதிகள்... ஏமாத்துறவங்கன்னு அன்னிக்குத்தான் புரிஞ்சுக்கிட்டேன்!

''ஆதரவில்லாம ஒரு பொண்ணு இந்தச் சமுதாயத்தில தனிச்சி நின்னா, அவளுக்குப் பாதுகாப்பு இல்லை என்பதும், இந்த ஆண்கள் அவங்களை எப்படி வேணாலும் பயன்படுத்தி கீழ்நிலைக்குக் கொண்டு போயிடுவாங்க என்பதையும் உணர்ந்தப்ப, 'ச்சீ'ன்னு ஆயிடுச்சி...!

''எங்க அம்மா இதுக்கு ஒத்துக்கிட்டதை நினைச்சா, அதைவிட அருவருப்பா இருக்கு!

''ஆண் - பெண் திருமணம், இதுமேல நான் வச்சிருந்த மதிப்பும், மரியாதையும் சிதறிப் போயிடுச்சி!

''எனக்கு இதெல்லாம்... இந்தச் சடங்குகள், இல்லற வாழ்க்கை எதுவுமே பிடிக்கலை! யாரோ என் சுதந்திரச் சிறகுகளை வெட்டி, இறுகக் கட்டிப் போட்டுட்ட மாதிரி யான உணர்வில் இருக்கிறேன்.

''எனக்கு யார் மேலயும் நம்பிக்கை வைக்கவே முடியலை! நான் உயிரா விரும்பின... என்னோட அப்பாவே துரோகின்னு தெரிஞ்சப்புறம்... ச்சே!'' குமுறிக் குமுறி அழ ஆரம்பித்தாள்.

''இல்லை! அப்படி எல்லாம் இல்லை! எல்லாமே நாம பார்க்கற பார்வையிலயும், எடுத்துக்கற விதத்திலயும் தான் இருக்கு! அழக்கூடாது சுபி! இப்பதான் எல்லாம் சரியா யிடுச்சே!''

''இல்லை! எதுவுமே சரியாகலை! இப்பவும் உண்மை தெரிஞ்சு உங்க அம்மா என்னை பாக்கற பார்வையே சரியில்லை... எங்க தெருவிலேகூட எல்லாருமே



அப்படித்தான்! நான் எவ்வளவு வெகுளியா இருந்திருக்கேன்... எத்தனை சுலபமா ஏமாளியா ஆக்கப்பட்டிருக்கேன்!''

அவளுடைய தவிப்பும் வேதனையும், அவனுக்குப் புரிந்தன.

''சரி... அதுக்காக நீ ஏன் சிறுமைப்படணும்...? முன்னாடி ஆன்ட்டியும், அங்கிளும் ஒரு முடிவெடுத்து சேர்ந்து வாழ்ந்துட்டிருந்தாங்க... இப்பத்தான் ஆன்ட்டியை மனைவியா ஏத்துக்கிட்டு வீட்டுக்கு அழைச்சிட்டு வந்திட்டாரே?'' மெல்ல வினவினான்.

''தான் செஞ்ச தப்பை சீர்செஞ்சிட்டா... இதுவரைக்கும் நாங்க பட்ட அவமானமும், பாதிப்பும் இல்லைன்னு ஆயிடுமா?''

சீற்றத்துடன் கேட்டவளையே பார்த்திருந்தவனுக்குள், ஒரு சிறு குழந்தையை ஆறுதல் படுத்துகிற உணர்வு மேலிட்டது.

''சுபி! நான் உன்னை எதுக்காகவும், எந்தக் காலத்திலேயும் வற்புறுத்த மாட்டேன்! உனக்கு எப்போ என் மேல நம்பிக்கை வருதோ, அதுவரைக்கும் நான் காத்திட்டிருப்பேன்!

''ஆனா, இது மத்தவங்களுக்கு தெரிய வேண்டாம்... முக்கியமா எங்க அம்மாவுக்கும், ஜீவா ஆன்ட்டிக்கும்! நாம சந்தோஷமா வாழணும்னு நினைச்சி இந்தத் திருமண பந்தத்தை ஏற்படுத்தித் தந்தவங்க அவங்க! வெளி உலகத்துக்கு மட்டுமே இயல்பான கணவன் - மனைவியாவே இருக்கலாம்! புரிஞ்சுதா?''

நேராக விழிகளுக்குள் ஊடுருவி மென் குரலில் கேட்டவனிடம், மறுக்கத் தோன்றாமல் அரை மனதுடன் தலையசைத்தாள்.

தரையில் மெத்தையை விரித்துப் படுத்து உடனே அவள் உறங்கிவிட, காதலின் முதல் துளி மனதில் விழுந்து துளிர்விட்ட அற்புத கணத்தை யோசித்தபடியே வேட்கையுடன் விழித்திருந்தான் விஷாக்.

இதயத்தில் அவள் பெயரே நிறைந்திருக்க, தேயும் நிலவாய் அவன் நிலை!

மூன்று நாட்கள் கழித்து விஷாக்கின் வீட்டிற்கு மறு வீடு சென்றபோது, அந்த வீடு அவளுக்கு பழகி விட்டாலும் புவனாவும், சாதனாவும் சற்ற விலகியே இருந்தனர்.

சுதாகர் மட்டுமே இயல்பான பிரியத்துடன் அவளுடன் ஒட்டிக் கொண்டான்.



# 22

வாழ்க்கைச் சக்கரம் எந்தவித சுவாரசியமும், எதிர்பார்ப்புமின்றி சுழல ஆரம்பித்தது.

விஷாக்கை விருப்பமின்றி மணந்து புகுந்த வீடு வந்தவளுக்கு - புவனாவின் புறக்கணிப்பும், பாராமுகமும் அதிர்ச்சியைத் தந்தன.



அவளாகவே சென்று பேசினாலும் அவர் இயல்பாகப் பேசுவதில்லை. முகமறியா வழிப்போக்கனிடம் நடந்து கொள்வதைப் போல், ஒற்றை வார்த்தையில் பேச்சை முடித்துத் திரும்பிக் கொண்டார்.

அவளுக்குத் தான் பெரும் சஞ்சலமாய்... மகனுடைய முடிவை அவர் ஏற்கவில்லை என்பது புரிய தன் குடும்பப் பின்னணியை அவர் அறிந்திருந்தால்... என்ன நினைப்பாரோ என்ற கேள்வி வேறு அவளை வாட்டியது!

தொடர்ந்த நாட்களில் விஷாக்கும் அவளுமாக புதுமணத் தம்பதியாய் உறவினர் வீடுகளுக்கு விருந்துக்கு சென்று வந்து கொண்டிருந்தனர்.

ஒருமுறை அப்படி திரும்பி வரும்போது தான், மெதுவாக ஆரம்பித்தாள் அவள்!

''உங்ககிட்ட கொஞ்சம் பேசணும்!'' எங்கோ பார்த்தபடி விட்டேத்தியாக சொன்னாள்.

காரை ஓட்டியவனுடைய விழிகள் யோசனையில் இடுங்க - சிறு குறுகுறுப்புடன் அவளிடம் திரும்பினான்.

''ம்... என்கிட்டப் பேசணும்னு நீ சொன்னவுடனே அந்த வார்த்தைகள் என்னென்னவோ எதிர்பார்ப்பையும், கற்பனையையும் உல்லாசமா மனசில உலா வர வச்சிது... ஹூம்... ஆனா, உன் முகம் வேற ஏதோ சொல்லுதே! எனக்கு எங்கே அந்தப் பாக்கியமெல்லாம் கிடைக்கப் போகுது... சொல்லு!''

போலிப் பெருமூச்சுடன் அவன் பேச -

''நாம தப்பு பண்ணிட்டமோன்னு தோணுது... என்ன தான் எங்க அம்மாவுக்காக நான் இந்தக் கல்யாணத்துக்கு சம்மதிச்சாலும், ரொம்ப உறுத்தலா இருக்கு!'' மெல்லிய குரலில் கூறினாள்.

''ஓ! அப்போ அந்த உறுத்தல் இல்லாமப் போகணும்னா, என்னை ஏத்துக்க...! இந்தக் கல்யாண பந்தத்தை நிஜமாக்கிடு!''

சிரிக்காமல் கூறியவனின் குரலில் இயல்புடன் ஒரு அழுத்தமும், உறுதியும் கலந்திருந்தன.

ஒருகணம் விதிர்த்துப் போனாள் அவள்.

''இல்லை... அதை நான் சொல்லலை! அத்தைக்கும் இந்தக் கல்யாணத்துல இஷ்டமில்லைன்னு தோணுது! சாதனாவும் எப்பவுமே ஒதுங்கியே தான் இருக்கா! சுதாகர் மட்டும் தான் என்கிட்டே...''

அவள் முடிப்பதற்குள் இடை மறித்தான் அவன்.

''சுதாகர் மட்டுமில்லை... நான் கூடத்தான் உன்கிட்டே அன்பாப் பழகி, என்னைப் புரிய வைக்க எவ்வளவோ முயற்சிக்கறேன்!

''நீதான் பிடிவாதமாக இருக்கே! அது மாதிரித்தான் அவங்களும்! கொஞ்ச நாளானா மாறிடும்... சரியாயிடுவாங்க!''

அவன் பேச்சு அவள் சினத்தை வெகுவாய்த் தூண்டிவிட, ''அவங்க வேணா மாறலாம்! என்னால முடியாது...'' வீம்புடன் முடித்துவிட்டுத் திரும்பிக் கொண்டாள்.

''ம்...! இப்படியேதான் வீம்பையும், பிடிவாதத்தையும் உடும்பாய் பிடிச்சிட்டிருப்பேன்னு சொல்றே! பாப்போம்!''

வீட்டிற்கு வந்தபோது, புவனா தான் அவர்களை வரவேற்றார்.

''விஷாக்! நீங்க ரெண்டு பேரும் எப்போ தேன் நிலவுக்கு போகப் போறீங்க?''



அவர் கேட்டதும் அதிர்ந்தவளுக்கு அப்போது தான் நினைவு வந்தது...

''சாப்பிட்டாயா? ஏதாவது வேண்டுமா?'' என்பது போன்ற பொதுவான கேள்விகளைத் தவிர, வேறு எதைப் பற்றியுமே புவனா அவளிடம் பேசுவதில்லை.

சுபி தயங்கி நிற்கும்போதே, அவளுக்கு நிம்மதி தரும் விதமாகப் பதில் அளித்தான் அவன்.

''அம்மா! ஏற்கெனவே நிறைய நாள் லீவு எடுத்தாச்சு! ரெண்டு, மூணு மாசம் கழிச்சிப் போகலாம்னு நாங்க ரெண்டு பேருமே முடிவு எடுத்துருக்கோம்... இல்லையா சுபி?''

அவன் கேட்டவுடன், அந்த நெருக்கமான சொற்களில் நாணேற்றிய வில்லின் விரைப்புடன் உறைந்து நின்றாள் அவள்.

* * *

நாட்கள் மாதங்களாகி விரைந்தன...!

இருவருமே வாழ்க்கை நாடகத்தில் பிறர் அறியாமல் மவுனப் போர் நடத்திக் கொண்டிருந்தனர்.

ஒரு நாள் இரவு, விஷாக் வருவதற்கு நேரமாகி விட்டது.

அவள் சோபாவிலேயே சாய்ந்து உறங்கி விட, அழைப்பு மணி ஒலித்ததும் கதவைத் திறந்து விட்டு புவனாதான் அவளை எழுப்பினாள்.

''தம்பி வந்தாச்சு... சாப்பாடு போடுறியா?'' மெதுவாகக் கேட்டு விட்டு உள்ளே சென்றார்.

உடனே பதறி எழுந்தவள், வேகமாகச் சென்று சப்பாத்தி செய்ய ஆரம்பித்தாள்.

அவன் சாப்பிடும்போது அவள் ஜன்னலோரம் சென்று வேடிக்கை பார்த்திருக்க, திடீரென்று புவனாவின் குரல் அவளைக் கலைத்தது.

''சுபந்தினி! விஷாக்குக்கு குருமா எடுத்து வை!'' கூறிய புவனாவின் முகம் ஏதோ யோசனையில் இருந்தது.

உடனே அவள் எடுத்து வைக்க, சாப்பிட்டு முடித்து 'வாஷ்பேசினி'ல் கை கழுவச் சென்றான் அவன்.

''ஏம்மா! அவன் கூடப் போய் கை துடைக்க துண்டு எடுத்துக் குடுக்கறது? எல்லாமே நான் சொன்னாத்தான் செய்வியா?'' குத்தலாகக் கேட்டார் அவர்.

வார்த்தைகள் முகத்தில் அறைந்தாற் போல் வலிக்க வைக்க, ஒரு கணம் கண்களை இறுக மூடித் திறந்தவள் - வேகமாக அவனிடம் சென்றாள்.

''ரொம்ப தேங்க்ஸ்... அழகா பரிமாறி, இப்ப டவலும் எடுத்துத் தர வந்ததுக்கு!''

குறும்புடன் கூடிய குரலில் சீண்டினான்.

''ப்ச்... எனக்குப் பிடிக்கலை!'' உதடுகளை சுழித்தபடி, பகர்ந்தவளை ஒரு நொடி அளவிட்டவன், ''ம்... எனக்குப் பிடிச்சிருக்கே!'' என்றபடி அவளுடைய முந்தானையைப் பிடித்து சட்டென்று தன் கைகளைத் துடைத்தான்.

ஒருவித விதிர்ப்புடன் அவள் விலகி, விழிகளில் தீக்கங்குகளை சிதறவிட - ஒரு நமட்டுச் சிரிப்புடன் அங்கிருந்து சென்றான்.

உடனே பின் தொடர்ந்து வந்தவள், ''ஏன் அப்படி செஞ்சீங்க? எனக்கு இதெல்லாம் பிடிக்காதுன்னு தெரிஞ்சும் இப்படி செய்ய உங்களுக்கு வெக்கமா இல்லை?'' அடிக்குரலில் சீறினாள்.



''இல்லியே! என் மனைவியோட முந்தானையில கை துடைச்சதுக்கு நான் ஏன் வெக்கப்படணும்! ம்... அதோட அம்மா வேற அங்கே இருந்தாங்க... நாம எலியும், பூனையுமா நின்னா... அப்புறம் அவங்களுக்கு சந்தேகம் வர ஆரம்பிச்சிடும்... அதான்! புரியுதா?''

அவனுடைய பேச்சில் இருந்த நியாயத்தை ஏற்றுக் கொள்ள மனமின்றி, ''புரியலை! எதுவுமே புரியலை! ஒண்ணு மட்டும் நல்லாத் தெரியுது! உங்களை ரொம்ப நல்லவராக காட்டி அப்பாவை மடக்கிட்டீங்க!

''எங்க அம்மாவோட சூழ்நிலையை உங்களுக்கு சாதகமாக்கி, எல்லாருமா சேர்ந்து என்னை இதுல மாட்ட வச்சிட்டீங்க!'' சீற்றத்துடன் பொருமினாள்.

''ஏய்... முட்டாள் மாதிரி பேசாதே!''

''ம்... வேற எப்படிப் பேசுறதாம்? 'செஸ்'லே ராணிக்கு 'செக்' வைக்கிற மாதிரி என்னை ஒரு சதுரங்கக்காயாக்கி எல்லாரும் விளையாடினதை என்னால மறக்கவே முடியாது...''

''அப்படி வச்சி உன்னை என்ன காயப்படுத்திட்டோமா...? நீ நல்லாத்தானே இருக்கே!''

''சந்தர்ப்பம் கிடைக்கிற வரைக்கும் எல்லா மனுஷனுமே நல்லவன்தான்! எங்க அப்பா மாதிரி, வலிய வந்த வாய்ப்பை விடுறதுக்கு ஆண்கள் ஒன்றும் ராமர்கள் இல்லை... எனக்கு இந்த விஷயத்தில் உங்க மேல நம்பிக்கை வரப் போறதும் இல்லை!'' கூறிவிட்டு கண்களை இறுக மூடிக் கொண்டாள்.

விரக்தியுடன் படுக்கையில் சாய்ந்தவளால், அதன் பிறகு வெகு நேரம் உறங்க முடியவில்லை!



# 23

காலம் வேக முனைப்புடன் விரைய, அவன் மீது எதில் குற்றம் கண்டு பிடிக்கலாம் என்று காத்திருந்த அவளுடைய எதிர்பார்ப்பு பொய்த்துப் போனது.

வீட்டில் எவரிடமும் இயல்பாக ஒன்ற முடியாதவளுக்கு சுதாகர் மட்டுமே வடிகாலாகிப் போனான்.

அங்கு சமையலுக்கும் மேல் வேலைக்கும் ஆட்கள் இருப்பதால், பொழுது போகாமல் இருந்தவளுக்கு மாலை நேரங்கள் அவனுடன் செல்ல, அதுவே பெரும் நிறைவு அளிப்பதாய் ஆனது.

அவன் 'பிளஸ்-1' இறுதித் தேர்விற்குப் படிக்க, அவனுக்கு கணக்குப் பாடம் சொல்லித்தர ஆரம்பித்தாள் அவள்.

'தனக்கு ஒரு தம்பி இல்லையே?' என்ற நீண்ட நாள் மனக்குறையை அவனுடைய பிரியமும், ஒட்டுதலும் போக்கின.

விடுமுறையில், சுபி சொல்லித்தர ஆரம்பித்ததிலிருந்து, அவனிடம் பெரும் மாற்றம் வந்திருந்தது.

அதுவரை எழுபது சதவீதம் வாங்கித் தேறிக் கொண்டிருந்தவன், இப்போது தொண்ணூறு மதிப்பெண்கள் எடுக்கத் தொடங்கி இருந்தான்.



அன்று, மாதத் தேர்வுக்கான பரீட்சை பேப்பருடன் வீடு வந்தவன், ஹாலில் இருந்த மற்றவர்களை விட்டு விட்டு, நேராக சுபியிடம் சென்றான்.

''அண்ணி! உங்களாலே தொண்ணூத்தைஞ்சு சத மார்க் வாங்கியிருக்கேன்! ஆ... காட்டுங்க!'' என்றபடி ஒரு 'சாக்லேட்'டைப் பிரித்து அவள் வாயில் போட்டான்.

புவனாவின் விழிகள் வியப்பும் ஆர்வமுமாய், இருவரையும் நோக்க - முகம் சுளித்தபடி எழுந்தாள் சாதனா!

''போதும்டா உன் அண்ணி புராணம்! ரொம்பத்தான் அலட்டிக்காதே! முதல்லே அந்த பேப்பரை ஒழுங்காகத் திருத்தி இருக்காங்களா பாரு! 'மார்க்'கை தப்பாய் போட்டிருக்கப் போறாங்க! நக்கலாகக் கூறினாள்.

''சாதனா! திடீரென்று ஒலித்த அதட்டலான குரலில், அனைவருமே கலைந்தனர்.

''என்ன? வாய் ரொம்ப நீளுது! அவன் நல்ல 'மார்க்' வாங்கினதுக்கு காரணம் சுபின்னா, அதைப் பாராட்டுறது தானே முறை! உனக்குப் பிடிக்கலைன்னாலும் இதை ஒத்துக்கிட்டுதான் ஆகணும்... முதல்லே அண்ணிகிட்டே 'சாரி' கேட்டுட்டு உள்ளே போ!''

ஆழ்ந்த அமர்ந்த குரலில் விஷாக் அதட்ட -முகம் கசங்கி அவளிடம் திரும்பினாள் சாதனா.

''சாரி...'' வேண்டாவெறுப்பாக முணுமுணுத்து விட்டு அவள் தன் அறைக்குள் செல்ல, புவனா தன் மருமகளைப் பார்த்து அதிசயத்தக்க வகையில் இதமாக முறுவலித்தார்.

நேராகத் தன் தம்பியிடம் வந்தவன், அவனுடைய தலைமுடியை ஆதரவாகக் கோதியபடி ''வாழ்த்துக்கள்!'' என்றான்.

''நன்றிண்ணா...!'' என்றபடி அவனுக்கும் ஒரு 'சாக்லேட்டை' அளித்துவிட்டு, தாயிடம் ஆசி பெறச் சென்றான் அவன்.

விஷாக்கைத் தொடர்ந்து அறைக்குள் வந்த சுபியிடமே நிலைத்தன, அவன் விழிகள்!

''தேங்க்ஸ்... எனக்காக விட்டுக்குடுக்காம உங்க தங்கைகிட்டே பேசினதுக்கு!''

மெல்லிய குரலில் அவள் சொல்ல - மெதுவாக அவள் அருகே வந்தான்.

''இதுக்கு எதுக்கு நன்றியெல்லாம்? என்னால... எதுக் காகவும்... எந்தக் காலத்திலயும், யார்கிட்டேயும் உன்னை விட்டுத்தர முடியாது சுபி... ஏன்னா? நீ என் மனைவி!''

அவனுடைய அழுத்தமான பதில், அவளுடைய இதயத்தில் சம்மட்டியாய் அறைந்தது.

பிறகு தொடர்ந்த நாட்களில் புவனா அவளிடம் சிறிது இயல்பாகப் பழக ஆரம்பிக்க, சுதாகர் தான் திடீரென்று மாறிப் போனான்.

திருமணம் முடிந்த இந்த ஆறு மாதங்களில், அவனை இப்படி அவள் பார்த்ததேயில்லை.

ஏதோ ஒரு மாற்றம் அவனிடம் தெரிய, அவளிடம் பெரும் கவலைபடர்ந்தது.

காலாண்டு பரீட்சையில் எல்லாப் பாடங்களிலும், மதிப்பெண்கள் மிகவும் குறைந்திருந்தன.

படிப்பு மட்டுமே முக்கியம் என உற்சாகமாகத் திரிந் தவன், கடந்த இரு மாதங்களாக எதையோ பறி கொடுத் தவன் போலிருப்பதை அவளால் உணர முடிந்தது.



ஆனால், அதைப் பற்றி யாரிடமும் அவளால் இயல் பாக பேசமுடியாது போயிற்று.

புவனாவும், சாதனாவும் அவளை ஒரு பொருட்டாகவே மதிப்பதில்லை... விஷாக்கிடம் கூறவும், அவளுடைய 'ஈகோ' இடம் தரவில்லை.

பெரும் குழப்பத்தில் இருந்தவள், சுதாகர் இந்த ஆண்டு 'பிளஸ்-2' என்பதால், இதுபற்றி ஒரு முடி வெடுத்து தானே அவனிடம் பேசமுடிவு செய்தாள்.

ஒருநாள், விட்டத்தை வெறித்தபடி தன் அறையில் அமர்ந்திருந்தவன், அவள் வந்ததையே கவனிக்க வில்லை!

மெதுவாகச் சென்று அவன் அருகில் நின்றவள், ''சுதாகர்! உனக்கு என்ன பிரச்சினை? ஏன் கொஞ்ச நாளா ரொம்ப 'டல்லா' இருக்கே?'' பரிவுடன் விசாரித்தாள்.

பதறிப் போய்த் திரும்பியவனின் விழிகள், நீரில் நிறைந்திருந்தன.

மறுகணமே, முகம் பொத்திக் குமுறிக் குமுறி அழ ஆரம்பித்தான்.

''சுதாகர்... என்னாச்சு! ஏன் இப்படி அழுறே?''

பெரும் குழப்பத்துடன் அவனைப் பிடித்து உலுக்கி னாள்.

வெகுநேரம் கழித்து சமாதானமாகி நிமிர்ந்தவன், ''அண்ணி! நான்... ஒரு தப்பு செஞ்சிட்டேன்!'' நடுங்கிய படி கூறினான்.

அவள் அமைதியாய் அவனையே வெறித்திருக்க, மெது வாக தான் காதல் வயப்பட்டதைப் பற்றி கூற ஆரம்பித்தான்.

''அண்ணி... அவ என் வகுப்புல தான் படிக்கிறா! வினிதான்னு பேரு... இந்த வருஷம் தான் வந்து சேர்ந்தா!

எனக்கு அவளை ரொம்பப் பிடிச்சிருக்கு! நான் முதல் 'மார்க்' எடுத்ததிலிருந்து, அவள் என்னோடு ரொம்ப நெருக்கமாயிட்டா!

''எந்த சந்தேகம்னாலும் என்கிட்டே தான் கேப்பா! வகுப்பில் யாரிடமும் பேசாதவ, என்கிட்ட பழகுறதாலே எல்லாருக்கும் என்மேல பொறாமை! அவங்க எல்லாமே, ஒரு மாதிரிப் பேச ஆரம்பிச்சிட்டாங்க...

''என் நண்பன் ஒருத்தன், அவ என்னைத் தான் காதலிக்கிறதா சொல்லி ஏத்தி விட்டுட்டான்! அதிலிருந்து அவள் என்ன செஞ்சாலும், அதை எனக்காகவே செய்யற மாதிரி இருக்கு!

''என்னால படிப்புல பழைய மாதிரி ஆர்வம்காட்ட முடியலே அண்ணி!''

குற்ற உணர்வுடன் முடித்தவனைப் பார்த்தால் பெரும் பரிதாபமாய் தெரிந்தது!

அப்படியே அவன் கைகளைப் பிடித்துக் கொண்டு, அவனுடைய சிகையை மென்மையாகக் கோதிவிட்டாள் சுபி.

''சுதாகர்! ஒண்ணு சொன்னா கேட்பியா? நான் என்ன சொன்னாலும், அது உன் நல்லதுக்குதான் என்ற நம்பிக்கை உனக்கு இருக்கில்லையா?''

மென்குரலில் கேட்டவளையே கண்ணீரும், வியப்புமாய் பார்த்தபடி 'ஆம்' எனத் தலையசைத்தான்.

அவன் விழிகளில் நம்ப முடியாத ஆச்சர்யமும், சஞ்சலமும் தெரிந்தன.



''ஏன் அப்படிப் பாக்கறே?''

வாஞ்சையுடன் கேட்டவளிடம் ''இல்லை... என் மேல ரொம்பக் கோபப்படுவீங்கன்னு எதிர்பார்த்தேன்... ஆனா!'' தயங்கியபடி இழுத்து நிறுத்தினான்.

''ப்ச... உன்மேல கோபமெல்லாம் இல்லை... பரிதாபம் தான்வருது! இந்த வயசு அப்படித்தான் சுதாகர்! மனம் ரொம்ப அலைபாயும்! நானும் அந்த வயசைக் கடந்து தானே வந்திருக்கேன்...

''இந்த உலகத்திலே நமக்காகத்தான்... பூக்கள் மலருது... குயில் கூவுது... வானவில் வருது... அப்படின்னு தோணும்! நம்ம அழகை ரசிக்கத்தான் மத்தவங்க இந்த உலகத்திலேயே ஜனிச்சி இருக்காங்க என்கிற ஆணவம் கூட வரும்... உன்னை மாதிரி அழகா இருந்தா! ஆனா அது உண்மையில்லை... எல்லாரும் இயல்பாதான் இருப்பாங்க...

''இப்பப்பாரு அந்தப் பொண்ணே கூட உன்கிட்ட நட்பாகத் தான் பழகி இருப்பா. இந்த வயதிலே 'ஹார்மோனோட' விளையாட்டோ என்னவோ தெரியலை... ஈர்ப்பு வரும்... எப்படியெல்லாமோ கிறுக்கா யோசிக்க வைக்கும்!

''ஆனா இதை எல்லாம் ஒரு பொருட்டா எடுத்துக்காம, படிப்பில முழு கவனமும் செலுத்தி நம்மோட உணர்வுகளை ஜெயிச்சிட்டோம்னு வை... எதிர்காலத்தில் இந்த நாட்களைத் திரும்பிப் பார்த்தா, நாம இப்படியா இருந்திருக்கோம்னு கேலியா சிரிக்கத் தோணும்... சீ... இதுக்குப் போயா இப்படி அலைபாய்ஞ்சு, உடைஞ்சு போயி பைத்தியமா இருந்திருக்கோம்னு நம்மைப் பாத்தே நாம சிரிக்கிற நேரமும் வரும்...

''தேவையில்லாத எண்ணங்களை மனசுல ஏத்திட்டு கஷ்டப்படக்கூடாது சுதா! இப்போ, நீ இப்படி நினைக்கிறது ஒரு வேளை அந்தப் பொண்ணுக்கு தெரிய வருதுன்னு வெச்சிக்க! உன்மேல அவளுக்கு இருக்கிற மதிப்பு, மரியாதையெல்லாம் கூட நீ இழக்க நேரிடும்!

''அவ மனசுல எந்தத் தப்பான எண்ணமும், கல் மிஷமும் இருந்திருக்காது... இது தெரியாம நீ அவகிட்டே காதல் அது இதுன்னு உளறி இருந்தேன்னுவை... நிச்சயமா அவ உன்னை வெறுத்திருப்பா!

''இது படிக்க வேண்டிய வயசு சுதாகர்! அதுவும் இந்த ஆண்டு உன் எதிர்காலத்தையே நிர்ணயம் பண்ணுறது! இந்த வயசு, ஒரு ரெண்டுங்கெட்டான் வயசு.

''வாழ்க்கையைப் பத்தின எந்த ஒரு முடிவையும், இப்போ இந்த வயசுல எந்த புத்திசாலியும் எடுக்கமாட் டான்! நீ புத்திசாலி! நான் சொல்றது புரிஞ்சுதா?

''முதல்லே நல்லாப்படி... உங்க அண்ணன் மாதிரி படிச்சிமுடிச்சி ஒரு வேலைன்னு ஆனப்புறம் வந்து சொல்லு... நான் இதே பொண்ணை தான் அண்ணி விரும்புறேன்னு! அப்போ, உனக்காக நானே நிச்சயமா அத்தைகிட்டேயும், உங்க அண்ணன்கிட்டேயும் பேசி முடிச்சி வைக்கிறேன்... சரியா?''

கனிவும், கரிசனமுமாய் கேட்டவளை ஏறிட்டும் பார்க்க முடியாமல் - வெட்கத்திலும், கழிவிரக்கத்திலும் தலை குனிந்தான் அவன்.

''என்ன... என் மேல வருத்தமா? பேசவே மாட் டேன்றே?''



அவள் கேட்டவுடன், அப்படியே அவள் மடியில் சரிந்து சிறு குழந்தையாய் தன் அறியாமையைக் கரைத்துக் கொள்ள ஆரம்பித்தான் அவன்.

''அழக் கூடாது சுதா... ஆண்கள் அழுதா எனக்குப் பிடிக்காது...! கண்ணீர் மனுஷனை ரொம்ப பலவீன மாக்கிடும்... அழுறதால எதையுமே சாதிக்க முடியாது.

''நம்ம கண்ணீர் கூட தகுதியான விஷயத்துக்குத்தான் வரணும்... இந்த மாதிரி சின்னச் சின்ன பிரச்சினை களுக்கெல்லாம் அழுகை வந்தா, அதுக்கு மதிப்பில்லாமப் போயிடும்!''

அவனை சமாதானப்படுத்திவிட்டு வெளியே வந்த வள், அங்கு அழுது சிவந்த விழிகளுடன் புவனாவை சத்தியமாக எதிர்பார்த்திருக்கவில்லை. உடனே விதிர்த் துப் போனவளை அணைத்துக் கொண்டார் அவர்.

''சுபி! ரொம்ப நன்றிம்மா! அவனுக்கு ஒரு அண்ணியா, அம்மாவா என்ன செய்யணுமோ அதை செஞ்சிட்டே! உன்னை... உங்க அம்மாவோட பழைய வாழ்க்கையைப் பத்தி கேள்விப்பட்ட உடனே, ரொம்ப தப்பா நினைச் சிட்டிருந்தேன்... என் மகன் ரொம்ப அதிருஷ்டசாலிம்மா! இனிமே எனக்கு நீயும் ஒரு மகதான்!''

நெகிழ்ந்து கூறியவர், அவளைப் பிடித்து அழைத்துச் சென்று, தன்னிடம் இருந்த பீரோ இரும்புப் பெட்டிகளின் கொத்துசாவிகளை அவளிடம் அளித்தார்.

''எனக்கு நம்பிக்கை வந்துடுச்சிம்மா... என் காலத்துக்கு பிறகு என் குழந்தைகளை நீ நல்லாப் பாத்துப்பே!''

தழுதழுத்த அவரின் குரலை, விஷாக்கின் பேச்சு திடீரென்று இடைமறித்தது.

''என்னாச்சு? மாமியாரும், மருமகளும் இத்தனை நாளா எதிரும்புதிருமா நின்னுட்டிருந்தீங்க? இன்னிக்கு மழையே வரப் போகுது!''

குறும்புடன் அவளையே கூர்ந்தபடி கூறியவனுடைய விழிகள், சுபியின் முகத்தையே கூடாரமிட்டிருந்தன.

அதன் கூர்மை தாங்காமல் உடனே விழிகளைத் தழைத்தாள் அவள்.

''எனக்கு இதெல்லாம் வேண்டாம் அத்தை! இந்த வீட்டோட பொறுப்பு எல்லாம் எப்பவும் போல உங்ககிட்டயே இருக்கட்டும்! நான் இப்பத்தானே வந்திருக்கேன்.''

பெருந்தன்மையுடன் நிராகரித்து விட்டுச் சென்றவளையே, இருவருடைய பார்வையும் பிரமிப்புடன் தொடர்ந்தன.



## 24

நேரே தோட்டத்திற்கு சென்ற போது அவள் மனம் வெகுவாய்த் தெளிந்திருந்தது.

'வெகு நாட்கள் கழித்து ஒரு நல்ல விஷயம் செய்தோம்' என்ற உணர்வில் நெஞ்சம் நெக்குருக நிமிர்ந்த போது, வானமும் நிர்மலமாய் மேகங்களின் ஆதிக்கமின்றி அந்தி சிவப்பில் இருந்தது.



திடீரென்று அழுத்தமான காலடியோசை அருகில் வர திரும்பினால் - விஷாக் நின்றிருந்தான்.

''நன்றி சுபி! என் தம்பி மேல... என் குடும்பத்து மேல இவ்வளவு அக்கறை எடுத்துக்கிட்டதுக்கு! அம்மா ரொம்ப நெகிழ்ந்து போயிட்டாங்க!''

உணர்ச்சிகள் நிறைந்த குரலில் கூறினான்.

''வெல்கம்...'' மெதுவாக முணுமுணுத்துவிட்டுத் திரும்பி உள்ளே சென்றவளையே, ஏக்கத்துடன் தொடர்ந்தன அவன் விழிகள்.

வீட்டிற்குள் போன சுபிக்குள்ளும், இன்று பெரும் சலனம்!

நாட்கள் கடந்தன... ஒரு நாள் அவன் தொழிற்சாலையில் இருந்து வந்தவுடன் அவள்'டிபன்' தட்டை நீட்ட, அதை கையில் வாங்கிக் கொண்டவனுடைய புருவங்கள் இரண்டும் குறும்புடன் உயர்ந்தன.

''என்ன... என் மேல பயங்கர பாசம் வந்துட்ட மாதிரி இருக்கு... நீ கொஞ்சம் கொஞ்சமா மாறிட்டிருக்கே... அது தெரியுமா!'' உல்லாசக் குரலில் கேட்டான்.

அதுவரை ஆழ் மன வெளியில் பதுங்கி இருந்த கோபமும், வக்கிரமும் சட்டென்று மேலெழும்பின.

''ஹூம்! காமாலைக்காரனுக்கு கண்டதெல்லாம் மஞ்சளாத் தெரியுமாம்... அது மாதிரி இருக்கு!''

''இல்லை... உன் மனசுக்குள்ளே நான் நுழைஞ்சிட்டேன்... அதை என்னால் நிரூபிக்க முடியும்!'' அழுத்தமாக வந்தது அவன் குரல்!

''ம்... வீண்முயற்சி...! எப்படியும் தோற்கத்தான் போறீங்க'' ஏளனத்துடன் உதடுகளைப் பிதுக்கினாள்.

''முயற்சி செஞ்சதாலே தான் எவரெஸ்டு சிகரத்தையே எட்டிப் பிடிச்சாங்க... நிலாவுக்குப் போயிருக்காங்க... செவ்வாய் கிரகத்திலே உயிரினங்கள் இருந்திருக் கணும்னு கண்டுபிடிச்சிருக்காங்க...''

''அவங்க எல்லாம் அவ்வளவு தூரம் போய் சாதிச் சிருக்கும் போது, இவ்வளவு பக்கத்துல இருக்கிற உன் மனசுக்குள்ளே நுழையறதா கஷ்டம்...? ம்?''

கிண்டலும், கேலியுமாக அவன் கேட்க - ''என் மனசு பாறை மாதிரி... அதிலே யாரும் நுழைய முடியாது!''

அவளும் வீம்பாகக் கூறினாள்.

''அப்படியா? ஆனா, அது பனிப்பாறையோ? இப்பல்லாம் என்னைப் பார்க்கிற பார்வையிலேயே இளகி உருக ஆரம்பிக்கிற மாதிரி தெரியுது!'' வேண்டுமென்றே அவளைச் சீண்டினான்.

''இல்லை! எனக்கு என் மேல முழு நம்பிக்கை இருக்கு... உங்களுக்குத்தான் மனசு ரொம்ப அலைபாயுது... உணர்வுகள் உங்க கட்டுப்பாட்டில் இல்லை போலிருக்கு!''

''ஆமாம்! ஆனா, அது இப்ப ஆரம்பிச்சது இல்லை... உன்னைப் பார்த்த முதல் நாளிலிருந்து எனக்குள்ளே நிகழ்ந்திட்டிருக்கற ஒரு மவுனப் போராட்டம் அது!''

''ஆமா! உங்ககிட்டே வேலை செஞ்ச மத்த பெண்களெல்லாம் உங்க பணத்தைப் பார்த்ததும் பல்லை இளிச்சிட்டு பின்னாடியே வந்திருப்பாங்க... நான் மசியிலேன்னதும் திருமணத்தால் என்னைக் கட்டிப் போட்டுட்டீங்க!''

சட்டென்று, அவனுக்குள் சிறு சீற்றம் பரவுவதாய்!



''ச்சீ... இப்படிப் பேச உனக்கு வெக்கமா இல்லை... எனக்கு நீ மட்டும் தான்! ஒரு நாள், நீ மாறுவே! உன் மனசுலயும் காதல் இருக்கு! ஆனா அதை வெளிப்படுத்த மறுக்கறே... உன்னை நீயே ஏமாத்திக்கிறே!''

அவன் முடிக்கும் முன்பே இடைமறித்து, வார்த்தைகளில் திராவகத்தை வீசினாள் அவள்.

''ம்! நான் மாறமாட்டேன்... வேறு ஒரு அழகான பொண்ணைப் பாத்தா நீங்க தான் மாறுவீங்க! ஆண்களே அப்படித்தானே! மலருக்கு மலர் தாவுற வண்டுகளாச்சே... பலவிதமான மலர்கள்லே தேனை சுவை பாக்கறது தானே அவங்க பழக்கம்!''

குத்தலுடன் அவள் முடித்ததும், அவன் முகம் சிவந்துவிட, தன்னை அறியாமலே ''ஏய்...'' எனக் கையை ஓங்கிவிட்டான்.

''என்ன... அடிச்சிடுவீங்களா? அடியுங்க... பெண்கள்னா உங்களுக்கெல்லாம் அடிமைகள்...! இல்லைன்னா அனுபவிச்சி கசக்கி எறிகிற போகப் பொருள்கள்... அதானே...''

வார்த்தைகள் பெரும் கசப்பும், இகழ்ச்சியுமாக வர - ஒரு கணம் கண்களை மூடித்திறந்தான். ''ப்ச்... நான் தப்பு பண்ணிட்டேன்'' என்ற ஒற்றை வார்த்தையுடன் விலகிச் சென்றான்.

முதல் முறையாக அவனுடைய வார்த்தைகள் அவளது மன வேர் வரை பாய்ந்து வலிக்க வைத்தன.

தொடர்ந்த நாட்களில், சுபியிடமிருந்து விஷாக் தொலை தூரம் விலக ஆரம்பித்திருந்தான்.

அவளுக்கே இப்போதெல்லாம் பெரும் குற்ற உணர்ச்சி வந்திருந்தது.

ஒரு நல்லவனை அதிகமாக சீண்டிவிட்டோமோ... ஆண்கள் மீது தான் கொண்ட பொதுவான ஒரு அபிப்பிராயத்தை அவன் மீது திணித்து தேவையில்லாமல் ஒரு இடைவெளியை, விலகலை உண்டாக்கிவிட்டோமோ என்ற உணர்வே நெருடலாய்!

ஒருநாள், சாதனாவின் கல்லூரியில் இருந்து 'போன்' வந்திருந்தது.

எடுத்துப் பேசிய போது, கல்லூரியின் முதல்வர் - சுபியை உடனே வரும்படி அழைத்தார்.

கிளம்புவதற்கு முன், இந்த விஷயத்தைப் பற்றி அவள் புவனாவிடம் கூறியதும், அவரும் பதற்றத்துடனே உடன் வந்தார்.

கல்லூரிக்கு சென்றால் அங்கு முதல்வரின் அறையில் ''ஓ''வென்று கத்தி ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருந்தாள் சாதனா!

சுற்றிலும் நின்ற அவளது தோழிகள், அவளை சமாதானப்படுத்த முயன்று தோற்றுப் போயிருந்தனர்.

என்னவென்று புரியாமல் இருவரும் தவிக்கும் போதே, தாயிடம் ஓடி வந்தாள் அவள்.

''அம்மா... 'பிரின்சிபால்' என்னைப் பாக்கற விதமே சரியில்லை! இது மாதிரி தான் யார்கிட்டே இருந்தெல்லாமோ தினம் 'எஸ்.எம்.எஸ்.' வருது...! எல்லாரும் என்னை அடையத் துடிக்கிறாங்க தெரியுமா?''

ஒரு 'சைக்கோ'வைப் போல் கத்தி ஆர்ப்பாட்டம் செய்ய ஆரம்பித்தவளைக் கண்ட புவனா, சரிந்து அமர்ந்து வாயைப் பொத்தி விம்ம ஆரம்பித்தார்.



எதுவுமே புரியாமல் நின்றிருந்த சுபியிடம் வந்தவள் ''அந்த 'புரொபசர்' என்னைப் பாக்கற பார்வையே சரியில்லை அண்ணி! நான் அவருக்கு 'அட்ஜஸ்ட் பண்ணி 'சரண்டர்' ஆகணும்னு 'மார்க்'கெல்லாம் குறைச்சிப் போடுறாரு.''

அவள் வெறி பிடித்தவள் போல் கத்த, உறைந்து போனாள் சுபி.

'கடவுளே! போன மாதம் தானே ஒரு பிரச்சினையை தீர்த்து முடித்தோம்... இது என்ன புது வேதனை?'

அவள் யோசிக்கும் போதே, அவளுடைய தோழிகள், அருகில் வந்தனர்.

சாதனாவின் நிலையையும், அவளிடம் வந்திருக்கிற விநோதமான மாறுதலையும் பற்றி பயத்துடன் விவரித்தனர்.

அவர்கள் பேசி முடித்த போது, சுபியின் தலையே சுழல ஆரம்பித்தது.

பிறகு முதல்வரிடம் அனுமதி வாங்கி அவளை வீட்டிற்கு அழைத்துச் சென்றவுடனே, விஷாக்கிற்கு 'போன்' செய்தாள்.

அவளுடைய குரலைக் கேட்டதுமே, சட்டென்று ஒரு வித இறுக்கமும், விலகலும் வருவது தெரிந்தது.

''நீங்க உடனே வீட்டுக்கு வாங்க... சாதனாவுக்கு கொஞ்சம் உடம்பு சரியில்லை'' கூறிவிட்டு போனை வைத்தாள்.

அடுத்த அரைமணி நேரத்தில் பதற்றத்துடன் வீட்டிற்கு வந்தவன், சாதனாவின் நிலையைக் கண்டதும் பெரிதும் ஓய்ந்து போனான்.

மெதுவாக அவனிடம் நடந்த விஷயங்களை மனைவி கூறிய போது, அவனால் எதையுமே நம்ப முடியவில்லை.



## 25

அன்றே, ஒரு மனநல மருத்துவரிடம் 'அப்பாயிண்ட்மெண்ட்' வாங்கி, சாதனாவை அழைத்துச் சென்றனர்.

அவளை பரிசோதித்த மருத்துவர், அவளிடம் தனியாகப் பேசினார். அவளுடைய பிரச்சினையை அறிந்த பிறகு, புவனாவையும் அழைத்து பேசினார்.

பிறகு சாதனாவின் நெருங்கிய தோழிகளிடமும், தான் கட்டாயம் பேசிப் பார்க்க வேண்டும் என்றார்.

அவர்களிடம் பேசிய பிறகு தான், விஷயம் என்னவென்று விளங்கியது.

சாதனாவின் அழகும், அதில் அவள் கொண்ட கர்வமுமே எல்லாவற்றிற்கும் காரணம் என்றார் அவர்.

அவளிடம் பேசியதை நெருங்கிய உறவுகள் என்று விஷாக்கிடமும் சுபியிடமும் டாக்டர் தெரிவித்த போது, இருவருமே பெரிதும் அதிர்ந்து போயினர்.

சாதனாவிற்கு எப்போதுமே 'செல்போன்', 'எஸ்.எம்.எஸ்.' என்றால் பைத்தியம்!

கல்லூரி நாட்களில் அழகிய பெண் என்பதால், அவளுக்கு அதிகமான காதல் சம்பந்தப்பட்ட குறுஞ்



செய்திகளும், அவளை விரும்புகிறேன் என்பது போன்ற தகவல்களும் வர ஆரம்பித்திருக்கின்றன.

தோழிகள் அனைவரும் எச்சரித்தாலும், எல்லாவற்றிற்கும் விளையாட்டாக பதில் அனுப்ப ஆரம்பித்திருக்கிறாள் அவள்.

தான் பெரிய உலக அழகி என்ற மாயை உள்ளுக்குள் விசுவரூபம் எடுக்க ஆரம்பித்திருக்கிறது.

எல்லோரும் தன்னையே பார்க்கிறார்கள்... தன்னை மட்டுமே விரும்புகிறார்கள்... தான் பெரிய அழகி... என்கிற கர்வம் பொங்கி எழுந்திருக்கிறது.

எதிர்படுகிற எல்லா ஆண்களுமே, தன் அழகில் மயங்கி நிற்பதாக தோழிகளிடம் ஒரு நேரத்தில் வெளிப்படையாகவே பேசியிருக்கிறாள்.

அதுவே... தன்னிடம் இயல்பாகப் பழகும் சக தோழன், முதல்வர் பேராசிரியர் அனைவருமே தன்னை தவறான எண்ணத்தில் தான் பார்க்கின்றனர் என்று புகார் கொடுக்கும் அளவுக்கு போயிருக்கிறது.

ஒரு பேராசிரியரைப் பற்றி அவள் புகார் கூறியபோது, அவரை கண்டித்து எச்சரித்து அனுப்பிய முதல்வருக்கு அவள் கரம் தன் முன் நீண்டதும் தான் தவறு எங்கே என்பது புரிந்திருக்கிறது.

அது அப்படியே நீடித்து - மனநோயாய் மாற, இப்போது உலகத்தில் உள்ள அத்தனை பிரபலமான ஆண்களும் தன்னை அடையத் துடிப்பதாக புலம்பும் அளவிற்குப் போயிருக்கிறது.

எல்லாவற்றையும் அவர்களிடம் கூறிய டாக்டர், சகலத்தையும் விளக்கினார்.

பிறகு அவளுக்கு சிகிச்சை செய்ய ஆரம்பித்தார்.

தினமும் அவளை அழைத்து வரச் செய்து பேசி 'கவுன்சிலிங்' கொடுத்து, அவளுடைய நிலையை மாற்றும் முயற்சிகளில் ஈடுபட்டு மருந்தையும் தந்தார்.

ஒருநாள், அவர்களுடைய வீட்டிற்கு புவனாவின் சித்தி பெண் வத்சலா வந்திருந்தார்.

சாதனாவைக் காணோம் என்று அவர் விசாரிக்க, புவனாவிற்கு சட்டென்று என்ன பதில் சொல்வது என்றே தெரியவில்லை.

அவளை தூக்க மாத்திரை கொடுத்து பகலிலும் ஓய்வெடுக்க வைத்திருந்தனர்.

உடனே சமயோசிதமாக பதிலளித்தாள் சுபி.

''அவ கல்லூரி தோழிகளோடு சுற்றுலா போயிருக்கா அத்தை! ஒரு வாரத்துல வந்துடுவா'' என்றபடி 'டிபன்' எடுத்து வந்து தந்தாள்.

அப்போதுதான், புவனாவால் நிம்மதியாகவே மூச்சுவிட முடிந்தது.

இன்று மாலையில் டாக்டரிடம் 'கவுன்சிலிங்' இருக்க - மூவரும் வெளியில் அமர்ந்திருந்த போது - மருமகளுடைய கையைப் பிடித்துக் கொண்டு புவனா அழுது தீர்த்துவிட்டார்.

''விஷாக் எல்லாம் சொன்னப்ப, நான் உன்னைத் தப்பா நினைச்சேம்மா! உங்க அம்மாவே இப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்ந்திருக்கும் போது, நீ எப்படி இருப்பியோன்னு விஷாக்கிட்டே மறுத்தேன்!

''இப்ப பாரு... நான் தான் தப்பு பண்ணி இருக்கேன்... என் பொண்ணை சரியா வளர்க்கலை... இதிலே ஊரார் வீட்டுப் பொண்ணை குத்தம் சொல்லி இருக்கேன் பாரு!''



குற்ற உணர்வில் கூசி அழுதவரை, மெல்ல அணைத்து சமாதானப்படுத்தியவளை... மறுபுறம் அமர்ந்திருந்த விஷாக்கின் விழிகள் இடுங்கி கூர்மையுடன் அள விட்டன.

* * *

நாட்களின் விரைவு ஓட்டப்பந்தயத்தில்... மருத்துவ சிகிச்சையின் விளைவாக சாதனாவும் மெல்ல மெல்ல சரியாக ஆரம்பித்தாள்.

இப்போது, அவளிடம் பழைய அகங்காரம், திமிர், ஏளனப் பார்வைகள் எல்லாமே தொலைந்துவிட்டன.

பேச்சிலும் பெரும் மாற்றம் வரத் தொடங்கி இருக்க - அமைதியும், அடக்கமான குரலுமாய் நிறையவே மாறி இருந்தாள்.

இப்போதெல்லாம், 'அண்ணி... அண்ணி!' என்று எல்லா விஷயத்திற்கும் சுபியைத் துணைக்கு அழைக்கும் பழக்கம் புதிதாய் வந்திருந்தது.

எப்போதும் அறைக்குள்ளேயே சுணங்கி இருப்பவளை கோவில், சினிமா, கடைவீதி என்று சுபியே அழைத்துச் செல்ல ஆரம்பித்திருந்தாள்.

சினிமாவிற்கு மட்டும் பெண்களை தனியே விடாமல் துணையாக விஷாக் வந்துவிடுவான்.

இருவரும் இப்போது நல்ல தோழிகளாகி இருந்தனர்.

ஒரு நாள் அனைவரும் கடற்கரைக்குச் சென்றிருந்த போது, சுபியின் கையைப் பிடித்தபடி கண் கலங்கி எல்லாவற்றிற்கும் அவள் மன்னிப்பு கேட்க - அந்தத் தருணமே இருவரையும் மேலும் நெருக்கமாக்கியது.

சுதாகரும், தன்னுடைய இனக்கவர்ச்சியில் இருந்து மீண்டு, இயல்பாகி இருந்தான்.

பழையபடி அவன் உற்சாகமாக படிப்பதைக் கண்டவளுக்கு, பெரும் பாரம் இறங்கிய நிம்மதி!

புவனாவும் இப்போது எல்லாப் பொறுப்புகளையும் அவளிடம் ஒப்படைத்திருந்தார்.

இந்த மூன்று மாதங்களில் குடும்பத்திலுள்ள அனைவரின் மனதிலும் நீங்கா இடம் பிடித்திருந்தாள் சுபி.

எல்லோரிடமும், பெரும் மாற்றம் வந்திருந்தது.

சுதாகர், அந்த அரை ஆண்டு பரீட்சையில் வகுப்பில் முதல் மாணவனாகத் தேறி இருந்தான்.

வெகுநாட்களுக்குப் பிறகு முதல் முறையாக லேசாகி இருந்த மனத்துடன் தோட்டத்தில் அமர்ந்து வானையே வெறித்திருந்த சுபிக்குள் பல கேள்விச் சரங்கள்!

சுதாகர் சரியாக வேண்டும்...! சாதனா மீண்டு வர வேண்டும்!! புவனா நிம்மதியாக இருக்க வேண்டும்! என்று இதுவரை வேண்டிய தன் பிரார்த்தனை பலித்ததுடன் புதிராய் ஒரு வினாவும் கூடவே எழுந்தது.

'இதையெல்லாம் நான் எதற்காக செய்கிறேன்... விஷாக்கின் குடும்பம் என்பதால் தானே... அவன் நிம்மதியாக இருக்க வேண்டுமென்றுதானே...!'

ஆழ்மனதில் தேங்கி இருந்த குழப்பப் பாசிகளை விலக்கி, மெல்ல எட்டிப் பார்த்தது ஒரு சஞ்சல உணர்வு!

ஆனால், அவளிடம் இருந்து விஷாக் முற்றிலுமாக ஒதுங்கியே இருந்தான்.

மறந்தும் கூட அவளை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. பேசுவதும் இல்லை!



எத்தனை அலைகள் அடித்தாலும் உடையாத பெரும் பாறை... சிறு உளிக்கு உடைவது போல், அவளது வார்த்தைகளால் அவன் நெஞ்சம் சிதைந்திருந்தது.

சாதனாவின் நிலையும், தன் வாழ்வின் முரண்பாடும் அவனை நிலை குலையச் செய்து பெரிதும் ஓயச் செய்திருந்தன.

தன் இயல்பைத் தொலைத்து பாறையாய் இறுகி இருந்தவனுக்குள், எல்லோருக்கும் அமைவது போல் தனக்கு மட்டும் ஏன் இனிய வாழ்க்கை அமையவில்லை என்ற விரக்தி உணர்வு!

ஆனால், எல்லாருக்கும் எல்லாமே, அமைந்துவிட்டால் கடவுள் - விதி என்பதற்கே பொருள் இல்லாமல் போய்விடுமே என்று தோன்ற - அவன் இதழோரங்களில் ஒரு விரக்திப் புன்னகை நிரந்தரமாகவே இடம் பிடித்துக் கொண்டது.



## 26

தலைப் பொங்கலுக்கு அவர்களை ஊருக்கு அழைத்துச் செல்ல வந்திருந்தான் மணிகண்டன்.

அடுத்த மாதம் தங்களுடைய முதல் திருமண நாள் வருவது, அப்போது தான் அவளுக்கு நினைவுக்கு வந்தது.

அவளுக்கு மணியைப் பார்க்கும் போதே மிகவும் பெருமையாய்...!

தன் தந்தை செய்த தவறையும் மன்னித்து, அவருடைய இரண்டாவது குடும்பத்தையும் தம்முடன் இணைத்துக் கொள்வதற்கு, எவ்வளவு பெருந்தன்மை வேண்டும் என்பதும் புரிந்தது.

அவனை ஒரு சகோதரனாய் சுவீகரித்திருந்தவள் மன மார்ந்த பாசத்துடன் அவன் கையைப் பற்றி வாஞ்சையுடன் வரவேற்று உபசரித்தாள்.

இப்போது ஜீவாவும், அவனும் தாய்-மகன் என்ற பாசப் பிணைப்பில் இதமாய் இறுக்கப்பட்டிருப்பது அவன் பேச்சிலேயே தெரிந்தது.

சுபி ஊருக்குக் கிளம்புகிறாள் என்றதுமே சாதனாவும் சுதாகரும் சோர்ந்து போயினர்.

இரண்டே நாட்களில் திரும்பிவிடுவதாக அவர்களிடம் வாக்குறுதி அளித்துவிட்டுக் கிளம்பிய போது, புவனாவும் கண்கலங்கிவிட்டார்.

விஷாக்கிற்கு தான் பெரும் ஆச்சர்யமாய்... தன்னுடன் முகம் கொடுத்துக் கூடப் பேச மறுப்பவள் - தன் குடும்பத்திடம் பாசத்துடன் ஒட்டிக்கொண்டதும், அனைவரையும் மனதார உறவாக ஏற்றுக் கொண்டதும் புரியாத புதிராய்!

மூவரும் தூத்துக்குடியில் இறங்கியதுமே, சுபிக்குள் பழைய ஞாபகங்கள் காட்டாற்று வெள்ளமாய்ப் பெருக சந்தோஷமும், சஞ்சலமும் இணைந்து வட்டமிட்டன.

காரில் வீட்டிற்குச் சென்று இறங்கியபோது - வாசலிலேயே காத்திருந்த தணிகாசலமும், ஜீவாவும் மகிழ்ச்சியுடன் இருவரையும் வரவேற்றனர்.



தாயின் கைகளை வாஞ்சையுடன் பற்றி விசாரித்தவள், தந்தையின் பக்கமே திரும்பவில்லை.

தணிகாசலத்தின் முகம் எதிர்பார்ப்புடன் அவளையே நோக்கிவிட்டு - வேதனையுடன் கசங்கிவிட, அதை ஓரக்கண்ணால் கவனித்துவிட்டார் ஜீவா.

தணிகாசலத்தின் முக மாற்றம் பெரும் வாட்டத்தைத் தர, மெதுவாக சுபியிடம் இதுபற்றி பேச வேண்டும் என்று நினைத்தபடி அவளிடமிருந்து சூட்கேஸை வாங்கிக் கொண்டார் அவர்.

அனைவரும் உள்ளே செல்ல - சாந்தாம்மாவும் மற்ற வேலையாட்களும், இருவரிடமும் உற்சாகத்துடன் நலம் விசாரித்தனர்.

குளித்து முடித்து 'டிபன்' சாப்பிட்ட பிறகு, ஆண்கள் ஹாலில் பேசிக் கொண்டிருந்தனர்.

பொங்கலுக்காக அவர்களுக்கு எடுத்து வைத்திருக்கும் புது உடைகளை காண்பிக்க ஆரம்பித்தார் ஜீவா.

அழகிய பட்டுச் சேலையையும், பட்டு வேட்டி - சட்டையையும் பார்த்தபோது, எதையோ இழந்த உணர்வு வர, சட்டென்று பொங்கி விட்டாள் அவள்.

''இதெல்லாம் எதுக்கும்மா? என்னோட நிம்மதியையும், சந்தோஷத்தையும் அழிச்சிட்டு...'' அடிக்குரலில் சீறினாள்.

உடனே, ஜீவாவின் முகம் சுருங்கி சிறுத்துப் போனது.

''ஏன்? என்னாச்சு சுபி? நீ நல்லாதானே இருக்கே? மாப்பிள்ளையும் உன்கிட்ட பிரியமாத்தானே இருக்காரு?'' பதைப்புடன் கேட்டார்.

''அவரு ஆசையாதான் இருக்காரு...! என்னாலதான் அப்படி இருக்க முடியலை. எல்லாத்துக்கும் காரணம் உங்க புருஷன்தான்!

''அவரு பண்ணின காரியம், என் மனசுல ஆழப் பதிஞ்சு - ஆண்களையே நம்ப முடியாம செஞ்சிடுச்சி!'' வார்த்தைகள் அனலாய் பரவின.

அதுவரை அமைதியாக இருந்த ஜீவாவை, அந்தச் சொற்கள் பெரிதாய் தாக்கின.

''சுபி! அப்பாவைப்பத்தி அநாவசியமாப் பேசாதே... உனக்கு எதுவும் தெரியாது.'' அழுத்தமான குரலில் அவர் எச்சரிக்க - ''எனக்கு என்ன தெரியாது? எல்லாமே தெரியும்! நீங்க வேணா ஒரு ஒழுக்கம் கெட்டவரை ஏத்துக்கலாம்... ஆனா என்னால அப்படி இயல்பா இருக்க முடியாது.''

அவள் முடித்த மறுகணமே அவர் கூறிய பதில், அங்கு பெரும் பிரளயத்தையே உருவாக்குவதாய்! சுபியின் இதயத்தை சில்லு சில்லாய் சிதறச் செய்வதாய்!

''இல்லை... நீ அவரை ஏத்துக்க வேணாம்! என்னால அப்படி முடியாது! ஏன்னா, தப்பான முறையில உன்னை கருத்தரிச்ச எனக்கு வாழ்க்கை குடுத்த தெய்வம் அவரு!

''என்ன உறவுன்னே புரியாம, நான் ஒருத்தரோடு வாழ்ந்துட்டிருந்தா, நீ அன்னிக்கு சொன்னியே... அது தப்பு!

''சொந்த வாரிசே இல்லைன்னாலும், எதுவுமே யோசிக்காம உனக்கு தன்னோட முதல் எழுத்தை பெருந்தன்மையோடு குடுத்தவரு அவரு!

''தன் மனைவியோட புறக்கணிப்பால் அவர் அன்புக்கு ஏங்கி நின்னப்ப, என்னைப் பாத்து, பரிதாபப்பட்டு, எனக்கு வாழ்க்கை தந்த தெய்வம் அவரு!



''இனி ஒருதரம் அவரைப் பத்தி தப்பா பேசினே... அப்புறம் பாரு!

''உனக்கு உண்மை தெரியக் கூடாதுன்னுதான், இத்தனை நாளா நீ பேசினதுக்கெல்லாம் நான் பொறுமையா இருந்தேன்...

''இன்னிக்கு உன் ரிஷிமூலத்தையும், என்னைப் பத்தின எல்லா உண்மைகளையும் சொல்றேன் கேளு...'' என்றபடி பேச ஆரம்பித்தார் அவர்.

உலகமே சுழல்வது போன்ற பெரும் படபடப்பும், மயக்கமுமாய் எதையும் நம்ப முடியாது அமர்ந்திருந்தவளின் விழிகளில் ஜனித்த ஒற்றை வேதனைத்துளி, சரம் சரமாய் மாறி அருவியாய் பெருக ஆரம்பித்தது.

'நான் ஒரு ஈனப்பிறவியா...? தவறான வழியில் ஜனித்த ஒரு கேவலமானவளா?'

பல கேள்விகள் உள்ளே எழ, இதயத்தை இறுகப் பிசைவது போல் ஒரு வலி எழுந்தது. நானே ஒரு சுய முகமில்லாதவளாக இருந்து கொண்டு மற்றவர்களை எப்படி கணித்திருக்கிறேன்!

'கடவுளே! நான் என்ன தவறு செய்தேன்? ஏன் எனக்கு இப்படிப்பட்ட ஒரு அதிர்ச்சியை அளித்தாய்? என்னை ஏன் படைத்தாய்?' அலைமேல் சருகாய் தத்தளித்தது நெஞ்சம்!

'இந்தப் பூமியில்... இப்படியொரு சுய முகமில்லாதவளாக... தந்தை பெயர் அறியாதவளாக... சாக்கடைப் புழுவாக நான் ஏன் ஜனித்தேன்!'

பல கேள்விகள் அவளை ஆட்டிப்படைக்க, உடலில் பெரும் வெப்பம் பரவி, மனதை எரிமலையாக்கியது.

நிசப்தத் துளிகளாய் மரித்துக் கொண்டிருந்த மணித்துளிகள், ஜீவாவின் குரலால் கலைந்தன.

அவர் மேலே பேச ஆரம்பிக்கும்போதே பெரும் விம்மலுடன் அழத் தொடங்கினாள் அவள்.

ஆனால், செவிகள் மட்டும் அவர் பேச்சிலேயே பதிந் திருந்தன.

இந்த நிமிடமே இறந்துவிடலாமா என்றிருந்தது... தன் ரிஷிமூலத்தை அறிந்த அதிர்ச்சியில் உடைந்து சிதறி இருந்தவளை, கடந்த காலத்திற்கு அழைத்துச் சென்றது ஜீவாவின் குரல்.



## 27

இருபத்து மூன்று ஆண்டுகள் பின்னோக்கிச் சென்ற பயணத்தில், பெரும் சோகங்களும், வேதனைகளுமே நிறைந்திருந்தன.

அப்போது ஜீவராணிக்கு பதினேழு வயது!

ஒரு தேவதையைப் போல் அம்சமாக அழகாக இருப் பாள்.

சிறு வயதிலேயே தாய் - தந்தையை இழந்துவிட்ட ஜீவராணியை மதுரையிலிருந்த அவளுடைய பெரியப்பா சந்துருதான் வளர்த்து வந்தார்.



முதலில் மறுத்த பெரியம்மா காமாட்சிக்கும் சம்பளம் இல்லாத ஒரு வேலைக்காரி கிடைத்தது பெரும் வசதி யாகிப் போயிற்று.

அப்போதுதான் அவர்களுடைய பெண் பத்மினிக்கு திருமணம் முடிவானது.

பத்தாவதுடன் படிப்பை நிறுத்திவிட்டு, ஜீவாவை வீட்டு வேலை செய்யப் பழக்கி இருந்தார் அவர்.

கல்யாணத்திற்கு முதல் நாள் இரவு அனைவருமே மண்டபத்தில் தங்கி இருந்தனர்.

அன்றுதான் ஜீவா தன் வாழ்வின் இருண்ட பக்கத்தை சந்தித்தாள்.

நள்ளிரவு குளியல் அறைக்கு செல்வதற்காக அவள் வெளியே வர அந்த நேரம் பார்த்து மின்சாரம் நின்று போனது.

அவள் திகைத்துப் போய் பயந்து தவிக்கும்போதே அந்தக் காரிருளில் ஒரு உருவம் அவளைக் கீழே தள்ளி சூறையாட ஆரம்பித்தது.

வாயில் சுருளாய் அடைக்கப்பட்ட துணியில் எண் ணெய் வாசம் வீச - அந்த மிருகத்தின் காமக் கொடூரத் திற்கும், கேவலமான இச்சைக்கும் பலியாகிப் போனது அந்தச் சிறு பிஞ்சு!

இந்த அதிர்ச்சியிலேயே அவள் மயக்கமாகிவிட, பிறகு கண் விழித்தபோது மின்சாரம் வந்திருந்தது.

விளக்குகள் 'பளிச்'சென்று ஒளி வீச, அலங்கோலமாய் கிடந்த அவளின் கோலமே, வாழ்க்கை இருளடைந்து போனதை உள்ளுக்குள் உணர்த்துவதாய்!

உடல் வலியும், ரணமாய் தாக்கிய அயர்ச்சியும் - அவளுக்குள் சம்மட்டி அடியாய்!

நடந்தது என்னவென்று சரியாக உணர முடியவில்லை என்றாலும் தனக்கு பெரும் தீங்கு இழைக்கப்பட்டிருப்பதை புரிந்து, தனக்குள்ளேயே கூசி புழுவாய் சுருங்கிப் போனாள். பிறகு வந்த நாட்களிலும் அவள் உயிர்ப்பைத் தொலைத்து இறுகியிருந்தாள்.

ஐந்தே மாதங்களில் பெருக்கத் தொடங்கிய வயிறு, அவள் கர்ப்பமாக இருப்பதை உறுதிப்படுத்தியது.

சந்தருவும், காமாட்சியும் விஷயம் அறிந்து பெரிதும் அதிர்ந்து போயினர்.

அவளை அசிங்கமானவளாக ஏசி, வீட்டை விட்டே துரத்தினர்.

தவறு செய்யாமலே... தண்டனையை சுமந்தது அந்த வெள்ளை புறா!

அப்படி வீட்டை விட்டு வெளியே வந்து அநாதையாய் நின்ற வேளையில்தான் அவளுக்கு அந்த எண்ணம் தோன்றியது.

என்ன செய்வதென்று புரியாத நிலையில், தன் உயிரை மாய்த்து கொள்ள முடிவு செய்தாள் அவள்.

மதுரை - தூத்துக்குடி நெடுஞ்சாலைக்குச் சென்றவள் - அந்த போக்குவரத்தையும், விரையும் வாகனங்களையும் பார்த்ததும் உறுதியாக முடிவெடுத்தாள்.

தூரமாய் ஒரு கார் வருவது தெரிய, இறுகக் கண்மூடி செவிகளை மட்டும் கூர்தீட்டி நின்றாள்.



சப்தம் அருகில் வந்ததும், ஒரு முடிவுடன் காரின் முன்னே அவள் பாய - அந்தக் காரைப் பதற்றத்துடன் நிறுத்தினார் தணிகாசலம்!

பிறகு ஓடிவந்து பார்த்தபோது, லேசான அடியே இருந்தாலும் மயங்கிக் கிடந்தாள் அவள்.

உடனே தன் காரில் பின் இருக்கையில் அவளைத் தூக்கிக் கிடத்தியவர்,உடனே மதுரையில் உள்ள தன் நண்பனின் மருத்துவமனைக்குச் சென்றார்.

அங்கு சென்ற பிறகுதான் அவள் கர்ப்பமாகி இருப்பதே தெரிந்தது.

மயக்கம் தெளிந்ததுமே 'ஓ'வென்று அழ ஆரம்பித்தாள் அவள்.

'என்னை ஏன் காப்பாத்தினீங்க? நான் பாவி! எனக்குன்னு யாருமே இல்லை. என்னை சாக விடுங்க...''

முகத்தில் அறைந்து அழ ஆரம்பித்தவளை சமாதானப் படுத்தினார் தணிகாசலம்.

''இதோ பாரும்மா... உன் பேரு என்ன? நீ யாருன்னு கூட எனக்குத் தெரியாது! ஆனா, நீ செய்ய முயற்சி பண்ணின காரியம் தப்புன்னு மட்டும் என்னால சொல்ல முடியும்!

''அதோட உன்னையும் அழிச்சிட்டு வயித்துல இருக்கற குழந்தையையும் சாகடிக்கப் பாத்தியே... இதுவும் ஒரு வகையில் கொலைதானே!

''குழந்தைங்கல்லாம் இந்தப் பூமியை அர்த்தமுள்ளதா மாத்த வர்ற இனிய கவிதைகள் மாதிரியானவங்க! கடவுள் குடுத்த உயிரை அழிச்சிக்கற உரிமை நமக்கு இல்லைம்மா...!'' கனிவுடன் கூறினார் அவர்.

உடனே அவரைக் கையெடுத்துக் கும்பிட்டவள், ''ஐயா! உங்களுக்குப் புண்ணியமாப் போகட்டும்... எனக்குன்னு யாருமே இல்லை... என்னை சாக விடுங்க! இந்தக் குழந்தை யாரோடதுன்னு கூட எனக்குத் தெரியாது...''

அவள் கூறியதுமே பெரிதும் அதிர்ந்து போனார் அவர்.

''நீ என்னம்மா சொல்றே?'' பதறிப் போய் கேட்டார்.

''ஆமாங்கய்யா! ஒரு நாள் ராத்திரி...'' திக்கித் திணறி குற்றக் குறுகுறுப்பும், அருவருப்புமாய் அவள் தன்னுடைய வாழ்க்கையின் இருண்ட காலத்தைப் பற்றிக் கூற, தணிகாசலம் உடைந்து போனார்.

அந்தப் பாவப்பட்ட பெண்ணின் முகம் அவருக்குள் பெரும் சஞ்சலத்தைத் தூண்டுவதாய் ஆனது.

ஏதோ ஒரு இனம் புரியா உணர்வு வந்து அவளை எப்படியாவது காப்பாற்ற வேண்டுமென்ற வெறியை ஏற்படுத்தியது.

உடனே மனதிற்குள் ஒரு முடிவு வந்தது.

''உனக்குன்னு யாருமே இல்லைங்கிறதுதானே உன் கவலை! உனக்கு நான் இருக்கேம்மா! இந்தக் குழந்தையை... என் குழந்தையா நான் ஏத்துக்கறேன்!'' சட்டென்று கூறிவிட்டார்.

மறுகணமே அவளுக்குள் ஏதோ ஒன்று புஷ்பித்தாலும், நெஞ்சம் உடனே சருகாய் வாடியது.

''வேண்டாம்! யாரோ செஞ்ச தப்புக்கு நீங்க ஏன் பாவம்... தண்டனை சுமக்கணும்!'' உறுதியுடன் மறுத்தாள்.



உள் மனதில்... தனக்கென்று ஒருவர் தன்னை ஆறுதல் படுத்தவாவது ஏற்றுக் கொள்கிறேன் என்று கூறுபவர் இருக்கிற நிலை, பெரும் பலம் தந்தது.

''இல்லைம்மா! நான் முடிவெடுத்துட்டேன்... பிறக்கப் போறது என்ன குழந்தையா இருந்தாலும் அது என்னுடைய குழந்தை! எனக்கும் கல்யாணமாகி ஒரு மகன் இருக்கான்!''

அவர் முடிப்பதற்குள் விதிர்த்துப் போய் நிமிர்ந்தாள் அவள். ''என்னைத் தப்பா நினைக்காதே! என் மனைவி ராட்சஷி! நானும், அவளும் சேர்ந்து வாழ்ந்து அஞ்சு வருஷத்துக்கு மேல ஆச்சு!

''என் பையனுக்கு இப்ப நாலரை வயசு! எனக்கும் ஒரு துணை வேணும்! அது நீயா இருந்தா நான் சந்தோஷப்படுவேன்... உனக்கு விருப்பம்னா இந்த மோதிரத்தை நீ போட்டுக்கலாம்!''

என்றபடி தன் கையில் கிடந்த மோதிரத்தை கழட்டி அருகிலிருந்த மேசையின் மேல் வைத்தார்.

இரண்டு நாட்கள் கழித்து மருத்துவமனையிலிருந்து கிளம்பும் வரை, அந்த மோதிரம் கேட்பாரற்று அநாதையாய் மேசையிலேயே இருந்தது.

ஜீவாவிற்கு முழுதாய் ஐம்பது மணி நேரங்கள் தேவைப்பட்டன. தன் முடிவை மாற்றிக் கொள்ள!

தனக்கென்று ஒருவருமே இல்லாத தருணத்தில் தன்னையும், தன் வயிற்று சிசுவையும் காப்பாற்றி கரை சேர்க்க நினைக்கிற அந்த நல்ல மனிதரை ஏமாற்ற, மனம் வரவில்லை.

இதை ஒரு இழிநிலை என்று மனம் இடித்துரைத்தாலும், அவளுக்கு வேறுவழி தெரியவில்லை!

ஒரு முடிவுடன் அந்த மோதிரத்தை எடுத்து அணிந்து கொண்டாள்.

தணிகாசலம் அவளை 'டிஸ்சார்ஜ்' செய்து மருத்துவமனையில் இருந்து அழைத்துச் செல்வதற்காக காருடன் வந்திருந்தார்.

அப்போதுதான் கவனித்தார். மேசையின் வெறுமையையும், ஜீவாவின் கரத்திலிருந்த அந்த மோதிரத்தின் மூலமாக அவளது ஒப்புதலையும்!

பிறகு அவளுக்கு பிரசவமாகும் வரை ஒரு தாயுமானவனாய் அவரைத் தாங்கியது அவர்தான்!

சுபந்தினிக்கு பெயர் வைத்து - தொட்டில் போட்டு - நகைகள் செய்து சீராட்டி இருவருமாக வளர்க்க ஆரம்பித்த போதுதான், தன்னை அவரிடம் ஒப்படைத்தாள் ஜீவராணி!

தங்களுடைய உறவு தவறு என்பதை இருவருமே உணர்ந்திருந்தாலும் சந்தர்ப்ப சூழ்நிலைகளும், இளமை உணர்வுகளும் இருவருக்குமே சாதகமாய்!

ஒரு நீண்ட பெருமூச்சுடன் ஜீவராணி முடிக்க அவள் முகத்தில் வேனுமில்லை... அசைவுமில்லை!

நெஞ்சமே, வெந்நீர் ஊற்றாய் கொதித்துக் கொண்டிருந்தது.

இந்த அவல நிலைக்கு, அன்றே... கருவிலேயே அவர் தன்னை சிதைத்திருக்கலாம் என்று தோன்றியது.





# 28

புயலிலும், சுனாமியிலும் சிக்கி சிதைந்த உணர்வில் இருந்தவளின் இருதயம் உலைக்களமாக மாறி இருந்தது.

இதை அறிந்தால் விஷாக் தன்னைப் பற்றி என்ன நினைப்பான்... ஒருவேளை வெறுத்து விடுவானோ என்ற பயமும், விதிர்ப்பும் தான் முதலில் வந்தன.

தணிகாசலத்தின் மேல் முதன்முதலாக பெரும் மதிப்பும், மரியாதையும் ஊற்றெடுக்க - தன்னுடைய தவறான கணிப்பின் அளவு, இமயமாய் உயர்ந்து தெரிந்தது.

எவ்வளவு உயர்ந்தவராக, மனித நேயம் மிக்கவராக இருந்திருந்தால், பாதிக்கப்பட்ட ஒரு பெண்ணுக்கு மறு வாழ்வையும், தந்தை பெயர் தெரியாத ஒரு அநாதைக்கு தன் முதலெழுத்தையும் தந்திருப்பார் என்ற எண்ணம் பிரமிப்பையும் மலைப்பையும் தந்தன.

அப்படியே கவிழ்ந்து அழ ஆரம்பித்தவளை ஜீவா மெதுவாக வருடி சமாதானப்படுத்தி தேற்றினார்.

வெகுநேரம் கழித்து எழுந்தவள், ''எனக்கு... அப்பாவை... அவர் கூடக் கொஞ்சம் பேசணும்!'' என்றாள் குற்ற உணர்ச்சியுடன்!

''நீ பேசாம படுத்திரு! அப்பாவை இப்பவே போய் அனுப்புறேன்'' என்றபடி எழுந்து வெளியே சென்றார் ஜீவா.

சிறிது நேரத்தில் தணிகாசலம் பதைப்பும், பரபரப்புமாக உள்ளே வர அதற்கு மேல் தாங்க முடியாமல் ‘அப்பா..’ என்று அலறியபடி ஓடிச் சென்று அவரை அணைத்துக் கொண்டாள் சுபி!

அவளுடைய பாசமழையில் அவர் நெகிழ்ந்துபோக... அவள் மன்னிப்பு கேட்க... அவரும் ஒரு குழந்தையைப் போல் அவளை ஆறுதல்படுத்த... தொடர்ந்த நிமிடங்கள் மிகவும் அர்த்தம் நிறைந்ததாய்!

எல்லாவற்றையும் பார்த்திருந்த ஜீவாவின் கண் களிலோ, ஆனந்த அருவியாய் கண்ணீர்ச் சரங்கள்!

வெகுநேரம் கழித்து நிமிர்ந்தவள், ‘‘அப்பா! என்னை மன்னிச்சிடுங்கன்னு சொல்லக் கூசுது! உங்களைப் பத்தி எவ்வளவு தப்பா பேசினேன். கடைசியில என் பிறப்பே தப்பா இருந்திருக்கு...

‘‘எனக்குள்ளேயே புழுவா கூசி சிறுத்து அருவறுத்துப் போயிட்டேன்... உங்க மகளா என்னை ஏத்துக்கிட்டதுக்கு ரொம்ப நன்றிப்பா! உங்களுக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போறேன்?

‘‘அநாதையா நின்னுருக்க வேண்டிய எனக்கு ஒரு நல்ல வாழ்க்கையையும், அப்பா என்ற ஒரு உன்னத உறவையும் பிச்சையாப் போட்டிருக்கீங்க! அதைப் புரிஞ்சிக்காம நான் உங்களை எவ்வளவு கேவலமா பேசியிருக்கேன்!

‘‘எனக்கு என்ன அருகதை இருக்கு... உங்களைப் பத்தி விமர்சிக்க? இதுவரைக்கும் நான் உங்களை ரொம்பக் காயப்படுத்திட்டேன்! அதுக்கு நீங்க என்ன தண்டனை தந்தாலும் ஏத்துக்கறேன்!’’

உடனே அவளை வாஞ்சையுடன் அணைத்தவர், ‘‘நீ என் குழந்தைடா! பெண் குழந்தைக்காக ஏங்கியிருந்த என் மனசுக்கு வரமா வந்தவ நீ! குழந்தை ஓடிவந்து நெஞ்சில ஏறி மிதிச்சா அதுக்காக வெறுக்கவா செய்யறோம்! அது மாதிரிதான்டா இதுவும்!’’ ஆறுதலாகக் கூறினார்.



‘‘நன்றிப்பா! இந்த உண்மை... விஷாக்குக்கு தெரிய வேண்டாம்! இப்பதான் நான் அவரை நேசிக்கவே ஆரம் பிச்சிருக்கேன்... அவர் என்னை வெறுத்துட்டா என்னால அதைத் தாங்கவே முடியாது!’’ குமுறலுடன் மறுகினாள்.

அவளுடைய முகத்தை அப்படியே கைகளில் ஏந்தியவர், ‘‘இந்த விஷயம் மாப்பிள்ளைக்கு முன்னாடியே தெரியும்மா! அவர்கிட்டே ஏற்கெனவே சொல்லியாச்சு! தெரிஞ்சுதான் அவரு உன்னை ஏத்துக்கிட்டாரு!’’ என்றார், மென்மையாக!

அவருடைய வார்த்தைகள் இதயத்தில் பன்னீர்தூவ, அவளால் நம்பவே முடியவில்லை.

‘‘அம்மா... இது நிஜமா?’’ தாயிடம் திரும்பிக் கேட்டாள்.

அவருடைய ஒற்றைத் தலையசைப்பு அதை ஆமோதித்து உறுதி செய்ய, இதுவரை அவனுக்கு தான் இழைத்த கொடுமையின் அளவு புரிந்தது!

இவ்வளவு பெரிய விஷயம் தெரிந்து அவனே பெருந் தன்மையுடன் ஏற்றிருக்க - தான் அவனைப் புறக் கணித்ததும், விலக்கி நிறுத்தியதும், அவனிடம் நம்பிக் கையின்றி வார்த்தைப் போர் நடத்தியதும் பெரும் வலி யாய் பரவின.

இதற்கெல்லாம் அவன் தன்னை மன்னிப்பானா? இதயபூர்வமாக மனைவியாக ஏற்றுக் கொள்வானா? என்ற அலைப்புறுத்தலும், ஏக்கமும், பயமும் உள்ளே உலவின.

திடீரென்று தணிகாசலத்தின் குரல் அவளைக் கலைத்தது.

''சுபி! நேசிக்கறதுங்கறதுக்கு அர்த்தமே ஒருத்தர் மத்தவங்களுக்காக நிறைய விட்டுத்தர்றதும்... தன் இணைக்காக தன்னையே மாத்திக்கிறதும்.. சுயநல மில்லாம அன்பு செலுத்தறதும்... வாழ்க்கைத் துணை யோட உறவுகளைத் தன் உறவா ஏத்துக்கிறதும்தான்!

''அதை நீ புரிஞ்சிக்கணும் சுபி... மாப்பிள்ளை ரொம்ப நல்லவரும்மா! உன்னைப் பத்தி தெரிஞ்ச உடனே, இன்னும் அதிகமா நேசிக்க ஆரம்பிச்சிட்டதாகவும், உன்னைக் கண்கலங்காம பாத்துக்கறேன்னும் உடனே எனக்கு வாக்குக் குடுத்தாரு!

''எல்லாருமே நல்லவங்கதாம்மா! சில பேர் சந்தர்ப்ப வசத்தாலே என்னை மாதிரி தவறு செஞ்சிடுறாங்க... ஆனா, அதை உணர்ந்து திருந்தினவங்களை மன்னிக் கிறது தான் நல்ல மனசுக்கு அடையாளம்!

''நீ ஒரு தப்பான கணிப்பிலே இருந்தே... இப்ப எல் லாமே தெளிஞ்சிடுச்சி! மாப்பிள்ளையோட மனசைப் பத்தி எனக்கு நல்லாத் தெரியும்... ஆனா, நீயும் தெரிஞ் சிக்கணுமில்லையா?

''இப்பவே நான் போய் மாப்பிள்ளையையே அனுப் புறேன்... அவர்கிட்டயே கேட்டுத் தெரிஞ்சிக்க'' என்ற படி இருவரும் வெளியேறினர்.

தொடர்ந்த நிமிடங்கள் அவளின் பயத்தையும், தைரியத்தையும் பலமாகச் சூறையாடுவதாய் இருந்தது.

சிறிது நேரம் கழித்து கதவு மூடப்படும் சப்தம் கேட்டு -ஈரம் கசிந்த விழிகளுடன் நிமிர்ந்தவளை, இருகரம் நீட்டி நின்றிருந்த அவனுடைய கம்பீர உருவமே எதிர்கொண்டது.

விளக்கு நோக்கி ஈர்க்கப்படுகின்ற விட்டிலாய் அவள்!



ஒரு ஆணுக்குள் இத்தனை காந்தமா... மனம் உருக - மாற்றுக்கருத்தின்றி, மறுநொடியே ஓடிச் சென்று அவ ளுக்கே உரிமையுள்ள... அவளுக்கான அந்த இடத்தில் சரணடைந்தாள் சுபி.



# 29

வெகு நேரம்... அங்கு வார்த்தைகள் பயனற்று போக - நேச உணர்வுகளின் நிசப்த ஊர்வலம்!

அவளைத் தனக்குள்ளேயே புதைத்துக் கொள்ளும் வேகத்துடன், தழுவி அவன் ஆறுதல்படுத்த அவளும் தன் கடந்த கால சோகங்களை எல்லாம் அவனுடைய பிரியத்தில் கரைத்துக் கொண்டிருந்தாள்.

திடீரென்று ஒலித்த சுவர்கடிகாரத்தின் ''குக்கூ...'' ஒலியில் கலைந்து நிமிர்ந்தவள் ''உங்களை... இத்தனை நாள் புரிஞ்சிக்காம... உங்க மேல நம்பிக்கை இல்லாம... நோகடிச்சதுக்கு என்னை மன்னிப்பீங்களா? என்னைப் பத்தித் தெரிஞ்சும் எப்படி?'' சஞ்சலமும், தர்மசங்கடமு மாகக் கேட்டாள்.

''ம்! மன்னிப்பா...? உன்மேல நான் கோபப்பட்டுத் தப்பா நினைச்சிருந்தாத்தானே மன்னிக்கறதுக்கு? ஒரே ஒரு செல்லக்கோபம் தான்! நீ என்னைத் தவிர

எல்லார்கிட்டயும் ஒட்டிக்கிட்டே... அதுமட்டும்தான் ஓரத்துல உறுத்திச்சி...

''எனக்கு உன்னை ரொம்பப் பிடிச்சிருந்தது சுபி! பார்த்த முதல்கணமே, என் துணை நீதான்னு நான் முடிவு பண்ணி இருந்தேன். நீதான், என் விருப்பத்தை சொன்னவுடனே விலகிப் போனே!

''அதை மறக்கத் தான் நான் தூத்துக்குடிக்கே வந்தேன்! வந்த இடத்தில திரும்பவும் புதையலாட்டம் நீயே கிடைச்சே! எந்தக் காரணத்துக்காகவும் திரும்பவும் நான் உன்னை இழக்க விரும்பலை!

''உன் ரிஷிமூலம் என்னைப் பெரிசா பாதிக்கலை! யாரோ செஞ்ச ஒரு தவறுக்கு நீ எப்படி பொறுப்பாளியாக முடியும்?

''வெண்சாமரம் வீசி வணங்கும்போது, அது ஒரு விலங்கோட ரோமம்னு தோணுதா என்ன?

''மண்ணுக்குள்ளே தான் கிடைக்குதுன்னாலும் வைரத்தை யாராவது வேண்டாம்பாங்களா? இல்லை... அதோட மூலாதாரத்தை ஆராய்ஞ்சிட்டு இருப்பாங்களா?

''பறவைகளோட எச்சம் வழியா வந்த ஒருவிதை கூட முளைச்சி, தெய்வாம்சம் நிறைஞ்ச கோவில் மரமாகலாம்!

''எனக்கு அதெல்லாம் தேவையில்லை! நீ, உன் அருகாமை, கடைசி வரைக்குமான உன்னோட பிரியம் இதைத்தான் நான் எதிர்பார்த்தேன். உன்னை மாத்திட முடியும்கிற நம்பிக்கை மனசில ஆழமா இருந்தது.

''அதான் இப்பவும் என்னை ஜெயிக்க வெச்சிருக்கு... வாழ்க்கையோட அஸ்திவாரமே பூரண நம்பிக்கையும்



பரஸ்பரம் புரிதலும், விட்டுக் கொடுத்துப் போறதும் தானே? எனக்கு அந்த ஆத்ம பலத்தை தந்ததே... உன்மேல நான் கொண்டிருந்த மாறாத அந்த நேசம் தான்!''

அவன் ஆழ்ந்த குரலில் உணர்ச்சிப்பூர்வமாக முடித்த போது அந்த தேறுதல் வார்த்தையைக் கேட்டபடியே - அந்தக்கணமே அவன் மடியில் இறுதி மூச்சை விட்டுவிட வேண்டுமென்ற வேட்கை அவளுள் வந்தது.



## 30

வண்ணக் கோலங்களாய் தன் வாழ்க்கையை நிறம் மாற்றியவனை... புண்பட்ட மனதை, தன் பெருந்தன்மை எனும் மாயக்கரம் கொண்டு வருடியவனை... தனது நேச வருகைக்காய் மனம் முழுவதும் பூத்துக் காத்திருந்த அந்தப் பொறுமையை... சிதைந்து உடைந்து சிதறி யிருந்த தன் இதயத்தை... நேசமென்ற ஒற்றை வார்த்தை யால் ஒன்று திரட்டி பலம் பொருந்தியதாய் மாற்றியவனை விழி விரித்து ஆவலுடன் நோக்கினாள் அவள்.

அப்படியே அந்த விழிகளுக்குள் கசிந்த உணர்வுகளில் மூழ்கி, காதல் எனும் முத்தெடுத்து பல பிறவிகள் இணைந்து வாழும் வரம் தேடியது அவன் நெஞ்சம்!

அந்தப் பார்வையின் தடங்கள்... உள்ளுக்குள் பயணித்து இதயம் தீண்ட, அந்த அற்புத உணர்வே அவளை சிலிர்க்கச் செய்தது.

புலன்கள் விழித்து வேகமாய் தரைதட்ட, தான் அவனைப் புறக்கணித்து - சொற்களால் புறம் தள்ளிய தருணங்கள் மூர்க்கமாய் உட்புகுந்தன.

மறுகணமே நிமிர்ந்தவள், ''அன்னிக்கு... சுதாகர் கிட்டே பேசிட்டு வந்தப்புறம் நான் உங்களை ரொம்ப நோகடிச்சிட்டேன் இல்லே... சாரி! எனக்குள்ளே இருந்த கசப்பான அனுபவங்களாலே என்னால யாரையுமே... அதுவும் ஆண்களை நம்பவே முடியலை!'' குற்றவுணர்வுடன் முடித்தாள்.

''நான் கொஞ்சம் கோபக்காரன்... முரட்டுத்தனமானவனும் கூட! ஆனா, உன்னைப் பார்த்ததிலிருந்து கொஞ்சம் மென்மையா மாறிப் போனேன் என்பது தான் உண்மை!

''ஆனா, அப்புறம் புரிஞ்சுது... நேசிக்கத் தெரிஞ்ச எல்லா மனசுலயும் கனிவு, ஈரம், பிரியம் எல்லாமே நிறைஞ்சிடும்கிறது!

''அன்னிக்கு... உன் பேச்சால் எனக்குள்ளே ரொம்ப வருத்தமும், விரக்தியும் தான் வந்தன. அது முதல் தான் உன்கிட்ட இருந்து விலகியே இருந்தேன்... இப்போ பழசெல்லாம் எதுக்கு?

''அப்ப உன் மனசுல தேவையில்லாத பயம், சஞ்சலங்கள், வெறுப்பு எல்லாமே நிறைஞ்சிருந்தது... இன்னிக்கு அதெல்லாம் கரைஞ்சு காணாமப் போய் நிர்மலமா மாறிட்டியே... அது போதும் எனக்கு!''



''போகி அன்னிக்கு பழையதை எல்லாம் கொளுத்திடணும்பாங்க... உன் மனசும் அப்படித்தான்... மனசுக்குள்ளே இருந்த தேவையில்லாத சந்தேகக் குப்பையை எல்லாம் எரிச்சி புடம் போட்டு உன்னை ஒரு மாசறு பொன்னா மாத்தி இருக்கே!''

குறும்புடன் கூறிவிட்டு அவன் கண் சிமிட்டிய போது, ''ம்... என்னைவிட என்னைப் பத்தி நல்லாத் தெரிஞ்சு வெச்சிருக்கீங்க நீங்க... ஆனா!'' சட்டென்று நிறுத்தினாள்.

''ஆனா...?''

அவளிடமிருந்து வாய் வார்த்தையாக பதில் வராமல், விழிகள் மட்டும் நாணக் கவிதை கூற - கண் ஓரங்கள் ரகசிய சிரிப்பில், சுருங்க, முறுவலித்தான் அவன்.

''அம்மாகிட்டே முதல்லே 'போன்' பண்ணி சொல்லணும்... தேன்நிலவை முடிச்சிட்டுத்தான் ஊருக்கு வருவேன்னு...!''

''அப்புறம்...?''

''ம்... எல்லாக் கருத்து வேறுபாட்டையும் சரி பண்ணிட்டு, ரெண்டு பேரும் சந்தோஷமா சேர்ந்து வாழ்ந்து பேரப் பசங்களை தரணும் மாப்பிள்ளைன்னு வாழ்த்தி அனுப்பின உங்க அப்பா சொல்லைத் தட்டாம நடந்துக்கணும்!''

''ம்... அப்புறம்?''

''முதல் இரவுன்னுதானே சொல்வாங்கன்னு விட்டுடாதே... முதல் பகல் கூட உண்டு... அனுபவி! உங்களை யாரும் தொந்தரவு பண்ணமாட்டோம்னு ஆலோசனை சொன்ன என் மணியோட வார்த்தைக்கு முதல்லே மதிப்பு தரணும்!''

அவன் குறுஞ்சிரிப்புடன் ஏக்கம் சுமந்த விழிகளுடன் கூறவும், அவள் முகம் செம்பருத்தியாய் சிவந்தது.

''ச்சீய்...'' முகம் பொத்தி சீண்டலாக முணுமுணுத்தாள் அவள்.

''ம்... எனக்கு ஒரு சந்தேகம் இருந்தது... உன் அனுமதி தேவைப்பட்டது...

''இப்போ அது கிடைச்சாச்சு! உன் மனசுக்குள்ளே நான் புகுந்து அசையாம உக்காந்திட்டதை உன் பார்வையே சொல்லிடுச்சு!'' என்றபடி அவள் முகத்தாமரையை நோக்கிக் குனிந்தான்.

உச்சி வானில் சூரியன் தன் நெருப்புக் கதிர்களால் பூமியை வெப்பமாக்கிக் கொண்டிருந்தான்.

எங்கோ ஒலித்த உச்சி காலப்பூஜைக்கான கோவில் மணியின் ரீங்காரம்... மெல்லத் தேய்ந்து மறைய ஆரம் பித்தது.

அந்தச் சலனங்களற்ற மதிய நேரத்தில், சந்தோஷச் சலங்கைகளின் சிறகடிப்பாய் கண்ணாடி வளையல்களின் சப்த அணிவகுப்பு... சுவர்க்கடிகாரத்தின் இசையுடன் கைகோர்த்தது.